Registered as a Newspaper

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
207, Power House Road,
JAFFNA.


# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 3-50


நிதித்துறையில் நாணயம் மிக்க நண்பன்
ஷப்ரு
207, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

மலர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸூ ஐப்பசி மீ 6 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ற. அவ்வல் பிறை 10 (22-10-1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:33

வடக்கு, கிழக்கு மாவட்டங்களில்

# நிலைமை சீரடைந்தாலேயே இந்திய படை வாபஸாகும்

## ஐ. தே. கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம்பெறும் முக்கிய அறிவிப்பு இது

கொழும்பு, அக்டோபர் 22

✶ வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் வழமையான நிலைமை திரும்பும் பட்சத்தில் இந்தியப் படை அங்கிருந்து வாபஸ் பெறப்படும்.

✶ ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் திரு, ஆர். பிரேமதாஸா வெற்றிபெற்ருல் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் அவர் நேரடியாக – பகிரங்கமாகப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

✶ ரஷ்ய – இந்திய நட்புறவு ஒப்பந்தத்தைப் போல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நட்புறவு ஒப்பந்தம்ஒன்று செய்து கொள்ளப்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இடம் பெறும் முக்கிய மூன்று விடயங்கள் இவையாகும்.

நேற்றுக் காலை கொழும்பு ஸ்ரீகோதாவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் திரு ரஞ்சன் விஜேரத்ன தேர்தல் விஞ்ஞாபனம் பற்றிய அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிவிப்பில் பிரஸ்தாபிக்கப்பட்ட முக்கிய மூன்று விடயங்களே இவையாகும்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;—

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் மூலம் விளைந்துள்ள ஆக்கபூர்வமான சாதனைகளை பேச்சுக்கள் மூலமும் கொண்டு, கொடுத்து செயல்படுவதன் மூலமும் வளர்க்க முயற்சி எடுக்கப்படும்.

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் சட்டம்.ஒழுங்கு அமைதியை நிலைநாட்ட இந்தியாவின் உதவியைப்பெறுவதற்காகவே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இதனால் இந்தியாவுடனான உறவுகள் வலுப்பெற்றிருக்கின்றன.

இப் பகுதியின் அரசி (6 ஆம் பக்கம் பார்க்க)

## கைதிகளின் விடுதலைக்கு போராட கைஸ் முடிவு

யாழ்ப்பாணம் அக் 22

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக தமிழ்ப் பிரதேசம் முழுவதும் பல்வேறு போராட்டங்களை நடத்த மாணவர் இளைஞர் பொது மன்றம் (கைஸ்) முடிவு செய்துள்ளது.

கைதிகள் விடுதலைக்காக பிரசைகள் குழுக்கள், அன்னையர் முன்னணி, மாணவர் ஒருங்கிணைப்புச் குழுக்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்கள் அனைத்தையும் ஒன்றிணைந்து இதற்காக குரல் கொடுக்குமாறும் கைஸ் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக கைஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ள (6 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதப் போர் நேற்று ஆரம்பமானது

யாழ்ப்பாணம், அக் 22

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளை விடுதலை செய்யக்கோரி நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்றலில் சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டம் நேற்று ஆரம்பமானது.

பூஸாவிலிருந்து விடுவிக்கப்பட்ட கைதிகளும், கைதிகளின்பெற்ருேரும், பொதுமக்களும் பிரசைகள் குழு உறுப்பினர்களும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். (உ-5)

விடுதலைக்காகப் போராடி வரும்

## கைதிகளின் முயற்சிக்கு ஆதரவு நல்குங்கள்!

### இணைப்புக்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், அக் 22

தடுப்பு முகாம்களில் போராட்டத்தை ஆரம்பித்திருக்கும்தமிழ்பேசும் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக பொது மக்களும், பொதுஸ்தாபனங்களும் தம்மால் வழங்கக்கூடிய பங்களிப்பை வழங்கவேண்டும்.

மேலும் கைதிகளின் விடுதலை விடயத்தில் அவர்கள் இலங்கை இந்திய அரசுகளுக்கு நெருக்குதல்களையும் ஏற் (6 ஆம் பக்கம் பார்க்க)

அக்டோபரில் உயிரிழந்தோருக்கு

## அஞ்சலி செலுத்தி யாழ் நகரில் பேரணி

யாழ்ப்பாணம், அக், 22

கடந்த வருடம் அக்டோபர் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நேற்றுமாலை யாழ். நகரில் பேரணி ஒன்று நடைபெற்றது: பலநூற்றுக்கணக்கானோர் இப் பேரணியில் பங்குபற்றினர்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களால் இந்தப்பேரணி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

நேற்றுமாலை 4.30மணியளவில் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணி பலாலி வீதிவழியாக யாழ் ஆஸ்பத்திரியைச் சென்றடைந்தது.

அங்கு பேரணி முடிவில் ஆராதனை நிகழ்ச்சி ஒன்று இடம்பெற்றது.

பேரணியாகச் சென்ற மாணவர்களின் இரு மருங்கிலும் அமைதிப் படையினர் அணிவகுத்துச் சென்றனர். [இ 5]

## யாழ் ஆஸ்பத்திரியில் நினைவுத்தூபி அடிக்கல்

யாழ்ப்பாணம், அக் 22

கடந்த அக்டோபரில் இடம்பெற்ற அனர்த்தங்களின் போது யாழ். ஆஸ்பத்திரியில் உயிரிழந்த ஆஸ்பத்திரி ஊழியர்களின் நினைவாக நிறுவப்படவிருக்கும் நினைவுத் தூபியின் அடிக்கல் நடும் நிகழ்ச்சி நேற்றுயாழ் ஆஸ்பத்திரியில் நடைபெற்றது.

கடந்த அக்டோபரில் பிரஸ்தாப ஊழியர்கள் மரணமானதாகக் கருதப்படும் அதே நேரமான பிற்பகல் 4.15 க்கு இந் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் (6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். பல்கலைக்கழகத்தை புனரமைக்க ரூபா 2 கோடி

### ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தகவல்

யாழ்ப்பாணம் அக் 22

யாழ். பல்கலைக்கழக கட்டடங்களை புனரமைப்புச் செய்வதற்கு 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

கடந்த வருடம் அக்டோபரில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின்போது சேதமுற்ற கட்டடங்களைப் புனரமைப்புச் செய்வதற்கு ஏற்படக்கூடிய செலவினங்கள் குறித்து புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சிற்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழக நிர்வாகம் சமர்ப்பித்த இந்த அறிக்கையை அடுத்து புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சு 2 கோடி ரூபாவை ஒதுக்கியிருக்கிறது. (உ-5)

### சுபநேரம்

22 - 10 - 1988
ஐப்பசி – 06
சனிக்கிழமை
சுபநேரம்:-
03-02முதல் 04-32வரை
ராகுகாலம்:-
09-02முதல் 10-32வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
சனிப்பிரதோஷ விரதம்

## சத்தியப்பிரமாணம் செய்ய ரொனி முடிவு

கொழும்பு, அக் 22

இம்மாதம் 25 ஆம் திகதி புளத்சிங்கள எம். பியாக விசுவாசப்பிரமாணம் எடுக்கப்போவதாக திரு. ரொனி டி மெல் சபாநாயகருக்கு அறிவித்திருக்கிறார்.

சபாநாயகருக்கு இது சம்பந்தமாக திரு டி மெல் கடிதம் எழுதியிருக்கிறார்.

அரசமைப்பின் 161 ஆவது ஷரத்து வழங்கிய அதிகாரத்தைப் பயன்படுத்தி தேர்தல் ஆணையாளர் என்னை புளத்சிங்கள எம். பியாக நியமனஞ் செய்து இருக்கின்றார். நான் எம்.பியாகப் பதவிப்பிரமாணம் செய்ய அனுமதிக்கப்படுவேனா? இல்லாவிடில் (6 ஆம் பக்கம் பார்க்க]

## ரொனி வீட்டில் கொள்ளை

கீக்கியான கந்தவில் உள்ள முன்னாள் நிதி அமைச்சர் ரொனி டி மெல்லின் வீட்டினுள் கடந்த திங்கள் இரவு ஆயுதம் தரித்த இனந் தெரியாதவர்கள் புகுந்து தாக்குதல் நடத்தினர்.

அங்கிருந்த பொருள்களை அவர்கள் கொள்ளையிட்டனர்.

இச் சம்பவம் பற்றி அத்தனகல்ல எம். பி லக்ஷ்மன் ஜெயக்கொடி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபித்தார்.

'பச்சைப்புலிகள்' தான் இத்தாக்குதலை நடத்தியதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன என்றும் தாக்குதல் நடந்த சமயத்தில் திரு. டி மெல் வீட்டில் இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (உ-எ)

வவுனியாவிலும் மட்டக்களப்பிலும்

# நிலக்கண்ணி வெடிக்கு 14 இந்திய ஜவான்கள் பலி!

## விடுதலைப் புலிகள் தாக்கியதாக பி.பி.ஸி, அறிவிப்பு

கொழும்பு, அக் 22

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நடத்திய இரண்டு தாக்குதல்களில் இந்திய அமைதிப்படையின் 14 ஜவான்கள் உயிரிழந்தனர் என்று பி.பி.ஸிவானொலிநேற்று மாலை அறிவித்தது.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு வாழைச்சேனையில் நிலக்கண்ணி ஒன்றில் இந்திய அமைதிப்படையினர் பயணம் செய்த ட்ரக் ஒன்று சிக்கியது. இதில் 9 ஜவான்கள் உயிரிழந்தனர் என்றும் அதில் ஒருவர் இந்தியப்படையின் உயர் அதிகாரி என்றும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா வடக்கில் செட்டிகுளம் என்னும் இடத்தில் இந்திய அமைதிப்படையின் ரோந்துக் குழு ஒன்றை போராளி மறைந்திருந்து தாக்கியதில் 5 ஜவான்கள் உயிரிழந்தனர் என்று சொல்லப்படுகிறது.

இப்படி பி பி ஸி வானொலி நேற்று மாலை அறிவித்தது. (உ-எ-ஐ)

## சப்- இன்ஸ்பெக்டர் சுடடுக் கொலை!

கொழும்பு, அக் 22

கேகாலையில் நேற்று பொலிஸ் சப் - இன்ஸ்பெக்டர் ஒருவர் இனந்தெரியாதோரினால் சுட்டுக் கொல்லப்பட்டார். (உ-ஐ)

## பெண் பொலீஸ் மீது சூடு!

கொழும்பு, அக் 22

களனியாவில் நேற்று பெண் பொலீஸார் ஒருவர் மீது இனந்தெரியாதோர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் அவர் படுகாயமடைந்தார். (உ-ஐ)

## இளைஞர் சுட்டுக் கொலை!

குருநகர், அக் 22

நேற்றுக் காலை 6மணியளவில் யாழ் பிரதான வீதி திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கு எதிரில் இடம் பெற்ற துப்பாக்கிச்சூடுச் சம்பவத்தில்இளைஞர் ஒருவர்உயிரிழந்தார்.

யாழ் .மடம் வீதியைச் சேர்ந்த யூட் மரியன் செல்வராஜ் (வயது 24) என்பவரே உயிரிழந்தவர் என அடையாளம் காணப்பட்டிருக்கிறது. (உ-51)

## ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியானது

கொழும்பு அக் 22

ஜனாதிபதித் தேர்தல் டிசம்பர் 19ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படுவது நவம்பர் 10ஆம் திகதி இடம் பெறும். (உ-எ)

## ஐ.தே க. பிரமுகரும் சாரதியும் கொலை!

கொழும்பு, அக். 22

ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழு அங்கத்தவரான ரியூடர் கீர்த்தி நந்தா என்பவர் நேற்று தென்பகுதி தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவருடன் காரில் பிரயாணஞ் செய்த இவரது டிரைவரும் இந்தச் சம்பவத்தில் கொலலப்பட்டார்.

கொழும்பு நாவலவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. (உ-ஐ)

## ஏழு கட்சிகள் எதிரணி ஜனாதிபதியுடன் பேச்சு

ஜனாதிபதி ஜெயவர்த்தனவை நேற்று எதிரணிகளின் எட்டுக் கட்சி கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏழு கட்சிகளின் பிரதிநிதிகள் சந்தித்துப்பேச்சுக்கள் நடத்தினர்.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஜே வி பியின் சார்பில் மட்டும் எவரும் இக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

காலை 11. 30 மணியில் இருந்து பிற்பகல் 1. 30 மணிவரை பேச்சுக்கள் நடந்தன.

கட்சிப்பிரதிநிதிகள் தெரிவித்த பிரச்சினைகள் குறித்து விரிவாக அப்போது ஆராயப்பட்டன.

பேச்சுக்களில் ஜனாதிபதியுடன் அவரின் செயலாளர் டபிள்யு. எம். பி மெனிக்திவல, அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஏழு கட்சிகளில் கலந்து கொண்டவர்கள் வருமாறு.

★ சுதந்திரக்கட்சி: 1 அனுரா பண்டாரநாயக்கா 2. தர்மசிறி சேனநாயக்கா.

★ ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்: எம். எச். எம். அஷ்ரப்.

★ தமிழ் காங்கிரஸ்: குமார் பொன்னம்பலம்

★ எக்ஸத் ஜாதிக லங்கா கட்சி: டாக்டர் காமினி விஜயசேகரா.

★ லிபரல் கட்சி டாக் [6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலை ஒத்திவைக்க ஜனாதிபதி மறுப்பு

கொழும்பு, அக் 22

வடக்கு- கிழக்கு மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி ஜெயவர்த்தன நேற்று நிராகரித்தார்.

ஏழு கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து வடக்கு- கிழக்கு மாகாணசபைத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்று கேரினர்.

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் வடக்கு- கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்த தான் கடமைப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அப்போது தெரிவித்தார். (உ-எ)

✶ இடம்பெயர்ந்தோர்

## விரும்பிய நிலையங்களில் வாக்களிக்க அனுமதி

இடம்பெயர்ந்த வாக்காளர் தாங்கள் விரும்பிய வாக்களிப்பு நிலையங்களில் ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிக்கலாம் என்று தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவித்தார்.

இதற்கான விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வாக்காளர்கள் அதற்குரிய விண்ணப்பப் படிவங்களில் அனுப்பலாம்.

இவ்விண்ணப்பப் படிவங்கள் சகல கச்சேரிகளிலும் கிடைக்கும்.

1987 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தேர்தல் வாக்காளர் இடாப்புக்கமையவே விண்ணப்பிக்க வேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் அறிவித்தார். (உ-எ)

புதுமையும் எழிலும் [illegible] பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள் Brother தையல் மெஷின், சாப்பாட்டு மேசை, Hall set மேசை, Show case Typewriter கண்ணுடி மேசை Black & Decker Drill Pram Stainless Steel Zink சட்டில், மெத்தைகள் Pressure Cooker மற்றும் பொருட்களும் மிகவும் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. 122, சிவன்கோயில்வீதி, திருநெல்வேலி தெற்கு. (7371)

கோரதீவு - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள குழாய்க் கிணறு, மின்சார வசதியுடனுன வீட்டுடன் 2½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. விலாசம் K.அரியராசா நாவற்குழி கிழக்கு (மகாவித்தியாலத்திற்கு அண்மையில்) தச்சன் தோப்பு, தொடர்பு K. அரியராசா, 302, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். (7361)

Gas வெல்டிங் செய்வதற்குரிய சகல விதமான உதிரிப்பாகங்களும் மற்றும் வெல்டிங் பொருள்களும் உண்டு தொடர்பு 417 நாவலர் ரோட் ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (7239)

ரியூட்டரிச்கும் மற்றும் பாவனைக்கும் உரிய வாங்கு மேசைகள் விற்பனைக்கு உண்டு விபரங்சட்கு A. கனகசிங்கம் 210 பருத்தித்துறை வீதி ஆனைப்பந்தி யாழ்பாணம். (C/655)

### FOR SALE

Supper Power National Stereo Double Cassette Receiver SG 320W, 320 Watts. Contact P. Naganathan, College Lane, Vaddukoddai. (7219)

### மலிவு விற்பனை

தேக்கினுலான அலுமாரிகள் 8' நீளமான ஷோகேஸ் 3 Piece Mirror Dressing Table, Kenwood Chef with Attachments. Kenwood Cooker with Oven மற்றும் சில வீட்டுப் பாவனைப் பொருட்கள் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு மட்டும்பார்வையிடலாம். யுகேந்திரன், 83/2 காங்கேசன்துறை வீதி, கொக்குவில சந்தி (7075)

தொழிற்சாலையில் சிறு பழுதடைந்த பாத்திரங்கள் மிக மலிவு விலையில் கொடுக்கப்படும். இடம்: பேள் உலோகத் தொழிற்சாலை காலம்: 21-10-88 தொடக்கம் 25-10-88 வரை. (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சத்திக்கும் இடையில்.) (7232)

### தளபாடம் மலிவு விற்பனை

வியாபாரத் தளங்களுக்கு உபயோகமான 2 கண்ணுடி அலுமாரிகளும், விருக்கைகளும் மலிவு விலையில் விற்கப்படும். இடம்: பேள் உலோகத் தொழிற்சாலை, 60, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில். (7233)

### வீடியோ கமெராக்களும், டெக்குகளும் விற்பனைக்கு

J. V. C, [Title], Sony National G' 100, கமெராக்களும், National 180 100, Orion டெக்குகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- தி. சிவநாதன் சேகர் றெக்கோடிங் பார், நெல்லியடி, (7228)

### வீடியோ, கமெராக்கள் டெக்குகள் விற்பனை

J.V. C (GXN 70 E) Sony National G1, வீடியோ, கமெராக்கள், National NV 100, Orion [Portable] வீடியோ, டெக்குகள், Yachica FX 7 கமெரா, உடன் விற்பனைக்குண்டு. Hero Recording Bar, Nelliady. (7234]

### கோழிக்குஞ்சு விற்பனை

சிலோன் இறவுண் எலிவேற்றர் லிமிட்டட் (பிறிமா) உத்தரவாதம் உள்ள லோமன் இன ஒரு நாள் புரொயிலர் வெள்ளை பேட்டு குஞ்சுகள் பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் வழங்கப்படும். 7 நாட்கள் உத்தரவாதம். முன் கூட்டியே பதிவு செய்யும் இடங்கள்: 11/6 ஸ்ரான்லி வீதி நிருமகள் ஸ்ரோஸ், சிவலிங்கப்புளியடி. சாயி மெடிக்கல் திருநெல்வேலிச்சந்தி. (7241)

## கோழிக்குஞ்சு

### விநியோகம்

கோல்டன் கோமற், கைலேன். மற்றுமினப் பேடு, சேவல், புறயிலர்கள் சலுகை விலையிலும் 100க்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு அதிக சலுகை வழங்கப்படும். சிவதாஸ், நாமகள் ஒழுங்கை, பொற்பதி ரோட், கொக்குவில் கிழக்கு. (7235]

Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள். Hisey பிறவுண் பேடடுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், புறெயிலர் குஞ்சுகள், 3 1/2 மாத பேட்டுக் குஞ்சுகள் வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7231)

Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்புசேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம்சென்ரர், C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6881)

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், குப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6882)

### தாரா கோழிக்குஞ்சுகள்

ஒரு நாள் சறுபபு சேவல் குஞ்சுகள் 27 ஆம் திகதியும், கைபுரோ, இன்டியன் றிவர் புறயிலர் குஞ்சுகள் 28 ஆம் திகதியும் கைலேன் கறுப்பு, வெள்ளை பேட்டு குஞ்சுகள் 1-11-88 இல் விநியோகிக்கப்படும். தாராகுஞ்சு விநியோகம் பின்னர் அறிவிக்கப்படும். கால்நடை வளர்போர் சங்கம், சுன்னுகம் கிளை (பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் அலுவலகம்) சுன்னுகம். (7017)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை யாழ்ப்பாணம். (C 357)

## தேவை

இலுப்பம் விதைகள் வேபபம் விதைகள் தேவை. மில்க்வைற்- யாழ்ப்பாணம். (C656]

கொம்போஷிங் செய்யக்கூடியவர்கள் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். தரன் ஸ்ருடியோ, 9, 8 நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன் 23858 (7236)

### மணமக்கள் தேவையா

எம்மிடம் எல்லாச் சாதி, சமயத்திலும் உத்தியோக முறைகளிலும் ஆண், பெண் யாவரும் இருக்கிருர்கள். ஞாயிற்றுக்கிழமையில் நேரே வரலாம். தொடர்பு- : மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (6654)

### தவறிவிட்டது

அருந்ததி பொன்னம்பலம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 657061522V, பல்கலைக்கழக அடையாள அட்டை என்பன பேர்சுடன் திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர் உதயன் காரியாலயத்தில் or வளாகத்தில் ஒப்படைக்கவும். (7381

கெலீன் மரியநாயகம் ஆகிய எனது Brown Colour Purse தவறிவிட்டது அதனுள் 2571509V அடையாள அட்டையும் உண்டு. வட்டுக்கோட்டையில் இருந்து வானில் வரும் பொழுதுதவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்துதொடர்பு: கெலின் மரியநாயகம் College Lane, Vaddu West. அனுப்பவும் (7237)

## வகுப்புகள்

### A/L இரசாயனம்

108 Brown Road A/L 90 பொது இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம் (24 10-88) திங்கள் 6. 30 am (திங்கள், புதன்' வெள்ளி 6 30 am) (7238)

### A/L இரசாயனம்

108, Brown Road, A/L 89, இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ். ஆரம்பம்: 23-10-88 ஞாயிறு 3. 15 p.m சனி, ஞாயிறு 3 . 15 to 5. 45 p . m, 3 . 15 to 4. 15 p. m பௌதிக இரசாயனம் 4 . 15 to 5. 45 p. m பொது இரசாயனம், சேதன இரசாயனம். (7230)

### G. C. E. (OL) கணிதம்

1988 பரீட்சைக்குரிய மாதிரி வினுத்தாள்கள் 5ம் ஒரு வினுத்தாளுக்கான செய்கைகளும் அடங்கிய நூல். "மயூரதி வெளியீடு- 4" விற்பனையாகிறது. விலை ரூபா 12/50. ஸ்ரீ லங்கா, பூபாலசிங்கம் மற்றும் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (7323)

### G. C. E. (O/L) NEW SYLLABUS

பரீட்சையில் திறமைச் சித்தி பெற உதவும் 5 மாதிரி வினுத்தாள்களும் விடைகளும் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம் வெளிவந்துள்ளன. ஒவ்வொன்றும் ரூபா 30/- புத்தகசாலைகளில் கிடைக்கும் உயர் கல்விப்பதிப்பக வெளியீடுகள். (7001)

### வினு விடை வகுப்பு

A/L 89 கலை, வர்த்தக மாணவர்களுக்கான வினு விடை வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. மொடேண் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. கிளைகள்:- பருத்தித்துறை, வவுனியா. (7220)

### வீடியோ படப்பிடிப்பு

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கள, அமங்கல நிகழ்ச்சிகளை 3 கமெராக்கள் பொருத்தி புதுமையான முறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்திட "பிரதீப் மூவிஸ்", புதுவீதி, கொய்யாத்தோட்டம், (கிளைகள் இல்லை) தொடர்புகட்கு:- 'துஸ்' (சுணில்). (6980)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:

9 - 7 - 1930

உதிர்வு:

2 - 11 - 1987



**திருமதி குழந்தைவேலு தங்கம்மா**

திதி: 22. 10. 1988

அன்பின் அம்மா!
நீண்ட துயில் கொண்டு
ஆண்டு ஒன்ருயினும்
தூண்டா மணிச்சுடராய்
ஒளிர்கின்றீர் எம் முன்னே
கூண்டைப் பிரிந்த - உங்கள்
ஆத்மா சாந்தி பெற
துதிக்கின்ருேம்

உங்கள் பிரிவால் துயறும்!
கணவன், மகன் (டென்மார்க்),
மகன்மார், மருமக்கள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்:

கோப்பாய் வடக்கு,
நாவற்கட்டை. (7505)

## பிரயாண ஒழுங்குகள்

GOLDEN TRAVELS & TOURS

சவூதிஅரேபியா குவைத் மற்றும், மத்திய கிழக்கு நாடுகளுக்கு

### (1) சவூதிஅரேபியா

லேபரர்ஸ் 350 + 100
கிளீனேர்ஸ் 350 + 100
மீன் பிடிப்பாளர் 900 + 150
(குறிப்பு:- நல்ல அனுபவமுள்ள மீன்பிடிப்போர் 5 பேர் உடனடியாகத் தேவை)
உடன் தொடர்பு கொள்ளவும்

### (2) கப்பலில் வேலைவாய்ப்பு

சம்பளம் 500 U. S. Dollar
உணவு வசதிகள் பிரத்தியேகம்
ஒப்பந்தம்: ஒரு வருடம்

குறிப்பு:
மேற்படி கப்பல் கனடா, அமெரிக்கா, இலண்டன், அவுஸ்திரேலியா மற்றும் நாடுகளுக்குச் செல்ல வாய்ப்பு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.

### (3) குவைத்

ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் 35 டினர்
வீதிச் சுத்திகரிப்பாளர்
[வயது 18 க்கு மேல்]

தொடர்பு;

**கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
**புகையிரதநிலைய வீதி, சுன்னுகம்.**
**குப்பிளான் வல்வெட்டி**

(C 643)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. சு. சிவபாலசிங்கம் (பாங்கர்)**
(மக்கள் வங்கி உத்தியோகத்தர்)

தோற்றம்: 14-12-1946
மறைவு: 22-10-1987

திதி: 9-11-1988

எங்கள் அன்புத் தெய்வமே! ஆண்டு ஒன்று சென்ருலும் ஆறவில்லை எம் மனது. மாறவில்லை உங்கள் நினைவு. அவர்களின் இரக்கமற்ற அழிப்பினுல் மின்னுமல் முழங்காமல் எங்களைத் தவிக்கவிட்டு மறைந்தீர்கள். அப்பாஎன்று அழைப்பதற்கு அருகதையற்றுவிட்டோம். உங்களைப்போல் அரவணைக்க இவ்வுலகில்யாருமில்லை. தங்கள் பிரிவால் தவிக்கும் எங்கள் உள்ளங்களில் உலவி வரவும் உங்கள் ஆத்மா சாந்தியடையவும் ஆண்டவனை வேண்டி நிற்கின்ருேம்.

மனைவி: சகுந்தலாதேவி சிவபாலசிங்கம்
மக்கள், தாய், சகோதரர்கள்,
மாமா, மாமி, மைத்துனர்மார்:

'கலையகம்'
வேலணை—1 (7521)

யா/ கலாநிதி ஆ. தியாகராஜா
ம. ம. வி. - காரைநகர்

## 1989 - 6ஆம் ஆண்டு பிரவேசப் பரீட்சை

விண்ணப்ப முடிவு திகதி:- 04-11-1988
பரீட்சைத் திகதி;- 20-11-1988
பரீட்சைப் பாடங்கள்:- தமிழ், கணிதம்

விண்ணப்பப் படிவங்களை ரூபா. 10/- கொடுத்து கல்லூரிக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்

மு. திருநீலகண்டசிவம்
அதிபர்

(7514)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் அன்னை
**சிவானந்தராசா சௌந்தரராணி**



அமரர் செல்வன்
**சி. மோகன்ராஜ்**
(தொழில் நுட்ப உதவியாளர், முருங்கன்)

திதி: 09 - 11 - 1988

அன்னை மடியில்: 02 - 01 - 1940
அநியாய அழிப்பு: 22 - 10 - 1987

அன்புடனும், பாசமுடனும், இனிய பண்புடனும் வாழ்ந்து, நம் வாசத்தில் ஒளி விளக்காய்த் திகழ்ந்தாய். பூகம்பம் வெடித்தது. நம் வாசத்தில் இருளும் சூனியமும் சூழ்ந்துவிட்டது. நீயோ உன் தவப்புதல்வனுக்காக உன்னை அர்ப்பணித்தாய். நாமோ நம்பமுடியாது, செய்வதறியாது விடையின்றித் தவிக்கின்ருேம்.

அன்னை மடியில்: 03 - 05 - 1963
அநியாய அழிப்பு: 22 - 10 - 1987

அறிவும், ஆற்றலும் நிறைந்த நம் தவப் புதல்வனே! பல்கலைகளையும் கற்று வல்லவனுய் விளங்குவாய் என்றே கனவு கண்டோம்.

இடி விழுந்தது நம் வாசத்தில்! துன்பமும் துயரமுமே மிஞ்சின.

அம்மாவின் மடியில் உறங்குகிருய் என்ற ஆறுதல் தவிர வேறில்லை ஐயா!

இறைவன் தன் கருணையால் உங்கள் ஆத்மாவுக்கு அடைக்கலமும் எமக்கு மன உறுதியையும், நீதியின் தீர்ப்பையும் அருள்வாஞக.

கணவன், பிள்ளைகள்,
உறவினர்கள்.

அப்பா, தம்பிமார்,
உறவினர்கள், நண்பர்கள்.

119 B, கண்டி ரோட், யாழ்ப்பாணம். (7367)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் !

நிகழும் மங்களகரமான விபவ வருடம் ஐப்பசி மாதம் 8ஆம் நாள் (24 - 10 - 1988) திங்கட்கிழமை ரேவதி நட்சத்திரம் சித்தசுபா சுபயோகமும் கூடிய சுப முகூர்த்தம் காலை 10 – 15 முதல் காலை 11 - 15 வரை தனு லக்கினத்தில் தொண்டமனாறு செல்வச் சந்நிதி திருமுருகன் முன்னிலையில்

எமது புத்திரன் திருநிறை செல்வன்
**க. விஜயகுமாரகுரு**
அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி
**சே, செல்வமணி**
அவர்களுக்கும்

நடைபெறவிருக்கும் திருமண விழாவிற்கு தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி அருளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திருமதி. சீ. கந்தசாமி
98 A, மாணிக்கவாசகர் வீதி,
திருகோணமலை.

திரு, ம. செல்வச்சந்திரன்
காட்டுவளவு,
வல்வெட்டித்துறை.

வரவேற்புபசாரம்:- 02 - 11 – 88 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு மணமகள் இல்லத்தில் (திருமலையில்) நடைபெறும்.

(7377)

---

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்
வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

# சம்பியூட்டர் கல்வி

● **COMPUTER PRCGRAMMING AND DATA PROCESSING IN BASIC LANGUAGE**

பயிற்சிக் காலம்:- 40 நாட்கள். கட்டணம் :- 950/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)
ஆரம்பம்: 28 - 10 - 88 [திங்கள், புதன், வெள்ளி] வகுப்புகள்

BASIC LANGUAGE கற்றவர்களுக்கான
● **COMPUTER PROGRAMMING IN COBOL LANGUAGE**

பயிற்சிக் காலம்: 3 மாதம். கட்டணம்:. 1,500/-
(பகுதி பகுதியாகச் செலுத்தலாம்)
ஆரம்பம்: 29 - 10 - 88 [சனி, ஞாயிறு வகுப்புகள்]

O/L படித்த இரு பாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி I B M (COMPATIBLE) சம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். ★ குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்களாகையால், விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்து கொள்ளவும்.

## UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சார நிலைய வீதி,
(உபதபாற் கந்தோர் அருகாமை)
2 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(C/ 592)

---



# ஓராண்டு நினைவஞ்சலி

## செல்வி இரட்ணம்பிகை இராஜரட்ணம்

ஆண்டவன் படைப்பு, 02-03-1961
அநியாய அழிப்பு: 22 10-1987

பண்பின் பிறப்பிடமே – அன்பின் இருப்பிடமே
பெண்மையின் இலக்கணமே – பேரறிவு கொண்டவளே
கண்ணை இமை காப்பது போல் - உன்னில்லத்தை காத்திட்டாய்
உண்மையின் உறைவிடமாய் – உவகையுடன் உலாவிவந்தாய்
வெண்ணிறத் தாமரையாள் கடாட்சமும் கண்டிருந்தாய்
கண்ணியமாய் எம்முடன் கடமையும் ஆற்றிவந்தாய்
மண்மீது உன்கடமை இனிதே முடிந்ததன்றோ!
விண்மீது உனைப் புகவிட்டான் – அந்தக் கொடுங்கூற்றுவன்
அரண்மனை செய் அறியாமையா உன்பறிப்பு
தரணியே முன் காணாத நாடகம் முடிந்ததென்று
எண்ணியே நாம் கண்களும் கலங்கி நின்றனவே
பெண்ணே நீ எம்மைப் பிரிந்து ஓராண்டு நிறைவாகினும்
தெண்ணிலாப் போன்ற உன்வதனமும் அமைதி நடையும்
எம்மவர் இதயங்களில் என்றும் நிழலாய்த் தெரிகின்றதே.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீராம்ஸ் நிறுவன
ஊழியர்களும்,
குடும்பத்தினரும்.

இருபாலை,
கோப்பாய்.

(7385)

---

எதிர்வரும் 25 ஆம் திகதி

# பாடசாலைகளை திறப்பது குறித்து பணிப்பாளர்களே முடிவு செய்ய வேண்டும்

கொழும்பு, அக் 22 நாட்டிலுள்ள நிலைமைகளை அவதானித்து எதிர்வரும் 25 ஆம் திகதி பாடசாலைகளைத் திறப்பதற்கான முடிவுகளை பிராந்தியக்கல்விப்பணிப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.

அவ்வப்பகுதியில் நிலைமைகளை ஆராய்ந்த பிறகே தமது பகுதியிலுள்ள பாடசாலைகளைத் திறப்பதா இல்லையா என்பதைசம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளர்கள் முடிவு செய்ய வேண்டும்.

கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா நாட்டிலுள்ள சகல கல்விப் பணிப்பளர்களுக்கும் இவ்வாறு உத்தரவிட்டிருப்பதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு- கிழக்கில் ஏற்கனவே பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஓ-ஐ)

## விண்ணப்பத் திகதி நீடிப்பு

கொழும்பு அக் 22 மாவட்ட சேவைத் திட்டத்தின் கீழ் ஆங்கில ஆசிரியர் பதவிக்கு அண்மையில்கோரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை கல்விச் சேவைக்குழுச் செயலாளர் திரு. எம். எச். எச் அரியரத்ன தெரிவித்தார். (ஓ-21)

# வவுனியா வந்த பஸ் இடைமறித்துகொள்ளை!

வவுனியா அக் 22 மன்னாரிலிருந்து வவுனியா நோக்கி வந்த இ. போ. ச. பஸ்சை வழிமறித்த மூவரடங்கிய ஆயுதந்தாங்கியகோஷ்டி ஒன்று சுமார் 43 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப்பணம் நகைகளை பயணிகளிடமிருந்து கொள்ளை அடித்தது.


ஞாயிற்றுக்கிழமை பிரமணாளங்குளம் என்னுமிடத்தில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து வவுனியா பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது

டிஸ்கோ என்றழைக்கப்படும் உள்ளூர்த் தயாரிப்பான துவக்குகளைக்காட்டிப் பயமுறுத்திய இக் கொள்ளையை மூவர் செய்துள்ளனர்.

சம்பவ நேரம் ஐம்பதுக்கும் மேற்பட்ட பயணிகள் பஸ்ஸில் இருந்ததாகவும் இவர்களில் விடுமுறையில் சென்ற 5 பொலீஸாரும் பயணிகளாக இருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

(ஓ-164)

# ஓராண்டு நினைவு அஞ்சலி



## மா, சத்தியசீலன்

ஆண்டவன் படைப்பு: 30- 5– 1970
அநியாய அழிப்பு: 19- 10- 1987

ஆடைகட்டி அலங்கரிக்க வேண்டிய அழகிய பருவம் உனக்கு இருந்தும் பாடைகட்டி அலங்கரித்த பரிதாப நிலமை எமக்கு சொரியும் கண்ணீர் வெள்ளத்தில் நீந்தி விளையாட ஓடிவா மகனே! எங்கள் அன்புச் செல்வமே! குலவிளக்கே! இனியவனே! நீ பிரிந்த நாள் இல்லை, பிரிக்கப்பட்ட நாள் ஓராண்டுகள் உருண்டோடி விட்டது. இருந்தும் உன் நினைவுகள் ஒரு அடி தன்னும் நகரவில்லையே! சுழலும் பூமியிலே சுற்றிய சுழல் சக்கரம் நின்று போனதே சத்தியத்தின் பிறப்பிடம் சத்தி உன் சரித்திரமே சரிந்து போனதே! அன்பைச் சுமந்த எங்கள் நெஞ்சும் உன் நினைவுகள் அழிந்ததால் இன்றும் அழிகின்றதே.

உன்னைப் பார்த்த கண்களும், உன் குரல் கேட்ட காதுகளும் அன்பிற்கே அர்த்தம் புரியாமல் தவிக்கின்றதே. உன்னிடம் இதயத்தைத் தந்தவர்கள் இனி எங்கே தேடுவது. அவர்களின் கனவுகள் கடலோரக் கவிதைகள்! காற்றோடு கலப்பதுபோல, உன் ஆத்மாவின் அமைதிக்காக அல்லும் பகலும் ஆண்டவனையே வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் வாடும்!
அம்மா, அப்பா, சகோதரர்கள்.
தாவடி வடக்கு,
கொக்குவில்.

(7515)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 22 யாழ்-வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று 22 ஆம் திகதி யாழ் வைத்தியசாலை புதிய வெளி நோயாளர் பகுதியில் நடைபெறும்.

தலைவர் திரு, ச, சிவரத்தினம் தலைமையில் பிற்பகல் ஒரு மணி அளவில் கூட்டம் ஆரம்பமாகும். (ஓ-10)

# யாழ் சின்னக்கடையில் திருட்டு

குருநகர், அக் 22 யாழ்-சின்னக்கடை வீதியில் பலசரக்குக் கடை ஒன்று கடந்த புதன்கிழமை இரவு ஊரடங்கு அமுலில் இருந்த வேளை உடைக்கப்பட்டு திருட்டு நடந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-5)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





சீதாலக்குமி
தோற்றம் 26 – 09 – 1942
மறைவு: 22 - 10 - 1987

சுமதி
தோற்றம்: 19 - 06 - 1965
மறைவு: 22 - 10 - 1987

திதி: 09 - 11 - 1988

எங்கள் அன்பு பாசம் மறவாத அருமைச் செல்வங்கள் சீதா, சுமதி நீங்கள் இறைவன் அடி சேர்ந்து ஒரு வருடம் ஆகின்றது. உங்கள் அன்பும் பாசமும் நினைவும் என்றும் எங்களை விட்டு அகலாது;

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிராத்திக்கும்:

செ. கருணைலிங்கம்,
இளைப்பாறிய தபால் அதிபர்.
அச்சுவேலி.

அத்தான், அப்பா,
மகன், தம்பி
உறவினர்கள்.

(7516)

---

எமது நேற்றைய புதியவெளியீடு
✶ S. V. சேகர் ✶ சீதா ✶ செந்தில்

## "மனைவி ஒரு மந்திரி"

(Sutha Original)

## குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(C/ 413)

---

# முதலாமாண்டு நினைவஞ்சலி



திரு. நா. இராசரத்தினம அவர்கள்

மலர்வு: 10-05-1935
உதிர்வு: 22–10–1987

திதி: 09.11 1988

அவர்களின் அநியாய அழிப்பினுக்கு
ஐயா நீர் ஆளானீர்!
ஆண்டொன்று ஆனாலும் அத்துயர் ஆறுது!
அமரா நின் அன்பு முகம் - அன்புடையோர்!
நெஞ்சமதில் அனுதினமும் ஆடுதையா!
வேலவரின் திருநாமம் விருப்புடனே
பூண்டவரே
வேலவரை வேண்டுகின்றோம்
விரைந்து நீர் சாந்திபெற!

மனைவி, மக்கள்,
மருமகன்

விநாயகர் வீதி.
நல்லூர் வடக்கு .

(7393)

---

# கண்ணீர் அஞ்சலி

புவனேஸ்வரி ஹாட்வயர்ஸ் ஸ்ரோஸ்
உரிமையாளர்

## அமரர் A.V.S குணரத்தினம்

அவர்களின் மறைவிற்கு மனம் உருகும்
கண்ணீர் அஞ்சலி




அன்னாரின் மறைவு எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்துகின்ற இவ்வேளை அன்னாரின் குடும்பத்தவர்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும், எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

செல்லையா சிவபாதலிங்கம்
வைரக்கல் நகை வியாபாரிகள்
218 H கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


(7388)

---


உஷா தையல் மெஷின் தொடர்



டொமெஸ்டிக் டிலியூக்ஸ் (நேரான தையல்)
ட்ரெம் பீட் பொறிமுறையும் முகப்பு அலங்காரத் தையலும்.
ரூபா 3850/-
தையற்காரர் மொடல் ரூ. 4000/-



எக்ஸெலா 30 (சிக்சாக் தையலுக்கும் நேரான தையலுக்கும்.)
30 வடிவமைப்பு அச்சுக்கள்
ரூபா. 5,850/-



சிக் சாக் எக்ஸேலா 55
பிக்கொட் விளிம்பு தைக்கும் ஊசியும் இரட்டை ஊசியும் உண்டு.
55 வடிவமைப்பு அச்சுக்கள், சிக்சாக் தையல், அலைவிளிம்புத் தையல், பொத்தான் துளை தைத்தல், முதலியன,
ரூபா. 7850/-

சகல பாகங்களும் உலோக மெருகிடப்பட்டவை.
ஒரு வருட உத்தரவாதம் இலகு தவணை முறையிலும் வாங்கலாம்,
அண்மையிலுள்ள உஷா விற்பனையாளரிடம் இன்றே விசையுங்கள்.

விநியோகத்தர்
உஷா இன்டஸ்ரீஸ் லிமிட்டெட்
68, அத்திடிய ரோட், ரத்மலானை,
தொலைபேசி: 71-6922, 71-7934, 71-7381

Mel Ads 9353


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹீஸாஸ்
## கோல்ட் கவரிங்

நகைகள், ஆபரணங்கள், கோயில், நடன, கல்யாண நகைகளுக்கு சிறந்த முறையில் தங்க முலாம் Gold Covering போட்டுக்கொள்ள

**35 வருட அனுபவம்**

பெற்ற சிறந்த ஸ்தாபனம்

சான்றுப்பத்திர இல. 9063

**மஹீஸாஸ்**
177, கஸ்தூரியார் வீதி,
(வின்ஸர் தியேட்டர் முன்பாக)
(ஈஸ்வரி ஜுவல்லர்ஸ் அருகில்)
யாழ்ப்பாணம்.

(7525)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
1934 . 07 . 24



உதிர்வு:
1987 . 10 . 22

**கேசவன் கெங்காதரன் (நாராயணன்)**

திதி: 1988 – 11 – 09

அன்பாய், பண்பாய், பாசமாய் எம் மிடமிருந்த உங்களை தீபாவளியின் மறுநாளே காலன் பறித்துவிட்டானே! எம்மைத் தவிக்க விட்டுச்சென்ற தெய்வமே! ஓராண்டு மட்டு மல்ல ஒரு நூற்றாண்டு ஆனாலும் உங்கள் அன்புமுகம் எம்மைவிட்டகலாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீரால் அர்ச்சிக் கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
**அன்பு மனைவி, பிள்ளைகள், மாமி, மருமகன், உறவினர்கள், நண்பர்கள்.**

49/4 யாழ்றோட்,
யாழ்ப்பாணம்.

(7386)

## ஓராண்டு நினைவஞ்சலி



நீர்வேலி
**திரு. வயித்திலிங்கம் கந்தையா**
(E.V.K , V.K.S. சுருட்டுத் தொழிற்சாலை- ஸ்தாபகரும், அதிபரும்)

மண்ணுலகில்:
10 5 1930

விண்ணுலகில்:
13– 11– 1987

எங்கள் எல்லோருக்கும் வளமான வாழ்வளித்த தெய்வமே! எமக்கு நல்வழி காட்டி, அன்பு, நெறி, பண்பு பாசத்துடன் வாழ்ந்த தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில் அகல் விளக்காய் அணையாத் தீபமாய் என்றும் ஒளிர்கின்றது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் தினம் தினம் இறைஞ்சுகின்றோம்.

22– 10– 88 இன்று வீட்டில் நடைபெறும் ஓர் ஆண்டு கிரிகைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உங்களை நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், ஊழியர்கள்,
உறவினர்கள், நீர்வேலி மக்கள்.

சரந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு.

(7378)


## ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம்- ஆனால் தவறாகப் பேசி விடுவோமே என்ற தயக்கம்-
## இதுதானே உங்களது பிரச்சினை?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது. இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது.

WRITTEN ENGLISH

ஆனால் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது

SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.

இதனைக் கருத்திற் கொண்டு

**BRIGHT TRAINING CENTRE**

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்.

**உளவியல் அடிப்படையில், மிக மிகப் புதுமையான முறையில்**

SPOKEN ENGLISH

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்.
விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்பு கொள்க:

# BRIGHT
## TRAINING CENTRE
**P. O. Box 162, Colombo.**

(7160)


## நன்றி நவில அழைப்பு

1862ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை 125 வருடங்களாக இறைவன் எம் திருக்குடும்பச் சபையை யாழ்.மண்ணில் மலரவும் சேவை செய்யவும் செய்த அருள்வளங்கட்கு நன்றி நவில, இம்மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9. 00 மணிக்கு யாழ் மரியாள் பேராலயத்தில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கின்றோம்.

எம்முடன் இணைந்து நன்றி நவில சகோதரக் குருக்கள், துறவறச்சகோதர சகோதரிகள், குருத்துவமாணவர்கள், பெற்றோர், பெரியோர், நண்பர்கள், உபகாரிகள், எமது பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை மாணவ மாணவிகள் துணை அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

"எம் சபை திருக்குடும்பச் சபை
எம் உறவு அனைவருக்கும் சொந்தம்"

நன்றி

**திருக்குடும்ப
மாகாணத் தலைவி,**
யாழ்ப்பாணம்.

(7299)

## ஓராண்டு நினைவஞ்சலி

பாலசிங்கம் - ஜெயக்குமார் (சிறீ)

தோற்றம்:
20- 07- 1967

மறைவு:
02 11- 1987

திதி: 22- 10-1988


திங்கள் ஈராறு மறைந்த போதும் மகனே! உன் முகம் மறந்த நாளே இல்லை. உன்புன்சிரிப்பும் கெம்பீரத் தோற்றமும் எம் மனத்தை உறுத்துதே எம் ஐயனே! வந்தடைந்த தீமைக்கெல்லாம் எதிராடி வென்று எம்மை வாழவைக்க விரும்பினாய் என்றாலும்,
"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு"
என்னும் பொய்யா மொழிக்கு ஏற்ப எம்மை விட்டுச் சென்றாயே எம் அன்பின் தெய்வமே! உன்பிரிவால் நாள்தோறும் கண்ணீர் மல்கி வாடும் நாமும் என்றோ ஓர் நாள் நீ சென்ற பாதையிலே வந்து உன்னைச் சேர்வோம் ஐயா.

ஆருத்துயரில் வாடும்;
அப்பா, அம்மா, அக்கா,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

'சிறீதேவி'
ஆவரங்கால்,
புத்தூர்.

(C/549)


# சிங்கர் ரீசீஆர் 273
# ரேடியோ கஸெட் றெக்கோடர்




உலகின் மிகப் பிந்திய செய்திகளையும் சகல சிறப்பம்சங்களும் கொண்டது உங்கள் அபிமான இசை கேட்க ஆசைப்பட்டதும், அந்த ஓசை உங்கள் வசம்! சிங்கர் ரீசீஆர் 273 மொனோ கசேட் றெக்கோடர், செய்தித் தேடலிலும் இசைத் தேர்விலும், நீங்கள் முதன்மை இடம் பெறச் செய்யும் எல்லாச் சிறப்பம்சங்களும் உள்ளடங்கியது. பரீட்சித்துப் பாருங்கள்!

**சிறப்பம்சங்கள்:**
- 04 வாட்ஸ் உச்ச இசைச் சக்தி வெளிப்பாடு
- நேரடி ரேடியோப் பதிவு
- ஒரே தொடுகையில் ஒலிப்பதிவு
- தன்னியக்க நிறுத்தக் கசெட் செயற்பாடு
- 02 வழி ஒலிப்பு முறை
- உள்ளமைந்த செறிவமைப்பு ஒலிவாங்கி
- எல்ஈடீ ஒலி நுட்பச் சுட்டு கருவி
- 03 வரிசை ரேடியோ அடுக்கலை|சிற்றலை|மத்திய அலை

**சிங்கர்***
மாசற்ற மேன்மை

சிங்கர் விற்பனைப்-பின்-சேவை, நாடளாவியது, தனித்துவமானது, நம்பகமானது.

ZENITH


## ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



**திரு. தோமஸ்
பேரின்பநாயகம்
பஸ்தியாம்பிள்ளை**

மலர்வு: 22 - 09 - 1921
உதிர்வு: 22 - 10 - 1987



**திருமதி பேள்
அரியமலர்
பஸ்தியாம்பிள்ளை**

மலர்வு: 11 - 07 - 1927
உதிர்வு: 22 - 10 - 1987



**செல்வி நோயலா
விஜயந்தி
பஸ்தியாம்பிள்ளை**

மலர்வு: 04 - 02 - 1967
உதிர்வு: 21 - 10 - 1987

ஆத்மா அமைதி பெற
கல்லறை கூட உங்களுக்குச்
சொந்தமில்லை; சொந்த மண்ணில்
பூவோடு பிஞ்சும்;
கனியோடு காயும்
கலந்திங்கே உதிர்ந்ததென்ன மாயம்?
அன்பு நெஞ்சங்களின் சூரியோதயங்களே
அமைதிப் போர்வைக் கடியில் அஸ்தமனமானதென்ன?

**மக்கள், மருமக்கள், சகோதரர்கள், உறவினர், நண்பர்கள்.**

([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பியூட்டர் விரிவுரைகள்

**BASIC**
WITH PRACTICALS
IN
COMMODORE COMPUTERS

**2 Months**
( துரித பயிற்சி )

**ஆரம்பம்: 24-10-1988**

FEES: 1000/-
(தவணை முறையில் செலுத்தலாம்)
சான்றிதழ் வழங்கப்படும்.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(Leaders in Computer Education)

16, 3ஆம் குறுக்கு வீதி,
(O.L R. தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.
(C 646)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. பொ. மு. செல்லத்துரை**
(ஓய்வுபெற்ற புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்)

மலர்வு: 03-06-1918
உதிர்வு: 19-10-1987

எமது அன்புத் தெய்வமே
அழுதிட மனமது மாறவில்லை அதை
எழுதிடத் துடிக்கிறோம் முடியவில்லை
நீர் எம்மை விட்டகன்று
ஒருவருடப்பொழுது சென்றிடினும்
நெஞ்சில் உம் நினைவுகள்.
உமது ஆத்மா சாந்திபெற அனுதினமும்
பிரார்த்திக்கின்றோம்
உமது பிரிவால் உள்ளம் குமுறும்:

அன்பு மனைவி,
மகன், மகள்,
மருமகன், மருமகள்,
பேத்தி.

(7325)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி மாத்தா வயலட் பிலிப்பையா**

தோற்றம்: 06-06-1917
மறைவு: 21-10-1987

எங்கள் இதயத்தில் என்றும் நீங்காது
நிலைத்து நிற்கும் அன்புத் தெய்வமே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவு என்றும் எம்மை
விட்டு அகலாது.
உங்கள் ஆத்மா சாந்திபெற
அனுதினமும் பிரார்த்திக்கின்றோம்.

859, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பிள்ளைகள்,
பேரப்பிள்ளைகள்.

[7382]

## ஓராண்டு நினைவஞ்சலி



**செல்வன் ஜினோ சாள்ஸ்**

மொட்டின் மகிழ்ப்பு: 28- 09- 1982
மலரின் உதிர்வு: 22- 10- 1987

எங்கள் கொடியில் அரிதாய் வந்து
அரும்பிய மொட்டே அருமைஜினோவே!
கரும்பென இனித்திடும் கனிந்த
மழலையால்
இரும்பு நெஞ்சையும் ஈர்த்திடும் செல்வா!
தருமம் தவறிய தற்குறியோர் தம்
மர்மக் குண்டுகள் மாய்த்தன உன்னையும்!
கருகியழிந்தாய் கண்ணே நீயும்
உருகியழிகிறோம் உன்னை நினைத்தே
அருகு வந்துமே ஆறுதல்தந்திட
அருமணியே நீ ஓடி வாராயோ?

அன்புடன்
தந்தை கி. டெனுள் சாள்சும்
அன்னை புஷ்பராணியும்
உறவினரும்.

(7509)


**I. E. T. TECHNICAL INSTITUTE**
**11 B, Stanley Road, Jaffna.**
(லிடோ தியேட்டருக்கும் முட்டாசுக் கடை சந்திக்கும் இடையில்)

✱ எலெக்ரிஷன் ✱ ஓட்டோ எலக்ரிஷன்
✱ வெண்டிங் ✱ மெக்கானிக்

பயிற்சியளிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு
அனுப்பிவைக்கப்படுகின்றார்கள்

**ஆரம்பம்: 24 - 10 - 1988**

(7517)



J. M. J.

**உங்கள் பயண அமைப்பாளர்**




✱ கனடா ✱ ஜேர்மனி ✱ பிரான்ஸ்
✱ சுவிஸ் ✱ இத்தாலி

மேற்படி நாடுகளுக்குப் பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் பயணம் மேற்கொள்வதற்கு வேண்டிய சகல ஒழுங்குகளையும் துரிதமாகச் செய்து தருகின்றோம். இறைவன் அருளைத் துணையாகக் கொண்டு எமது குழுக்கள் கனடாவுக்குத் தமது பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டன என்னும் நற்செய்தியை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். எமது குழுக்கள் பிரதி வாரமும்

**கனடா, ஜேர்மனி, பிரான்ஸ்**

எவ்வித இடையூறுமின்றிப் பயணம் மேற்கொண்டு வருகின்றன. மேற்படி நாடுகளுக்கு நீங்கள் பயணம் செய்ய இதுவே கடைசிச் சந்தர்ப்பமாகவும் இருக்கலாம்.

எனவே விபரங்களுக்கு உடனடியாகத்
தொடர்பு கொள்ளுங்கள்.
அன்புடன் அழைக்கின்றேன்.

● முக்கிய குறிப்பு
கனடாவுக்குப் பெண்கள் குடும்பமாகச் செல்ல இது ஓர் அரிய சந்தர்ப்பம்.

உங்கள் பயண அமைப்பாளர்:
**S.P. ANTON**
No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி,
(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

(C 618)



# ஜீவனி
# உங்கள் குழந்தையின் உயிர் காக்கும்.

உங்கள் குழந்தையின் உடலில் இருக்க வேண்டிய நீரும் உப்புகளும் வயிற்றோட்டத்தினால் குறைகின்றன. இது உடல் உலர்ச்சியடைவதற்கு வழிசெய்யக்கூடும். சரியான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால் உங்கள் குழந்தை மரணமடையவும் இடமுண்டு. இலங்கையில் தினமும் 6 குழந்தைகள் வரை உடல் உலர்ச்சியினால் மரணமடைகின்றன.

**எனவே, உடல் உலர்ச்சி அடைவதைத் தடுக்கும் வழிகள் பற்றி நீங்கள் அறிந்திருப்பது அவசியம்.**




வயிற்றோட்டம் ஏற்பட்டதும் உங்கள் குழந்தைக்கு நீர், பொரி அரிசிக் கஞ்சி, அரிசிக் கஞ்சி, உப்புக் கலந்த எலுமிச்சம் பழச் சாறு, சாயம் குறைந்த தேநீர் போன்ற நீராகாரங்களைப் போதிய அளவு குடிக்கக் கொடுங்கள். தாய்ப்பால் குடிக்கும் குழந்தையானால் தொடர்ந்து பால் ஊட்டல் முக்கியம். புட்டிப் பால் கொடுப்பதானால் வழக்கத்தைவிட இருமடங்கு நீரில் பால் மாவைக் கரைத்து ஊட்டவும்.



இவ்வளவு செய்தும் வயிற்றோட்டம் தொடர்ந்து நீடித்தால் உடல் உலர்ச்சியடைய இடமுண்டு. உடல் உலர்ச்சியின் முதல் அறிகுறி கடும் தாகமாகும்,



இந்த நிலை ஏற்படின், உடனடியாக ஜீவனியைத் தயாரித்து வழங்க வேண்டும் உடல் இழந்துவிட்ட உப்புக்களையும் நீரையும் ஜீவனி மீள அளிக்கும்.




**ஜீவனி பானம் தயாரிக்கும் முறை**



ஜீவனி பக்கெட்டுக்குள் காணப்படும் இரண்டு பைகளிலுமுள்ள தூள் முழுவதையும் ஒரு லீட்டர் குடிநீரில் கரைக்கவும்,

(ஒரு லீட்டர் நீர் என்பது 400 மில்லி லீட்டர் அளவுள்ள 2½ சோடாப் போத்தல்களில் அல்லது ஜீவனிப் பக்கெட்டுடன் வழங்கப்படும் பிளாஸ்டிக் கோப்பை போன்ற 5 கோப்பைகளில் அடங்கக்கூடிய அளவு நீராகும்.)



ஜீவனி பானம் கலந்து 24 மணிநேரம் கடந்துவிட்டால், எஞ்சியுள்ள பானத்தை வீசிவிட்டுப் புதிதாகக் கலந்தெடுக்கவும்.




ஒரு பக்கெட்டின்
விலை: ரூ. 5/- மட்டுமே.

ஜீவனியை உங்கள் கூட்டுறவுக் கடையில்
அல்லது அண்மையிலுள்ள மருந்துக் கடையில் வாங்கலாம்

JWT UF 2651

**உயிர் காக்கும் ஜீவனி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீம் சுகாதார தூபம்.
மழைக்காலத்தோடு நுளம்பும் இலையானும் அதிகமாகப் பெருகி உபத்திரவம் தருகின்றன. இவற்றைப் போக்குவதோடு வீடுகளுக்கு புனிதத்தையும், கணகணப்பையும் லட்சுமி கடாட்சத்தையும் உண்டாக்கும்.
''மில்க்வைற் நீம் சுகாதார தூபத்தை'' தணலில் இட்டு புகைத்துப் பாருங்கள்.
எவரும் வாங்கக் கூடியதாக ரூபா 1/- பெறுமதியான பைகளில் உண்டு.
மில்க்வைற், யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

22 - 10 - 1988 சனிக்கிழமை



"கந்தர் சஷ்டி கவசம்"
20 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி ''கந்தர் சஷ்டி கவசம்'' என்ற புத்தகத்தையும், அழகிய முருகன் ஸ்ரிக்கர் ஒன்றையும் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.


## சைக்கிளில் செல்வோருக்கு விடுக்கப்பட்டிருக்கும் கோரிக்கை

யாழ்ப்பாணம் அக் 22
போக்குவரத்து அதிகமான வீதிகளில் சைக்கிள்களில் அருகருகே ஒரே வரிசையில் இருவராகவோ அல்லது மூவராகவோ செல்வதை அனைவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

யாழ் நகரக் கொமண்டன்ட் அலுவலகம் வெளியிட்டிருக்கும் பத்திரிகைக் குறிப்பொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக இளைஞர்களும், யுவதிகளும் சைக்கிள்களில் ஒரே வரிசையில் இருவராகவோ அல்லது மூவராகவோ செல்வது குறித்து அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது விபத்தை ஏற்படுத்துவதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கும்.

எனவே போக்குவரத்து அதிகமான வீதிகளில் சைக்கிள்களில் இவ்வாறு செல்வதை அனைவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ)

## எரிபொருள் நிலையம் மூடப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், அக் 22
யாழ். கூட்டுறவு ஸ்தாபனத்தின் எரிபொருள் நிலையம் மேல் உத்தரவு வரை மூடப்பட்டது.

யாழ் நகரக் கொமாண்டன்ட் அலுவலகம் வெளியிட்டிருக்கும் பத்திரிகைக் குறிப்பொன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கறுப்புச் சந்தை வியாபாரத்தை ஊக்குவிக்கும்விதமாக முறைகேடுகள் நடந்ததை யடுத்தும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விதிமுறைகளுக்குப் புறம்பாக பெற்றோலியப் பொருட்களை விற்பனை செய்ததாலும் யாழ் கூட்டுறவு ஸ்தாபனத்தின் எரிபொருள் நிலையம் மேல் உத்தரவு வரை மூடப்பட்டது.

இவ்வாறு அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-ஐ)

## இந்தியா அவுட்!
### ஷார்ஜா கிரிக்கெட்டில்

ஷார்ஜா, அக்.22
ஷார்ஜா கிண்ண கிரிக்கட் சுற்றுப்போட்டியின் அரைஇறுதி ஆட்டத்தில் இந்திய அணி மேற்கு இந்திய அணியிடம் எட்டு விக்கட்டுக்களினால் தோற்றுப் போனது.

இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடி ஒதுக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கு இந்திய அணி 2 விக்கட்டுகளை மட்டும் இழந்து 40 ஓவர்களில் 175 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றிபெற்றது.

இன்று இறுதிப்போட்டியில் பாகிஸ்தான். மேற்கு இந்திய அணிகள் மோதுகின்றன. [உ-எ]

## கைதிகளின் விடுதலை...

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
தாவது:-
இன்றுடன் (வெள்ளி) பூஸா முகாமில் நீராகாரமின்றிப் பத்துப் போராளிகளின் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் பத்தாம் நாளைக் கடக்கின்றது. மரணமே வாழ்வாகக் கொண்ட எம்மவர்களின் வாழ்க்கை இப்படி இன்னமும் எத்தனை காலங்களுக்கு?

இரண்டு அரசுகளின் தலைவர்களின் கைகுலுக்கல் மூலம் உருவாக்கிய ஜூலை '87' ஒப்பந்தம் தமது இழந்த வாழ்வை மீட்டுத்தரும் என்று நம்பிய இவர்கள் தமது விடுதலையை ஆவலோடு எதிர்நோக்கினர். இவர்களின் நம்பிக்கை முளையிலேயே கருகிவிட்டது.

இவர்களின் கோரிக்கைகளை வழமைபோல் உதாசீனம் செய்த தரங்கெட்ட ஸ்ரீலங்கா அரசு அவர்களின் குரல்களை சிறைகளுக்குள்ளேயே அடக்க முயல்கிறது. நாளுக்குநாள் மரணித்து மெல்ல மெல்ல பயணிக்கும் எங்கள் சகோதரர்களின் குரலை இரட்சிக்கவென வந்த இந்தியாவும் உதாசீனம் செய்கிறது. இவற்றை அம்பலமாக்குவதற்காக, அடக்கு முறைகளைத் தோலுரித்துக் காட்ட தங்களையே பலிக் கடாக்களாக்கி போராடி வருகின்றனர்.

இவர்களின் விடுதலைக்காக விடிவிற்காகவே நாம் போராடுவோமாக.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## நான் ஜனாதிபதியானவுடன் அமைதிப்படையைத் திருப்பி அனுப்புவேன்
### பிரதமர் பிரேமா கூறுகிறார்

கொழும்பு, அக் 22
நான் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவுடன் எனது முதல் நடவடிக்கை அமைதிப் படையைத் திருப்பி அனுப்புவதே.

பிரதமர் பிரேமதாஸ நீர்கொழும்பில் நடந்த பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் இப்படிச் சொன்னார்.

அவர்மேலும்சொன்னதாவது;
எமது நாட்டை விட இந்தியா 60 மடங்கு பெரிய நாடு.

ஆனால் நான் எனது நாட்டின் கௌரவத்தையே பெரிதாகக் கருதுகிறேன். நில விஸ்தீரணத்தை வைத்து பெரியது எது சிறியது எது என்பதைத் தீர்மானிக்க முடியாது.

நாடு துண்டாடப்படுவதை நான் அனுமதிக்க மாட்டேன்.

சில காலத்துக்கு முன் இந்தியாவுக்குச் சொன்னேன், 'எம்மை அழிக்கும் சக்திகளுக்கு உதவாதீர். எம்மை எதிர்ப்பதாக இருந்தால் எம்மை ஆக்கிரமியுங்கள். எமது மூதாதையர்கள் போன்று நாம் இன்றோ அல்லது நாளையோ நாட்டை மீட்போம்''

—இப்படி நான் சொன்னபோது என்னைச் சிலர் கண்டித்தனர்.

அமைதி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இது தருணம் அல்ல என்று நான் திரு. ஜெயவர்த்தனாவை எச்சரித்தேன்.

அமைதி உடன்பாடு 72 மணித்தியாலங்களில் சமாதானத்தைக் கொண்டு வரும் என்று பிரதமர் காந்தி சொன்னார். நான் ஒன்றுமே பேசவில்லை.

இன்று நடப்பது என்ன?

இந்தியத் தூதர் டிக்ஸிற்றைச் சந்தித்துப் பேசினேன்.

அதிகாரம் எனது கைக்கு வந்தவுடன் அமைதிப் படையைத் திருப்புவேன் என்று அவரிடம் சொன்னேன். அதற்கு டிக்ஸிற், வெளிப்படையாகப் பேசுபவர் என்று என்னைப் பாராட்டினார்.

அதுதான் எனது பலம். மக்களின் அபிலாஷைகளை விளங்கிக் கொண்டு நான் பேசுகிறேன் (உ-எ)

## 7 கட்சிகள்,,,

(1ம் பக்கத் தொடர்ச்சி)
டர் சணக அமரதுங்க.

★ ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் வி. பி கணேசன்.

★ மக்கள் ஐக்கிய முன்னணி தினேஷ் குணவர்த்தன.

கட்சிகள் தெரிவித்த கருத்துக்கள் குறித்து அரசு தன் நிலைப்பாட்டை அடுத்த சந்திப்பின் போது தெரிவிக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

அடுத்த சந்திப்பு இன்னும் ஒரு வாரத்தில் இடம் பெறும்.

இத்தகவல்களை அமைச்சர் அத்துலத் முதலியும் ஏழுகட்சிக் கூட்டணியின் உத்தியோகப் பேச்சாளர் திரு. குமார் பொன்னம்பலமும் கூட்டாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்தனர். (உ-எ)

## யாழ். ஆஸ்பத்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
வைத்தியசாலை ஊழியர்கள், இறந்த ஊழியர்களின் உறவினர்கள்உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கலாநிதிநச்சினார்க்கினியன் நிகழ்ச்சியில் உரையாற்ற முற்பட்டாராயினும், இறந்தவர்களை எண்ணிசுமார் 5 நிமிடங்கள் தொடர்ச்சியாக அழுத நிலையில் தமது உரையை இடையிலேயே அவர் நிறுத்திக் கொண்டார். (உ 9)

## கைதிகள்....

(1-ம்பக்கத் தொடர்ச்சி]
படுத்த வேண்டும்.

வடக்குக் கிழக்கு பிரஜைகள் குழுக்களின் இணைப்புக்குழுவெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,-

தமிழ் பேசும் அரசியல் கைதிகள் இதுவரைமுழுமையாக விடுவிக்கப்படாதது பெரும் கவலைக் குரியது.

உடன்படிக்கையின்படி இக் கைதிகள் உடன் விடுவிக்கப்படவேண்டும்.

ஆனால் அவர்களை விடுதலை செய்ய இலங்கை அரசு தயக்கம் காட்டுவது மிக அநாகரிகமான செயலாகும்.

தடுப்பு முகாம்களுக்குள்ளும் வெளியேயும் நடைபெற்ற போராட்டங்கள் காலத்துக்குக் காலம் கைதிகளைவிடுதலை செய்ய வழி வகுத்தன. எனினும். கைதிகள்- குறிப்பாகத் தண்டிக்கப்பட்ட கைதிகள் - இது வரை விடுதலை செய்யப்படவில்லை.

தமக்கு நீதி வழங்கப்பட வேண்டுமெனக் கோரிஅவர்கள்போராட்டத்தில் குதித்திருப்பது நியாயமே.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-ஐ)

## இளைஞர் கொலை!

நேற்று ஊர்காவற்றுறையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில்உதயன்என்பவர் உயிரிழந்தார் இவரது சடலம்ஊர்காவற்றுறை வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

## சத்தியப்,,,,

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
எதற்காக மறுக்கப்படுகிறது? இவற்றை மறுதபாலில் எனக்கு அறிவியுங்கள்.

உங்களிடமிருந்து பதில் கிடைக்காத பட்சத்தில் அரசமைப்புச்சட்டம் எனக்கு வழங்கிய உரிமையை நீங்கள் மறுத்து விட்டீர்கள் என்றே நான் எடுத்துக் கொள்வேன்.

-இப்படி திரு ரெனிடி மெல் தனது சடிதத்தில் கூறியிருக்கிறார். (உ எ)

## நிலைமை...

[1-ம் பக்கத்தொடர்ச்சி)
யலுக்கு ஆதாரமே இந்திய- இலங்கை ஒப்பந்தம் தான். வடக்கு, கிழக்கில் நிலைமை சீரடைந்ததும் இந்திய அமைதிப் படையினர் அங்கிருந்து படிப்படியாக வாபஸ் பெறப்படுவர்.

இப்படி ஐ தே. க ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் மேலும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. (உ-எ)


மானிப்பாயில் - இன்றும் நாளையும்
ஆத்மீகப் பாடல்கள்
இடம்:
மானிப்பாய் இந்துக் கல்லூரி,
மானிப்பாய்.
திகதி: 22-10-88; 23-10-88
நேரம்: தினமும் 3-30 மணி
—பிரவேசம் இலவசம்—
அனைவரும் வந்து ஆசீர்வாதம் பெறுங்கள்
WILLIAM MATHER CHURCH
ASSEMBLY OF GOD
MANIPAY
(7366)

"சீமாட்டி"யின்
முக்கிய அறிவித்தல்
யாழ்நகர்,
சுன்னாகம்
ஆகிய இடங்களில்
இயங்கிக்
கொண்டிருக்கும்
எமது
'சீமாட்டி'
ஸ்தாபனங்களைத் தவிர வேறெங்கும் எமக்குக் கிளைகள் இல்லை என்பதை பொது மக்களுக்கு அறியத்தருகின்றோம்.
(C 640)


## மரண அறிவித்தல்கள்

### திரு. வே. தம்பிமுத்து [பப்பா]

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கொக்குவில் வாசியுமான திரு. வேலுப்பிள்ளை தம்பிமுத்து [பப்பா] அவர்கள் 19 - 10 - 88 புதன்கிழமை காலமானார். அன்னார் இராசலட்சுமியின் (மஞ்சம்மா) அன்புக் கணவரும் நடராஜா, பத்மாவதி, தியாகராஜா, செல்வராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாதேவா, சரஸ்வதி, கமலாதேவி, லலிதாராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஞ்சிற், நிரஞ்சன், நந்தினி, விஜித்தா, விபுலன், துஷ்யந்தி, சுதர்சன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 23 - 10 88 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
த. செல்வராஜா,
65, கோவில் வீதி,
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.
(7526)

### திரு. இராசரத்தினம் யோகராசா

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ். சினிவாசகம் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு இ. யோகராசா அவர்கள் 20 10 88 இல் அகால மரணமானார். அன்னார் வேலணை மேற்கு வி. மு. இராசரத்தினம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும், ரஞ்சியின் அன்புக் கணவரும், யோ. கீர்த்தியாவின் அன்புத் தந்தையும், அமரர் கோபாலகிருஷ்ணன், திருமதி கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் அன்பு மருமகனும், காஞ்சனமாலா, ரஞ்சிதமலர், சிவகலை, ஸ்ரீஸ்கந்தராசா, மகேந்திர ராசா (கனடா), ஞானகலை, ஆனந்தராசா, நிர்மலா, அழகராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் மாசிலாமணி, வரதராசா, நடனசிகாமணி, ஜெயராணி, ரவி, ரதிஸ்சன், ரஞ்சன், அம்பிகாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று (22 - 10 88) பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: வி. மு. இராசரத்தினம்.
32, சினிவாசகம் வீதி,
கொட்டடி.
(7384)

### A. V. S, குணரெத்தினம்

உரிமையாளர்
(புவனேஸ்வரி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்)

காலஞ்சென்ற A. V. செல்லத்தம்பி அவர்களின் ஒரே மகனும் திருமதி கோமதியம்மா அவர்களின் அன்புமகனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கார்த்திகேசு மாணிக்கம் திருமதி பராசக்தி மாணிக்கம் அவர்களின் அன்பு மருமகனும். மன்மதராஜா [ஹப்பி ரியூனர்ஸ்], மகுடராணி, விஜயராஜா [இத்தாலி], புஸ்பராஜா [நிப்போன் ரி. வி. சென்ரர்], யோகராஜா [ஹப்பி ரியூனர்ஸ்], நகுலேஸ்வரி [கனடா], குலேந்திரராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாதலிங்கம் [செல்லையா சிவபாதலிங்கம் ஜுவலர்ஸ்], ஜெயக்குமார் [கனடா], வசந்தி கௌரி, ரஜனி ஆகியோரின் மாமனாரும், பவளம், மக்கள்வரி, தியாகராசா [சட்டத்தரணி], மணிவாசகம், மாயாவதி, தங்கேஸ்வரன், பேரின்பமூர்த்தி [ஜேர்மனி] ஆகியோரின் மைத்துனரும் பொன்னுச்சாமி, சோமசேகரம்பிள்ளை [தொழில் நுட்ப உத்தியோகத்தர்], இராஜலிங்கம் [மாயா ரேடிங் கொம்பனி, கொழும்பு] ஆகியோரின் சகலனும் ரூபன், ரஜனி, ரஜீவ், ரேகா, சுபாஜினி, சுகிர்தா, சுவர்ணா, சுலக்ஷனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று சனிக்கிழமை (22-10-88) முற்பகல் 10 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனக் கிரியைகள் நடைபெறுமென்பதை உற்றார், உறவினர்களுக்கும் ,நண்பர்களுக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
மகன் குலேந்திரராசா
செல்லையா சிவபாதலிங்கம்,
218 H கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (7527)

### நாகலிங்கம் விவேகானந்தன்

இடைக்காட்டைச் சேர்ந்த நாகலிங்கம் விவேகானந்தன் (மின்னியல் துணைப்பொறியியலாளர் இலங்கை மின்சார சபை சுன்னாகம்) காலமாகிவிட்டார். அன்னார் காலம்சென்ற ஆசிரியர் நாகலிங்கம், திருமதி நாகலிங்கம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரனும், ஓய்வு பெற்ற ஆசிரியை இரத்தின பூபதியின் (மன்னார்) அன்புக் கணவரும், நாகேசனின் (சென். ஜோன்ஸ் கல்லூரி), அன்புத்தந்தையும், கிருஸ்ணநந்தனின் அன்புச் சகோதரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சன்னதி வீதி இடைக்காட்டிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று சனிக்கிழமை (22-10-88) பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

தகவல்
நா. கிருஷ்ணநந்தன்
இடைக்காடு
அச்சுவேலி.
(7390)

### திரு. பிலுப்புப்பிள்ளை பீற்றர்சிங்கம்

திரு. பிலுப்புப்பிள்ளை பீற்றர்சிங்கம் அவர்கள் காலமாகி விட்டார் இவர் திருமதி குயின்இமக்குலேற் லவ்ளியின் அன்புக் கணவரும் செல்வன் அன்ரனி யூட் இராஜசிங்கம் (ராஜா) செல்வன் ரோணி ரொம் விக்கிரமசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் பூதவுடல் 22-10-1988 சனிக்கிழமை பி. ப. 3.00 மணிக்கு (சொய்யாத் தோட்டம் கிறிஸ்து அரசர் தேவாலயத்தில் திருப்பலி பூசையுடன்) யாழ் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
P. A. J. இராஜசிங்கம்
[illegible] வீதி,
சொய்யாத்தோட்டம்.
(7383)

### திரு. வீரவாகு அப்பாத்துரை

அரியாலையைச் சேர்ந்த திரு. வீ. அப்பாத்துரை காலமாகி விட்டார். இவர் காலம்சென்ற வீரவாகு - சின்னத்தங்கம் ஆகியோரின் புதல்வனும், காலம்சென்ற அன்னப்பிள்ளை, காலம்சென்ற தம்பிஐயா, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்லம்மாவின் அன்புக் கணவரும், திருமதி தவமணி, திரு உபயசேகரம் (ஆசிரியர், யா/கனகரத்தினம் ம. ம. வி.) ஆகியோரின் அன்புத் தந்தையும், தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய கலால் திணைக்கள உத்தியோகத்தர்), திருமதி யோகேஸ்வரி (ஆசிரியை, யா/விக்கினேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும், திரு. திருமதி ஜீவேந்திரா - கலாநிதி (அன்றீஸ் நிறுவனம்), தருமசீலன், தியாகசீலன், கேமலாநிதி, கோபி, செந்தூர் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இல. 486, கண்டி வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து காலை 9-00 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

தகவல் :
திரு. உபயசேகரம்
(7391)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 22-10-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Saturday 22nd October 1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் - கொழும்பு
விமான சேவை விசேட போக்குவரத்து வசதியுடன் தினசரி நடைபெறுகிறது. முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.
TELEX MESSAGES, கடிதங்கள், சிறு பொதிகள் விமான மூலம் அனுப்பப்படும்.
MACK TRAVELS
1st - Lane, Pt - Pedro Road, Jaffna.



சஞ்சீவி சஞ்சிகை

22-10-1988 சனிக்கிழமை



★ குறைந்த கட்டணத்தில் விமான டிக்கற் CONFIRMATION, RECONFIRMATION and CANCELLATION
★ பாஸ்போட் பொண்டிங் இந்தியன். விசா.
ஆகியவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்.
MACK TRAVELS
Jaffna.


கருத்துக் கலசம் — மயூரா

## சீண்டாதீர் மனிதர்களே!

புரட்டாதி கடந்து ஐப்பசியும் பிறந்துவிட்டது. வானம் பொய்த்துவிட்டது. ஆவணி, புரட்டாதி மாதங்களில் மழையை மருந்துக்கும் காணமுடியவில்லை. அதனால் வயல் நிலங்கள் வெறுமனே வரண்டுபோய்க் கிடக்கின்றன.

மாடுபூட்டி நிலம்உழுது, ஆறுமாத நெல் விதைத்து, தையிலே அறுவடைசெய்யும் பழைய காலமாக இருப்பின், பெரும்போகம் இனி ஆகாது என்ற நிலைமையாகிவிடும்.

ஆனால் காலம் மாறி இப்போது புதுக்காலம் நடப்பதால் பெரும்போகத்தை இனியாவது செய்யலாம் என்ற ஒரு நம்பிக்கை: உழவு இயந்திரம், மூன்று மாதத்தில் குலைதள்ளும் நெல்விதை இனங்கள் என்று இருப்பதால் ஐப்பசியில் மழை வந்தாலும் பரவாயில்லை என்ற நிலை. ஆனால் போதியளவு பொழியவேண்டுமே...!

மழை ஏன் பொய்க்கிறது? பருவகாலங்கள் ஏன் தவறுகின்றன? அல்லது ஏன் மாறிவருகின்றன, பிந்துகின்றன?

வளையக்கூடாத செங்கோல் வளைந்தால், நாட்டை ஆளும் மன்னன் நெறிமுறை தவறிவிட்டால், வானம் பொய்ப்பதாக முன்னோர் சொல்வர்.

ஆசியாவுக்கு நெல் தந்த ஈழநாட்டில் கடந்த பல வருடங்களாக 'மன்னவன்' செங்கோல் வளைந்து போயிற்று! அதனை நிமிர்த்த எவராலும் முடியவில்லை. மேலும் மேலும் மண்ணை நோக்கி அது வளைகிறது!! அதன் விளைவே வானம் பொய்க்கக் காரணம் எனலாமா? கொடிய மன்னன் ஆட்சியில் எப்போதும் வரட்சியும், பசியும், பஞ்சமும்தான் விளைபொருள்கள்.

இயற்கைச் சமநிலை ஒன்று உண்டு. Ecological Balance என்பது அது. அதில் சிறிது பிறழ்ச்சி உருவாகினாலும் இயற்கையின் விளைவு பாதகமாகிவிடுகிறது. இயற்கை வளங்கள் ஒரே வட்டத்தில் சுற்றிச் சுழன்று மீண்டும் தமது பழைய நிலையை அடைகின்றன.

இந்த இரண்டினையும் புரிந்து கொள்ளாமல், காடுகள் அழிக்கப்படுகின்றன. கனிவளங்கள் சேதப்படுத்தப்படுகின்றன. நீர்வளம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. இன்னோரன்ன பாதக நடவடிக்கைகளால் சுற்றுப்புறச்சூழல் கெட்டுப் போகிறது.

இவை இயற்கையின் இயற்கைத் தன்மையையும் கொடுத்து, மனிதனின் சக்தியையும் கெடுக்கின்றன.

ஆகவே மனிதன் தனது செயற்பாடுகளை; இயற்கையின் நலமும், வளமும் கெடாமல் கட்டுப்படுத்தி, ஒரு சீரமைத்தல் அவசியம். அப்படி இல்லையென்று இயற்கையைச் சீண்டினால் அது மனிதனுக்கு எதிராகச் சீற்றம் கொள்வது நிச்சயம். அந்தச் சீற்றத்தின் விளைவு மனிதனுக்குப் பேரழிவாகவே முடியும். இது குறித்து மனிதன் எச்சரிக்கையாக நடந்து கொள்வது மிகவும் அவசியம். ★

# தன்மகனின் வீரமரணத்தைக் கேட்டு ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கும் தாய்

இலக்கியம்

உடலை வருத்தி, ஊனை உருக்கி, உதிரம் சிந்தி மகவைப் பெறுகிறாள் மாதா.

அப்போது அவள் அனுபவிக்கும் சிரமம்தான் எத்தகையது? அதனால் தானன்றோ பிரசவித்த தாயைப் பார்த்து 'பெற்றாயோ, பிழைத்தாயோ' என்று கேட்கிறோம்.

சொல்லொணா வேதனை அனுபவித்து, அவள் பெற்ற செல்வம் அவள் குழந்தை. அந்தக் குழந்தையைப் பெற்றெடுத்ததும் அவள் அடையும் உவகை-மகிழ்வு எத்துணை உயர்வுடையது!

இன்னலின் பின் கிடைக்கும் இன்பம் அல்லவா அது? அந்த இன்பம் உயர்வுடையது; ஒப்பீடற்றது.

ஒன்றின் பிறப்பில் கிடைக்கும் இன்பம் அது. அந்த இன்பத்தை அந்தத் தாய் மீண்டும் எப்போது பெறுகின்றாள் தெரியுமா?

தன் பிள்ளையின் பிறப்பில் கிடைத்த இன்பம், மீண்டும் அந்தக் குழந்தையின் இறப்பில் அவளுக்குக் கிடைக்கிறது.

இதுதான் வீரமறவர் குலத்தில் வந்த தமிழ்த்தாயின் மாண்பு.

ஜனனத்தில் கிடைத்த மகிழ்வை, வீரமரணத்தில் ஜனித்துக் கொள்ளும் அவள் மாண்புதான் தமிழ் இனத்தை இன்றும் வீரமறவர் குலமாக வழிநடத்திச் செல்கிறது.

★ ★ ★

'ஈன்ற பொழுதில்
பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்
கேட்டதாய்'

என்கிறார் வள்ளுவர்.

வீரமறவர் குலத்தாய் பெற்றெடுத்த செல்வன், சான்றோன் ஆகத் திகழ்வதற்கு வள்ளுவர் காட்டும் சால்பு என்ன?

அதற்கும் அவரே பதிலுரைக்கின்றார்.

'சால்பிற்குக் கட்டளை
யாதெனில் தோல்வி
துலையல்லார்
கண்ணும் கொளல்'

என்கிறார் வள்ளுவர்.

சால்பிற்கு உரைகல் போன்று மதிப்பிடும் கருவி எதுவென்றால் - தமக்குரிய தோல்வியைத் தாழ்ந்த இடத்திலும் ஏற்றுக் கொள்ளும் பண்பாகும்.

வீரனுக்குச் சால்பு முதலில் வெற்றி. அது எட்டமுடியாததாகிவிட்டால் அவனுக்குக் கூட, உரிய தோல்வியை ஏற்றுக் கொள்ளுவதுதான் சால்பு.

அவ்வாறாயின் வீரன் தோல்வியை ஏற்றுக்கொள்வது எங்ஙனம்? புறமுதுகு காட்டி ஓடியா? அல்லது சரணடைந்தா?

இல்லை. இல்லை. இறுதிவரை போராடித் தன் உயிர் மாய்த்து வீரமரணம் எட்டும் போதுதான் அவன் உண்மை வீரனாகின்றான்.

அவனுக்குச் சால்பு அதுதான்.

அந்த சால்பின் வழி ஒழுகி, அவன் சான்றோன் ஆன செய்தி கேட்டு 'ஈன்ற பொழுதிலும் பெரிதுவக்கின்றாள்' ஒரு தமிழ்த்தாய்.

புறநானூற்றிலே மனதை நெகிழ வைக்கும் ஒரு காட்சி!

வற்றி, ஒடுங்கிய மென்தோல் போர்த்த முதியவள் அவள். அவளின் தோலிலே நரம்புகள் புடைத்துத் தோன்றுகின்றன. தன் மகனைப் போர்க்களம் அனுப்பிவிட்டு பதிற் செய்தி கேட்கக் காத்திருக்கிறாள் அந்த அபலை.

அவளின் மனதைப் புரியாதோர் - அவள் மகனின் வீரம் அறியாதோர் - அவளைக் குழப்ப முயலுகின்றனர். 'உன் மகன் போரிலே புறமுதுகிட்டு ஓடிவிட்டான்' எனப் பசப்புரை கூறுகின்றனர்.

அது கேட்டு வெஞ்சினம் கொண்டு கர்ச்சிக்கின்றாள் அந்த வீரத்தாய்.

'என் மகன் வீரன். அவன் போரிலே புறமுதுகிடக் கூடியவன் அல்லன். அப்படிப் புறமுதுகிடுவானாகில், அதற்கு நான் என் முலைப்பாலுடன் அவனுக்கு ஊட்டி வளர்த்த வீரத்தில்தான் தவறு. அது என் தவறு. ஆகையினால் அவனுக்குப் பாலூட்டி வளர்த்த என் முலையை அறுத்து எறிவேன்' என்று வஞ்சினங் கூறி, கையில் வாளெடுத்து வீராவேசத்துடன் போர்க்களம் புகுகின்றாள்.

குருதியில் நனைந்து செங்களமாய் நிற்கும் போர்முனையில், வீழ்ந்துபட்டுக் கிடக்கும் பிணங்களைப் புரட்டிப் பார்க்கின்றாள்.

அந்தோ! அச்செங்களத்தில் சிதைந்து வேறுகி வீழ்ந்து கிடக்கும் தன் மகனின் சடலத்தைக் கண்டாள்: வஞ்சினம் தணிந்தது. அப்போது அவளுக்கு ஏற்பட்ட மகிழ்வு, அவனை அவள் பெற்றபோது கொண்ட மகிழ்விலும் பெரிதாக இருந்தது.

ஈன்ற பொழுதில் பெரிதுவந்தாள் அந்த வீரத்தாய்.

காக்கை பாடினியார் நச்சொள்ளையார் இயற்றிய புறநானூற்றுப் பாடல் இது.

" நரம்பு எழுந்து உலறிய
நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின், முதியோள்
சிறுவன்
படை அழிந்து மாறினன்"
' என்று பலர் கூற,
'மண்டு அமர்க்கு உடைந்தன்
ஆயின், உண்ட என்
முலை அறுத் திடுவென்,
யான்" எனச் சினைஇக்,
கொண்ட வாளொடு
படுபிணம் பெயராச்,
செங்களம் துழவுவோள்,
சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும்
பெரிதுஉவந் தனளே!"

★ ★ ★

புறநானூற்றிலே மற்றொரு வீரத்தாய்!

இவளும் முதியோள். மீனைக் கொத்தித் தின்னுகின்ற கொக்கின் இறகு வெண்மையாகக் காணப்படுகின்றதல்லவா? அது போன்று வெள்ளிய நரைத்த கூந்தலை உடையவள் இம்மாது. ஆனால் இவள் மகனோ மிக்க இளையோன் சிறுவன். அவனைப் போருக்கு அனுப்புகிறாள் அவள்.

போரிலே தன்மேல் எதிர்த்து வந்த களிற்றை வீராப்புடன் கொன்று தானும் அப்போரிலே புண்பட்டு இறந்தனன். அது கேட்டு அவள் அன்னை ஈன்ற பொழுதிலும் பெருமகிழ்வு கொள்கின்றாள். அவள் கண்களில் இருந்து நீர்த்துளிகள் பெருகின. வெதிர மலையில் மூங்கிற் காடுகளில் பெய்யும் மழையில் சிதறுகின்ற நீர்த்துளிகளிலும் பார்க்க அவள் சொரிந்த கண்ணீர்த்துளிகள் அவ்வேளை மிகுதியாயிருந்தன.

"மீன் உண் கொக்கின்
தூவி அன்ன
வால்நரைக் கூந்தல்
முதியோள் சிறுவன்
களிறு எறிந்து பட்டனன்"
[illegible] என்னும் உவகை
ஈன்ற ஞான்றினும்
[illegible] பெரிதே; கண்ணீர்
நோன்கழை துயில்வரும்
வெதிரத்து
வான்பெயத் தூங்கிய
சிதரினும் பலவே."

புறநானூற்றில் பூங்கணுத்திரையர் இயற்றிய பாடல் இது.

★ ★ ★

வீரத்தமிழ்த் தாய் தன் மகனுக்கு முலைப்பாலுடன் வீரத்தை ஊட்டி வளர்க்கின்றாள். அதனைக் காட்டும் மற்றோர் காட்சி. இதுவும் புறநானூற்றில்தான்.

கடல்போல பரந்து கிடக்கும் போர்க்களம் அது. அந்தக் களத்திலே கூரிய வேலைக் கையிலே பற்றி, பகைவரின் படையைப் பிளந்து இடையறுத்துச் சென்று அதனை அழிக்கிறான் ஆற்றலில் சிறந்த ஒரு வீரமறவன். இறுதியில் பகைவர் தாக்குதலுக்கு இலக்காக அவன் வீரமரணமடைகின்றான். அவனுடலை சின்னாபின்னமாக்கிச் சிதைத்து விட்டனர் பகைவர்கள்.

அஞ்சி ஓடாமல், வெஞ்சினம் கொண்டு மோதி, புண்பட்டு, துஞ்சிக் கிடக்கும் தன்மகனைப் போர்க்களத்தின் நடுவே பார்க்கின்றாள் அந்த வீரத்தாய். தன் மகனின் வீரத்தைக் கண்டு மகிழ்ந்தது அந்தத் தாயுள்ளம். அவளின் வற்றிய முலைகளிலே பால் ஊறிச் சுரந்தது.

"பெற்ற ஞான்றிலும் பெரிது உவந்தனள்" என்பது இது தான்.

'கடல்கிளர்ந் தன்ன
கட்டூர் நாப்பண
வெந்துவாய் மடித்து,
வேல்தலைப் பெயரித்
தோடு உகைத்து எழுதரூஉத்
எதுரந்துறி ஞாட்பின்
வருபடை போழ்ந்து
வாய்பட விலங்கி,
இடைப்படை அழுவத்துச்
சிதைந்து வேறாகிய,
சிறப்புடையாளன் மாண்புகண்
டருளி,
வாடுமுலை ஊறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலைத்
தாய்க்கே.
★



- அறிவுநாயகன் -

# அமெரிக்காவில் பரவி வரும் சைவ உணவு மோகம்!

அமெரிக்காவில் சைவ உணவு சாப்பிடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 1985 ஆம் ஆண்டுக்குப் பின் மேலும் 20 லட்சம் பேர் சைவ உணவுக்கு மாறியுள்ளதாக 'வெஜிடேரியன் டைம்ஸ்' என்னும் சஞ்சிகை கூறுகிறது.

### ஆர்வம் ஏன்?

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னர் அமெரிக்காவில் சைவ உணவுகள் மீது மோகம் ஏற்பட்டது. அப்போது அது ஹிப்பிகளிடையே ஒரு 'பாஷன்' ஆக இருந்தது.

ஆனால் இப்போது ஆரோக்கிய அடிப்படையில் சைவ உணவுப் பழக்கம் பரவி வருகிறது.

இறைச்சி உண்பது குறிப்பாக மாட்டிறைச்சியையும், ஆட்டிறைச்சியையும் உண்பது ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல என்ற கருத்து ஏற்பட்டுள்ளது.

### கொழுப்புச்சத்து

உணவில் இந்த இரு இறைச்சிகளிலும்தான் மிகுந்த கொழுப்புச்சத்து உள்ளது என்று பாஸ்டனில் உள்ள டஃப்ட்ஸ் பல்கலைக்கழகத்தின் [illegible] தியப் பள்ளியின் சமுதாய ஆரோக்கியப் பேராசிரியர் டாக்டர் ஷெர்வுட் கோர்பாக் (Sherwood Gorbach) கூறுகிறார்.

கொழுப்புச்சத்துக் குறைவாக உள்ள உணவு வகைகளைச் சாப்பிடுவதானது இருதய நோய், இரத்த அழுத்தம், நீரிழிவு ஆகிய நோய்களைத் தடுக்க உதவுவதாக அல்லது அந்நோய்களைக் குணப்படுத்த உதவுவதாகக் கருதப்போதுமான ஆதாரம் உள்ளது என்று அவர் சொன்னார்.

தவிர, கொழுப்புச்சத்துக் குறைந்த உணவுகள் பெருங்குடலிலும், முலையிலும் புற்றுநோய் ஏற்படுகிற ஆபத்தைக் குறைப்பதாகக் கருதுபவர்களில் நானும் ஒருவன் என்றும் அவர் சொன்னார்.

சைவ உணவு சாப்பிடுபவர்கள் இறைச்சி உண்பவர்களை விடஒல்லியாகஇருக்கிறார்கள்.

சைவ உணவுப் பழக்கத்துக்கு மாறுவதற்குக் குறைந்தபட்சம் இந்த ஓர் அம்சம் போதும் என்றார் அவர்.

**தி. மேனகன்**

எனவே பல நகரங்களிலும் குறைந்தபட்சம் ஒருசில ஓட்டல்களில் சைவ உணவு வகைகள் தயாரித்து அளிக்கப்படுகின்றன.

சைவ உணவு வகைகளைத் தயாரித்து அளிக்க ஆரம்பித்த ஓட்டல்காரர் ஒருவர் கூறுகையில்; தனது வாடிக்கையாளர்களில் பலர் கோரியதன் பேரில் இவ்வாறு செய்வதாகத் தெரிவித்தார்.

இறைச்சி உணவுகளைச் சாப்பிடுவோரும் முன்னைவிட இப்போது இறைச்சி அளவைக் குறைத்துவிட்டதாகவும் அவர்சொன்னார்.

1978இல் அமெரிக்காவிலும், கனடாவிலுமாக சைவ உணவு கிடைக்கும் ஓட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகளின் எண்ணிக்கை 350 ஆகத்தான் இருந்தது. இப்போது இவற்றின் எண்ணிக்கை 1000க்கும் மேலாக உயர்ந்துள்ளது. 'வெஜிடேரியன் டைம்ஸ்' சஞ்சிகை தனது வாசகர்களின் வசதிக்காக இவற்றின் நீண்ட பட்டியலைத் தனது இதழில் பிரசுரித்தது.

இப்போது அமெரிக்காவில் சுமார் 80 லட்சம் 'சைவர்கள்' உள்ளனர்.

இவர்களில் கலைத்துறையைச் சேர்ந்த பிரபல நட்சத்திரங்களும் அடங்குவர்.

அமெரிக்க சட்டமன்ற உறுப்பினர்களிலும் சைவ உணவு ஆர்வலர்கள் உள்ளனர்.

கீழ்ச்சபை உறுப்பினரான ஆண்ட்ரு ஜாகப்ஸ் வாஷிங்டனில் உள்ள தமது அலுவலகத்தில் வாரத்தில் சில நாட்களில் தாமாக சைவ உணவு தயாரித்துச் சாப்பிடுகிறார். அவர் 1970 ல் சைவ உணவுக்கு மாறியவர்.

"இந்த 18 ஆண்டுகளில் ஒரு நாள் கூட நான் இப் பழக்கத்தைக் கைவிட்டதில்லை. இப்போது இறைச்சியைக் கண்டாலே வெறுப்பாக உள்ளது. சைவ உணவு சாப்பிடுவதன் மூலம் ஆரோக்கியமாக, வலுவாக இருக்கிறேன் என்கிறார்.

### ஊட்டச்சத்து

சைவ உணவுக்கு மாறிய தற்குப் பிறகு தங்களுக்கு சிந்தனைத் தெளிவும், செயலாற்றலும் உள்ளதாக சைவ உணவு சாப்பிடுபவர்கள் கூறுகின்றனர்.

ஊட்டச்சத்து உணவு நிபுணர்கள் கூறுகையில், இறைச்சி சாப்பிடுவதை நிறுத்துவதால் உடலுக்குத் தீங்கு எதுவும் ஏற்படாது என்று குறிப்பிட்டனர்.

"திட்டமிட்ட ரீதியிலான சைவ உணவு முற்றிலும் ஆரோக்கியமானதே. உணவில் சோடியம், பூரிதக் கொழுப்பு, கொலஸ்ட்ரால் ஆகியவற்றைக் குறைத்துக் கொண்டு நார்ச்சத்தும் மாவுச்சத்தும் அடங்கிய பொருள்களை அதிகம் சாப்பிடவேண்டும் என்று வைத்தியத்துறையினர் கூறும் வழிகாட்டிக் குறிப்புகளை வைத்துப் பார்க்கும் போது சைவ உணவு அதற்கு உகந்ததே" என்று ஒரு நிபுணர் கூறினார். (எ-4)

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சஞ்சீவி சிறுகதை

- காரை அருள் சர்வேஸ்வரன் -

கோவளம் கடற்கரையின், புழுதியினைக் கைகளினாற் கிளறிக் கொண்டே, கடந்த கால நினைவுகளைத் தன் சிந்தனைத் திரையிலே படரவிட்டுக் கொண்டிருந்தான் பாபு.

அவனுடைய வாழ்க்கையின், பல அத்தியாயங்கள் துளசியினாலேயே பூரணப்படுத்தப்பட்டிருந்தன. துளசியினை அவனிடமிருந்து பிரித்து; தன்னுடனேயே கூட்டிச் சென்ற மனோகர் மீது, பாபுவிற்கு உள்ளூரக் கோபம் தான்.

அவளை, மனோகர் கூட்டிச் சென்றதனால், அவளுடைய, எதிர்காலம் நன்றாக, அமையுமென்பதனை நினைக்கின்ற பொழுது, பாபு, அந்தப் பிரிவுத் துயரின் மத்தியிலும், ஒரு வித இனம்புரியாத தேறுதலினை அடைந்தான்.

உற்றார், உறவினர் யாருமற்ற நிலையில், தானுந் தன் அலுவலகமும் என்றிருந்த பாபுவிற்குத் துளசியின் சகவாசம், அவனுடைய வாழ்க்கையினை ஓரளவிற்கேனும் அர்த்தமுடையதாக்கியது.

வெளிச்ச வீட்டின் படிக்கட்டுக்கள், தாழைமரத்தடி, அந்த வளைந்த தென்னைமரம், கடற்கரைப் பாறைகள்...... என்று தானுந் துளசியும் ஒன்றாகத் தனியாகவிருந்து, மகிழ்ந்த இடங்களெல்லாம் ஒரு கணம் அவன் நினைவில் தோன்றி மறைந்தன.

துளசி, மனோகருடன் சென்றது. பசுஞ்சோலையிலிருந்து பாலைவனத்திலே விட்டது போன்ற உணர்வினை அவனுக்கு ஏற்படுத்தியது. ஒவ்வொருநாளும் மாலையில் துளசியின் வரவினை எதிர்பார்த்து ஏங்கிக் கொண்டிருந்த அவனுடைய கண்கள், இன்று இலட்சியமில்லாமல் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

துளசியின் மிருதுவான கரங்களைத் தன் கரங்களிற் பதித்தவாறே, அவளுடைய பூவிதழ் போன்ற கன்னத்தினைத் தடவியவாறே அவனுடைய மடியில் அவள் இருந்தவாறே, அவனுடன் அன்புமொழி பகர; அவன் அவளுடன் கழித்த, அந்த இன்பமயமான மாலைப் பொழுதிற்கெல்லாம் கண்கண்ட சாட்சிகள், வந்து வந்து போய்க்கொண்டிருக்கின்ற கடலலைகளும், மறைந்துகொண்டிருக்கின்ற மாலைக்கதிரவனுந் தான்.

பாபுவின் சிந்தனைக்கு, அந்தச் சிரிப்பொலி முற்றுப்புள்ளி வைத்தது. சிரிப்பொலி வந்த திசையில் கண்களைச் சுழலவிட்ட பாபு, அங்கே தன்னையே ஒரு ஜோடிக்கண்கள் நோக்கிக் கொண்டிருப்பதனைக் கண்டான்.

அந்த ஒரு ஜோடிக்கண்களுக்குரியவள் தான், அந்தச் சிரிப்பொலியின் சொந்தக்காரியுமாவாள் என்பதனை ஊகித்துக் கொள்ள பாபுவிற்கு, அதிகநேரம் பிடிக்கவில்லை:

மைதிலி! மைதிலி! என்று எங்கிருந்தோ வந்த குரல் அந்தக்கணநேர அமைதியைக் கலைத்தது. குரல் வந்த திசையை நோக்கி அவள் நடைபயிலத் தொடங்கினாள்.

ஓ! இவளுடைய பெயர் தான் மைதிலி என்று நினைத்துக் கொண்ட பாபு, வைத்த கண்களை இமைக்காமல், அவளது பின்னழகைப் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் கடற்கரையில் இன்னும் எத்தனையோபேர் இருக்கின்றார்கள் என்பதையெல்லாம் மறந்தவனாக அவளையே அவன் பார்த்துக்கொண்டிருந்தான்.

மைதிலி அங்கிருந்து மறைந்துவிட, இனி நானும் தொடர்ந்து இங்கு நின்று என்ன பயன்? என்பது போல் கதிரவனும் அங்கிருந்து மறையத் தொடங்கினான்.

தன் வீட்டிற்கு வந்த பாபுவின் மனத்திரையில், அன்று மாலை நடந்தவையெல்லாம் கடலலைகளைப் போலவே, மாறிமாறி வருவதும்,போவதுமாக அவனைச் சீண்டிக்கொண்டிருந்தன.

மைதிலி, தானாகவே தன்னை நோக்கி வந்தது, தன்னைப் பார்த்துச் சிரித்தது, பதிலுக்குத் தானுஞ் சிரித்தது, அதற்கிடையே அவளுக்கு அழைப்பு வந்தது என்று ஒவ்வொன்றாக அவன் நினைத்துப்பார்த்தான்.

அவளுடைய மாதுளைநிறம், உயர் அழுத்த மின்னோட்டத்தினைப் பாய்ச்சுவது போன்ற கண்கள், முத்துப்பற்கள், சுருளான தலைமுடி, ஓடர் கொடுத்து எடுத்துப் பதித்தது போன்ற எடுப்பான மூக்கு... என்று ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்த்த பாபு, பிரமன் எத்தனை சிறந்த ஒரு கலைஞன் என்று தனக்குள் நினைத்துக் கொண்டான்.

பாபு திருமணமாகாதவன். சுருள் கேசமும், நறுக்கு மீசையும் எடுப்பான தோற்றமும் கொண்டவன். எந்தப் பெண்ணுமே, ஒரு முறை மறைந்து நின்று, அவன் அழகினைப் பருகிட வேண்டுமென்று நினைக்க வைக்கக் கூடிய அழகன்.

அவசர அவசரமாக, தன் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய பாபு, உள்ளத்திலே இனம் புரியாத உவகை பொங்க, முதல் நாள் மாலை போல் இன்றைய மாலையும் அமையாதா? என்ற ஏக்கத்துடன் சென்று கடலலைகளைக் கால்களினால் தட்டியவாறே பாறையொன்றிலமர்ந்திருந்தான்.

இளஞ்சிவப்பு நிறத்தில் ஏதும் அசையக் கண்டால், அது மைதிலியா? என்று விழித்துப் பார்ப்பதும், பின் ஏமாற்றத்துடன் கண்களினை வாபஸ் பெற்றுக்கொள்வதுமாக இருந்தான். நேற்று மைதிலி அணிந்து வந்திருந்த இளஞ்சிவப்பு நிற ஆடைகூட, அவனின் மூளையின் மூலைமுடுக்கெல்லாம் தொங்கிக் கொண்டிருந்தது.

திடீரெனப் பின்னால் வந்த யாரோ அவனுடைய கண்களிரண்டையும் கரங்களினால் பொத்த, தன் கண்களைப் பொத்திய கரங்களைத் தன் கரங்களினால் பற்றிய பாபு தன் கண்களைத் திறக்காமலே அந்த மிருதுவான கரங்கள் கள்தான் இதுவரைவலை வீசிக் கொண்டிருந்த மீனினுடைய கரங்கள்தான் என்பதனை உணர்ந்து கொண்டான்.

இளம்பச்சை நிறத்திலணிந்து, கைகளில் வளையல்கள் குலுங்க நின்ற அவளைத் தன்னருகில் அமரும்படி அவன் கேட்க, அவளும் மறுப்பின்றி அமர்ந்துகொண்டாள்.

ஒரு கணம் பாபு, தனக்குள்ளேயே அன்றொரு நாள் இப்படித்தானே துளசியுடன் இருந்தேன். அன்று தான் எனக்கும் துளசிக்குமிடையிலான கடைசிச் சந்திப்பு.

அதற்கடுத்த நாள் அவள் மனோகருடன் சென்று விட்டாளே என்று நினைத்தான்.

துளசியின் பிரிவினை இந்த மைதிலியின் வரவினால் மறந்து கொள்ள முயன்ற பாபுவின் மனம், சீ போயும் போயும் துளசியின் கடைசிச் சந்திப்பு நடந்த, இந்த ராசியில்லாத பாறையிலா மைதிலியின் முதற்சந்திப்பு நிகழவேண்டும்? என்று, கூறுவது போன்ற ஒரு பிரமை, அவனுள் தோன்றி மறைவதற்கிடையில், மைதிலியின் கிள்ளுதலும் நுள்ளுதலும் அவனை நினைவுலகிற்கு அழைத்து வந்து விட்டன.

மைதிலியின் தரிசனம் தினசரி கிடைத்திட வேண்டுமென்பதற்காக, ஒவ்வோர் நாளும் பாபுவின் கால்கள் கடற்கரையினை நோக்கி வேகமாக இயங்குவது அவனது அன்றாட அலுவலாயிற்று.

கொஞ்சுதலும் செஞ்சுதலும் பொய்க்கோபம் கொள்ளுதலும் அன்புமொழி பயிலுதலுமாக நாட்கள் வேகமாக ஓடிக்கொண்டிருந்தன. அந்தக் கடற்கரையிலிருக்கும் சிப்பிகள், சோகிகளுக்குக்கூட, அவர்களிருவரினையும் பற்றித் தெரியும். அவை கூட அவர்களைத் தினம், தினம் பார்த்து அலுத்துப் போனவைதான்.

வழக்கம் போல் அன்றும், கைகளினை உல்லாசமாக வீசியவாறு, கடற்கரை மணலில் சென்று அமர்ந்தான் பாபு. அவனை நோக்கி வந்த கடலைவிற்கும் வயோதிபர்,

'என்ன தம்பி நீ இங்கு வந்திருக்கின்றாய்? எப்பொழுது பிரேதம் எடுக்கப் போகின்றார்களாம்?

வேதனையுடன் கேட்டார்.

நடந்தவொன்றும் தெரியாத பாபு, விக்கி விழுங்கியவாறே என்ன? என்ன? என்று கேட்பதற்கிடையில், அவர் தொடர்ந்தார்.

'தம்பி உன்னுடன் திரிஞ்ச பிள்ளை மைதிலியல்லோ செத்துப்போனாளாம்'

பாபுவின் தலையினுள்ளே ஏதோ ஒரு பெருஞ்சுமை புகுந்தது போன்ற உணர்வு அவனிற்கு ஏற்பட்டது. கனத்த நெஞ்சுடனும், படபடக்கும் இதயத்துடனும் வேகமாக மைதிலி வீடு நோக்கி ஓடிச்சென்ற பாபுவினைத் தூரத்திலேயே கேட்டுக் கொண்டிருந்த அழுகுரல்கள், வரவேற்றுக்கொண்டிருந்தன.

பக்கம் மாறிக் குற்றப்பட்டிருந்த மாவிலைகளும், தென்னோலைத் தோரணங்களும் காற்றிலே அசைந்து அசைந்து அவனுக்குத் தமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தன.

அங்கே வெள்ளைத்துணியினால் போர்த்தப்பட்டுத் தலைப்பக்கமாகக் குத்துவிளக்கொன்று சுடர்விட்டுக்கொண்டிருக்க, மைதிலி மீளாத்துயிலிலிருந்தாள்.

பாபு கண்களைக் கைக்குட்டையினால் ஒற்றியவாறே நிற்க, அங்கு வந்த மைதிலியின் தந்தை தழுதழுத்த குரலில் கூறினார்.

'பார்த்தியா தம்பி உன் மைதிலிக்கு நடந்ததை, இந்தப் பிஞ்சுக் குழந்தை மைதிலி பாலர் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு வருகிறதற்காக, ரோட்டைக் கடக்கிற பொழுது, ஆரோ ஒரு பைத்தியக்காரன் போட்டி போட்டுக்கொண்டு மினிவானை ஓட்டி வந்திருக்கிறான். இந்த ஐஞ்சு வயசுகூட நிரம்பாத என்ர பிஞ்சுக் குழந்தை, மைதிலி அதிலே மோதுப்பட்டு.........'

தான் காதலித்தவளை இன்னொருவன் திருமணஞ்செய்து கொள்ள, தன் மனதிலே தாஜ்மகாலைக் கட்டிப் பூஜித்துக் கொண்டு பிரமச்சாரியாக வாழ்ந்து வந்த பாபுவிற்கு, அழகான சின்னஞ்சிறு குழந்தைகள் மீது அளவு கடந்த பிரியம்.

பாபு தன் குழந்தையாக நினைத்து வந்த துளசி ஐந்து வயதினை எட்டிப் பிடிக்கும் தறுவாயில், தந்தை மனோகருடன் இங்கிலாந்திற்குச் செல்ல,

தன் உயிராக நினைத்து வந்த அந்தப் பிஞ்சுக்குழந்தை மைதிலி இறைவனுடன் செல்ல, பாபு,

மீண்டும் நடக்கின்றான் நடைப்பிணமாகக் கடற்கரையினை நோக்கி ......... மைதிலியுடன் கதைப்பதற்காகவல்ல ......... மைதிலியைப் புதைப்பதற்காக. ★

# தன்னம்பிக்கையுடன் முயற்சி செய்யுங்கள்!

# வாழ்க்கையில் வெற்றி காண முடியும்!!

- பெனோ ரமேஷ் -

ஒவ்வொரு மனிதனின் வாழ்வும் உயிர் போன்றது. மனிதன் பிறக்கிறான். இறக்கிறான். ஆனால் எல்லோரும் வாழ்க்கையில் வெற்றிபெற்றார்களா? அதுதான் இல்லை.

இது ஏன் என்று அநேகமானோர் சிந்திப்பதே கிடையாது. சமுதாயத்தில் எத்தனையோ விதமான மனிதர்கள் பிறக்கிறார்கள். ஒவ்வொரு மனிதருக்கும் இடையில் எவ்வளவோ வேறுபாடுகள், வித்தியாசங்கள்.

இயற்கையின் படைப்பில் எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியாகப் படைக்கப்படுவதில்லை. பிறப்பவர்கள் எல்லோரும் மேதாவிலாசத்துடன் தோன்றுவதும் இல்லை. அவர் அவர் வளர்ந்துவரும் சமூகப் புறச் சூழ் நிலைகள் கூட ஒரு சிலரைப் புத்திக்கூர்மையுடையவர்களாக மாற்றுகின்றது.

பொதுவாகப் பார்க்கும் போது வாழ்க்கையில் முயர்சி செய்தவர்கள்தான் வெற்றிப் பாதையில் விறுநடை போட்டிருக்கிறார்கள், போடுகிறார்கள்.

முயற்சி எதுவும் அற்றவர்கள் வாழ்வில் எந்தஒரு நிகழ்ச்சியிலும் முதலிடமோ, உயர்வோ அடையமுடியாது. அடைந்ததும் கிடையாது என்பதை நடைமுறைவாழ்க்கையில் பல சம்பவங்கள் நிரூபித்துள்ளன.

எந்த ஒரு செயலையும் நாம் செய்யும் முன் அச் செயலை எப்படி? எப்போது செய்ய வேண்டும்? ஏன் செய்ய வேண்டும்? இவற்றால் எமக்கோ, பிறருக்கோ ஏதாவது பயன் விளையுமா என்று சிந்திக்க வேண்டும்?

சிந்திக்காமல் மனதில் எழும் எண்ணப்படி ஒரு செயலை நாம் செய்ய அதன் பலன்கள் சிதறிப் போய் விடுகின்றன. அதனால் எவருக்கும் எந்தப் பயனும் கிடைக்காமல் விடுவதுடன் தவறான பெயரும் வந்து சேர்ந்து விடும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

பலருக்கு ஏன்தான் வாழ்கிறோம்? எதற்காக வாழ்கிறோம் என்ற நோக்கமே இல்லாமல் தங்களின் நாட்களை வீணே கழிப்பார்கள். தங்களின் எதிர்கால வாழ்வுக்கோ அல்லது பிறரது வாழ்வுக்கோ பயன் தரக்கூடிய செயல்களில் அவர்கள் முயற்சி எடுப்பதே கிடையாது.

காலத்தை மனிதன் பயனற்ற முறையில் இழந்துவிடுவானாகில் மீண்டும் அவற்றை ஒரு போதும் பெற முடியாது. எந்த ஒரு செயலையும் தகுந்த திட்டங்களுடனும் சரியான செயல்முறைகளுடனும் வகுத்து, அவற்றை நடைமுறைப்படுத்தும் போது தான் மனிதன் தான் முயற்சி செய்த செயல்களில் வெற்றி பெறுகிறான்.

ஒருசிலர் இருக்கிறார்கள் அவர்கள் எந்த ஒரு செயலையும் செய்யும்முன் கொஞ்சம் கூட சிந்திக்கமாட்டார்கள். திடீர் என்று எடுத்தஎடுப்பிலேயே எதிலும் வெற்றி பெற்றுவிட வேண்டும் என்ற உணர்வே இவற்றுக்குக் காரணம்.

இவர்களின் செயல்களுக்கு எதிராகத் தடைகள் ஏதேனும் வந்துவிட்டால் அத்தடைகளைக்கண்டு மலைத்துப் போவார்கள். சிறிய தடைகள்கூட இவர்களுக்குப் பெரிதாகத் தெரியும்.

இந்த அச்ச உணர்வே இவர்களின் மனதில் உள்ள உற்சாகத்தைக் குறைத்து விடும். இதனால் அவர்கள் தாம் எடுத்துக்கொண்ட செயலில் இருந்து ஒதுங்கிவிடுவார்கள். அல்லது பின்வாங்கிவிடுவார்கள்.

இக்காலகட்டத்தில் மனிதன் ஒவ்வொரு செயலிலும் பல நாள் முயற்சியின் பின்னரே பல்வேறுபட்ட போராட்டங்களின் பின்னரே வெற்றியை அடையமுடிகிறது.

ஒருமுறை ஒரு செயலைச் செய்யும் போது எடுத்துக் கொண்ட முயற்சி தோல்வியைத் தழுவினால் பலர் சோர்வடைந்துபோவது இயற்கை'

மனமானது துணிவையும்; உற்சாகத்தையும் இழக்கும் சமயங்களில் தன்னம்பிக்கையையும் இழந்து விடுகிறது. என்று பிரபல உளநூல் அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

மனிதனது மனதில் நம்பிக்கை என்னும் சக்தி இழக்கப்பட்டுவிட்டால் அதன் பின் முயற்சி எங்கே உருவாக முடியும்? வெற்றியை எப்படிப் பெறமுடியும்?

அதனால் தான் எந்த ஒரு செயலைச் செய்தாலும் எமது மனதை சோர்வடையவிடாமல் மீண்டும் மீண்டும் முயற்சி என்னும் சக்தியைக்கொடுத்து அவற்றின் மூலம் நாம் எதிர் நோக்கும்வெற்றியை அடைய முடியும்.

உதாரணமாக மாகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்றைப்பின்நோக்கிப்பார்த்தால் ஒரு சில உண்மைகள் புரியும். அகிம்சா வழி மூலம் இந்தியாவில் இருந்து வெள்ளையரை வெளியேற்ற முடியும் என்று காந்தி உறுதியாக நம்பினார்.

அதற்கான செயற் திட்டங்களைத் தீட்டி அவற்றை ஒழுங்கு முறையில் நடைமுறைப்படுத்தினார். முயற்சி செய்தார். பலவிடயங்களில் தோல்வியைத் தழுவினாலும் மனதை உறுதிப்படுத்திக் கொண்டார். மீண்டும் மீண்டும் முயற்சி செய்தார். திரும்பத்திரும்ப அவர் செய்த முயற்சியால் அவர் கொள்கையில் உறுதிகூடியது. இறுதியில் வெற்றியும் பெற்றார். காந்தி எடுத்துக்கொண்ட அயராத முயற்சியே அன்று இந்தியா சுதந்திரம் பெற்றதிற்குக்காரணம் எனலாம்.

வாழ்க்கையில் இது போன்ற பல அனுபவங்கள[illegible]புகள் பலரால் மனித சமுதாயத்திற்கு பாடமாக விட்டுச்செல்லப்பட்டுள்ளது. இவற்றில் இருந்து எமது செயல்களில் பயன்மிக்க செயல்கள் தோன்றவேண்டும்.

மனித வாழ்க்கைப்பாதை தடைகள்; தோல்விகள்; ஏமாற்றங்கள் போன்றன நிறைந்ததாகும். இவை அனைத்தும் முயற்சியுடைய மனிதனை தடம்புரளச் செய்ய முடியாதவை.

முயற்சியுடைய மனிதன் எப்பெரும் எதிர்ப்புக்களையும் கண்டு மலைக்கமாட்டான். அவற்றை ஒருசவாலாக ஏற்று தன் செயல்களுக்கு தகுந்த திட்டங்கள் தீட்டி வெற்றியின் இறுதியை அடையும் வரை ஓயமாட்டான். அவனே வாழ்வில் வெற்றிபெற்றவனாவான்.

முக்கியமாக ஒருவிடயம்; மனம் ஆனது (Mind) எதை அதிகமாக எண்ணுகிறதோ (Feeling) இறுதியில் அதுவாகவே மாறிவிடும் என்பது நிரூபிக்கப்பட்ட உளவியல் (Psychology) உண்மையாகும்.

மனதின் எண்ணங்களுக்கு அவ்வளவு வலிமை உண்டு என்பது பலர் அறியாத விடயமாகும். அதனால்தான் மீண்டும் மீண்டும் முயற்சி செய்யும் ஒருவனின் மனமானது இறுதியில் ஒரு வலிமைமிக்க மனமாக (Mind) எதையும் சாதிக்கும் மனமாக பக்குவமடைகின்றது.

மீண்டும் மீண்டும் நாம் எடுக்கும் முயற்சிகள் தோல்வியைத் தழுவினாலும்; மனமானது அதனால் ஓர் புதிய ச[illegible] தோல்விகள்தான் வெற்றி[illegible]

ஆகவே ஒரு செயலை செய்யும்போது ஏற்படும் தோல்விகளைக் கண்டு அஞ்சாதீர்கள். ஒதுங்கி விடாதீர்கள். திரும்பத் திரும்ப முயற்சி செய்யுங்கள். என்றாவது ஒருநாள் அம் முயற்சி உங்களுக்கு வெற்றி மாலையை வழங்கத்தான் போகின்றது.

முயற்சி செய்தவர்கள் அதாவது தன்வாழ்க்கையில் பலதோல்விகளைக் கண்டவர்கள் மீண்டும் மீண்டும் செய்த முயற்சியின் பயனாய் தான் முன்னுக்கு வந்தவர்களாக இன்று பல துறையில் ஒளி வீசுகிறார்கள்.

புகழ் ஏணியில், வெற்றிக் கனியைத் தம்கையில் வைத்திருப்பவர்களின்வாழ்க்கையைப் பின்நோக்கி நன்கு ஆராய்ந்து பார்த்தால் இந்த உண்மை புரியும்.

சும்மா இருந்தவர்கள் பயனற்ற முறையில் பொழுதைப் போக்கியவர்கள் எவருமே வெற்றியைற எந்தச் செயலிலும் பெற்றதாக வரலாறு இல்லை.

ஆனால் ஒரு சிலர் குருட்டுத்தனமாக வெற்றிகளைப் பெற்றவர்களாக பார்வைக்குத் தெரியலாம்.

ஆனால் அவ்வெற்றி நிரந்தரமானது தானா என்பதை அனைவரும் சிந்தித்துப்பார்க்க வேண்டும். ஆயிரத்தில் ஒருவருக்கு இப்படி அமையலாம்.

இதை வைத்துக்கொண்டு முயற்சி இன்றி இருந்தால் எந்த ஒரு செயலும் பயன் உள்ளதாகவும், வெற்றியாகவும் அமையும் என எதிர்பார்ப்பது மடைமையிலும் மடமை.

இன்று ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலிம் எவ்வளவோ தடைகள். பல தடைகள் செயற்கையாகவே உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் எதிர்த்து எந்தத் துறையிலும் எந்தக் செயலிலும் முன்னேறுவதற்கும் வெற்றி பெறுவதற்கும் முயற்சியைவிட வேறு எந்தச் செயலாலும் முடியாது.

முயற்சி செய்தால்தான் வெற்றி என்பதை யாவரும் அறிந்து கொள்ள வேண்டும். முயற்சி செய்வோம்! முடியாதது எதுவுமில்லை!! ✻

டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




Grant BJK&E PFL 1157

'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

தினமும் டியூரோல்® அருந்துங்கள், அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.

Pfizer

சில்லறை விலை ரூ.39/90 200 மி. லீ.

®பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் துருவத்துக்குத் தூதரை நியமித்த அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்ட்

பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளித்து - விருந்து வைத்து அனுப்பும் போதெல்லாம் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கு ஒரு வழக்கம் உண்டு:

தம் நினைவாக கையெழுத்துப் போட்டுத் தரும்படி யார் கேட்டாலும், முன் பின் யோசிக்காமல் டக் டக்கென போட்டுத்தந்துவிடுவார்.

'என்ன இவர் இப்படி கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விடுகிறாரே என்று வியந்தார் ஒரு நிருபர்.

உடனே ஒரு தமாஷ் செய்ய எண்ணினார்.

எனவே அங்கு இருந்த 'மெனு' சீட்டு ஒன்றை எடுத்தார்.

அதன் பின் பக்கத்தில் தம்மை வட துருவத்தில் அமெரிக்கத் தூதராக நியமித்திருப்பதாக எழுதினார்.

மற்றவர்கள் ரூஸ்வெல்டின் கையெழுத்தைப் பெறச் சீட்டுக்களை நீட்டியபோது தம் சீட்டையும் அனுப்பிவைத்தார்.

என்ன நடக்கிறது என்று சற்றுத் தூரத்தில் இருந்து கவனித்தார்.

பரபரவென்று கையெழுத்திட்டு எல்லா சீட்டுக்களையும் திருப்பிக் கொடுத்தார் ரூஸ்வெல்ட்,

தமாஷ் செய்ய எண்ணிய நிருபர் தாம் அனுப்பிய சீட்டுத் தம் கையில் கிடைத்ததும் ஆவலாய்ப்பார்த்தார்.

என்ன ஆச்சரியம்! அதில் ரூஸ்வெல்டின் முழுக்கையெழுத்து இல்லை. இனிஷியல் மட்டுமே இருந்தது.

அத்துடன் மேலே 'வட துருவம்' என்று இருந்ததை அழித்துத் 'தென் துருவம்' என்று திருத்தியிருந்தார்.

ஏற்கனவே வட துருவத்தில் ஒருவரை நியமித்துவிட்டதால் அங்கே நியமனம் செய்ய இயலாததற்கு வருந்துகிறேன்' — என்ற குறிப்பும் எழுதியிருந்தார்.

அப்போதுதான் ரூஸ்வெல்ட் ஓர் அசாராய சூரர் என்பது நிருபருக்குத் தெரிந்தது: ★

## உலகில் சனத்தொகை கூடிய முதல் ஐந்து நகரங்கள்

உலகில் அதிக சனத்தொகையைக் கொண்ட முதல் ஐந்து நகரங்களில் இரண்டு ஜப்பானில் உள்ளன.

விவரம் வருமாறு;

★ டோக்கியோ—2 கோடி 2 ஆயிரம்.

★ நியூயோர்க் — 1 கோடி 78 லட்சத்து 7,100.

★ மெக்ஸிகோ பட்டினம் — 1 கோடி 73 லட்சத்து 21 ஆயிரத்து 800.

★ ஓஸாக்கா — 1 கோடி 62 லட்சத்து 24 ஆயிரம்.

★ சாபோலா (பிரேஸில்) — 1 கோடி 52 லட்சத்து 80 ஆயிரத்து 375. (-ச)

★ உலகிலேயே கொடிய விஷமுள்ள பூச்சி தென் அமெரிக்காவில் உள்ளது. அதன் பெயர் 'கருப்பு விதவைச் சிலந்தி'

★ மேகங்கள் 18 கிலோ மீற்றர் வேகத்தில் மட்டுமே செல்லக்கூடியவை.

★ தேன் சிட்டுப் பறவை மலரில் உட்காராமல் பறந்த வண்ணமே கூட தேன் உறிஞ்சும் தன்மைகொண்டது.

★ கொலம்பஸ் இரவில் மணிக்கணக்கில் நட்சத்திர வானத்தை பார்த்துத் கொண்டே இருப்பாராம். ★

## தாய்ப் பாசம் எப்படி இருக்கும்

உலகத்தில் தாய்ப்பாசத்துக்கு இணையாக எதுவுமில்லை.

ஒருசமயம் நான் அம்மாவைப் பார்க்க ஊருக்குப் போனேன்.

என்னைக் கண்டதுமே என் அம்மா எதிரேவந்து 'என்னப்பா இப்படி துரும்பா இளைச்சுட்டே என்று கேட்டாள்.

என் சரீரத்தைப்பார்த்து இளைச்சுப்போயிட்டாய் என்று அம்மாவைத்தவிர யாரால் சொல்லமுடியும்.

— திருமுருக கிருபானந்த வாரியார் கூட்டம் ஒன்றில் பேசியது. ★

## கப்பலோட்டிய தமிழன் எழுதிய வைத்திய நூல்

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரப்பிள்ளை 'சிற்றின்ப சிந்தாமணி' என்ற நூலை எழுதியிருக்கிறார்:

மலடு பற்றி அவர்செய்த ஆய்வு இந்த நூலில் இடம் பெற்றிருக்கிறது.

இது மகப்பேற்றை விரும்புகின்றவர்களுக்கு பெரிதும் பயன்படும்.

கணவன், மனைவி இருவரில் யார் மலடு என்பதை இந்த சோதனைமூலம் செலவின்றி தெரிந்துகொள்ளலாம்.

இதற்காக டாக்டரிடம் சென்று காத்திருக்கவேண்டியதில்லை.

இந்த எளிய பரிசோதனைக்குத் தேவை, நல்ல முளைப்புத்திறன் வாய்ந்த மொச்சை விதைகள்.

இரண்டு சிறிய பாத்திரங்கள். இருவருடைய பெயரும் இப்பாத்திரத்தில் சீட்டில் எழுதி ஒட்டிக்கொள்ளவேண்டும்.

கணவனது சிறுநீர் விட்ட பாத்திரத்தில் சில மொச்சை விதைகள் இடவேண்டும்.

அதேபோல் மனைவியின் சிறுநீர் பாத்திரத்திலும் மொச்சை விதை போடவேண்டும் ஏக காலத்தில்.

ஐந்து நாட்களுக்குப்பின் எவருடைய பாத்திரத்தில் முளைவிடாமல் இருக்கிறதோ அவர்தான் மலட்டுத்தன்மை உடையவர் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

குறைபாடு உள்ளவருக்கு உரியமுறையில் சிகிச்சை செய்யவேண்டும்.



வ. உ. சி

—இப்படி வ. உ. சி. சிற்றின்ப சிந்தாமணியில் எழுதி இருக்கிறார்.

இந்த நூலைப்பற்றிய விவரத்தை பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் தனது 'பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சி' என்ற நூலில் சுருக்கமாக குறிப்பிட்டிருக்கிறார். ★

## புகைப்பது பற்றி ஒரு ஆய்வு!

புகைப்பதினால் ஏற்படும் அபாயங்கள் பற்றி நியூசிலாந்தில் உள்ள ஒக்லண்ட் பல்கலைக்கழகம் ஓர் ஆய்வை நடத்தியது.

அதன்படி—

★ சிகரெட் புகைப்பவர்களுக்கு மாரடைப்பு அபாயம் மூன்று மடங்கு கூடுதலானது.

★ உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் புகைத்தால் இதன் அபாயம் 20 மடங்கு அதிகரிக்கும்.

★ ஜப்பானில் புகைக்காதவர்களிலும் பார்க்க புகைப்பவர்களிடயே மாரடைப்பு ஆறு மடங்கு கூடுதலாக காணப்படுகிறது.

★ சுவீடனில் புகைக்கும் தாய்மார்களின் கருவில் உள்ள சிசுக்களில் 50 சதவீதத்தினர் புற்றுநோய்க்கு ஆளாகின்றனர்.

★ டென்மார்க்கில் கர்ப்பிணிகள் புகைத்தல் காரணமாக எடை குறைந்த குழந்தைகளையே பிரசவிக்கின்றர்— என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ச)

## பாகவதரின் 'சிலேடை'

தமிழ் நாட்டில் அந்தக் காலத்தில் காயக சிந்தாமணி முத்தையா பாகவதர் என்ற இசை மேதை ஒருவர் இருந்தார்.

அவருக்கு இசைக் கலையில் எவ்வளவு தேர்ச்சியோ அவ்வளவு சிலேடை பேசும் கலையிலும் இருந்தது.

ஒரு சமயம் அவர் சச்சேரியில் பாடிக் கொண்டிருந்தார்.

'அழகுள்ள இவர் ஆரடி' என்று துவங்கும் பாடலை பாடிக்கொண்டிருந்த போது குள்ளமான ஒரு மனிதர் வந்து முன் வரிசையில் அமர்ந்தார்.

உடனே பாகவதர் அழ 'குள்ள' இவர் ஆரடி? என்று பிரித்துப் பாடியதும் அரங்கமே அதிர்ந்தது.

அந்தப் பாட்டு முடிவதற்குள் சொல்லிவைத்தாற்போல் மிகமிக உயரமான தோற்றம் கொண்டவர் வந்து முன்வரிசையில் அமர்ந்தார்.

பாகவதர் இவரையும் அந்தப் பாடலில் விடவில்லை.

அழகுள்ள இவர் 'ஆறடி'? என்று மெல்லின 'ர'வை வல்லின 'ற'வாக உச்சரித்த போது அரங்கம் மீண்டும் கலகலத்தது. ★

## உலகின் முதல் புத்தகம்

உலகிலேயே முதன் முதலாக அச்சிடப்பட்ட புத்தகம் 'வஜ்ரசூத்ர' என்பது.

இது சீன மொழியில் வெளிவந்தது.

வெளியான ஆண்டு கிறிஸ்துவுக்கு முன் 868.

ஆறு பக்கங்கள் கொண்ட இந்த நூலில் ஒரு பக்கம் படம்.

இதை வெளியிட்டவர் வாங்சீ என்ற சீனர். ★

## ஏலம்

சமீபத்தில் ஸ்கொட்லாந்தில் ஒரு ஏலம் நடந்தது.

இதில் வின்ஸர் பிரபுவுக்குச் சொந்தமான 2 துப்பாக்கிகள் ஏலத்தில் விடப்பட்டன.

18 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவுக்கு அவை ஏலம் போயின.

அமெரிக்கர் ஒருவர் அவைகளை வாங்கிச்சென்றார். ★

## கடலில் மிதந்து கொண்டே தேநீர் குடிக்கலாம்!

இஸ்ரவேலில் உள்ள சாக்கடலில் மிதந்து கொண்டே தேநீர் அருந்தலாம்:

இதன் தண்ணீரில் உப்பின் அளவு அதிகமாக இருப்பதால் மனிதன் நீரில் மூழ்காமல் மிதப்பான்.

இப் பிரதேசம் சிறந்த ஆரோக்கிய தலமாக இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் ஏராளமாக வருகிறார்கள்.

## துயரில் முடிந்த விமான சாகஸம்!



கடந்த ஆகஸ்ட்மாதம் 28ஆம் திகதி மேற்கு ஜேர்மனி மக்களுக்கு மறக்கமுடியாத தினம்.

அன்று ரூம்ஸ்டீனில் உள்ள அமெரிக்க விமானத் தளத்தில் நேட்டோ நாடுகளின் விமானப்படை விமானங்களின் சாகஸக்காட்சி நடைபெற்றது.

ஒரு கட்டத்தில் 10 இத்தாலிய ஜெட் விமானங்கள்ஒன்றன் பின் ஒன்றாக, அருகருகே கூட்டமாக அணிவகுத்துச் சென்றன.

திடீரென்று மூன்று ஜெட் விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன.

பின்னர் வெடித்துச் சிதறி சாகஸக் காட்சியைக் கண்டுகளிக்க வந்திருந்த 3 லட்சம் மக்கள் கூட்டத்தின் நடுவில் விழுந்தன. அப்போது 65 பேர் பலியானார்கள். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர்.

10 ஜெட் விமானங்கள் சாகஸக் காட்சியின்போது அணி வகுத்துச் செல்வதை மேலே உள்ள படத்தில் வலது புற (inset) த்தில் காணலாம்.

ஒரு விமானம் வெடித்துச் சிதறி மக்கள் மத்தியில் விழுவதை மற்றப்படத்தில் காணலாம்.

இவ்விபத்து மேற்குஜேர்மனியில் பெரிய சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

பொதுமக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பின்படி மேற்கு ஜேர்மனியின் சனத்தொகையில் அரைவாசிப் பேர் இது போன்ற சாகசங்களைத் தடை செய்யவேண்டுமென வாக்களித்துள்ளனர்.

அத்துடன் இவ் விபத்து மேற்கு ஜேர்மனியின் இறைமையைப் பாதிக்கும் செயல் எனப் பலர் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

அந்நிய இராணுவத் துருப்புக்கள் மேற்கு ஜேர்மனியில் தங்குவதற்கு ''சோபா SOFA'' உடன்படிக்கை இடமளிக்கிறது

இவ் விபத்தின் பின் மேற்கு ஜேர்மனி பாதுகாப்பு அமைச்சு வானத்தில் எதுவிதமான விமான சாகசங்களும் நடைபெறக்கூடாது எனத்தடை விதித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு இந்தத் தடை நிரந்தரமானதென்றும் ஜேர்மனியில் இயங்கும் எல்லா நேச நாட்டுப் படையினரையும் இது கட்டுப்படுத்தும் என்று கூறியுள்ளது.

ஆனால் இத்தடையை விதிக்கப் பாதுகாப்பு அமைச்சுக்கு அதிகாரம் உண்டா என்பது கேள்விக்குரியது. (ச)

## மூன்று ஆண்டுகளுக்கு கெடாமல் இருக்கும் உணவு

முதலாம். இரண்டாம் உலக யுத்தங்களில் ஈடுபட்ட அமெரிக்க இராணுவ வீரர்களுக்கு பலநாள்வரை கெட்டுப்போகாத உணவுவகைகளை அமெரிக்க அரசு தயாரித்துக் கொடுத்தது.

எதிர்காலத்தில் நடக்கும் போர்களில் பங்கேற்கும் இராணுவ வீரர்களுக்கு முற்றிலும் மாறுபட்ட உணவுவகைகளை அமெரிக்கா தயாரித்துவருகிறது.

இதில் ரொட்டியும், உப்பு, மிளகாய், புளித்த திராட்சை ரசம் அடங்கிய பச்சடியும் அடங்கும்.

இந்த ரொட்டி மூன்று ஆண்டுகளுக்கு கெடாமல் இருக்கும். ★

## பெனாஸிர் பூட்டோவிடம் ஏமாந்தார் அதிபர் ஸியா

பூட்டோவின் மகள் பெனாஸிரிடம் காலஞ்சென்ற அதிபர் ஸியா-உல்-ஹக் ஏமாந்து போன சம்பவம் சென்ற செப்டெம்பர் 21 இல் வெளியானது.

அதிபர் ஸியா உயிரிழந்து ஒரு மாதமான பின்னரே இது பற்றி அனைவரும் அறிய முடிந்தது.

செப்டெம்பர் 21 அன்று தான் பெனாஸிர் பூட்டோ ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார்.

அனைவரும் எதிர்பார்த்தது நவம்பர் நடுப்பகுதியில் தான் பெனாஸிரின் பிரசவம் என்று. அதற்கு ஏற்றாற்போல் பெனாஸிரின் வட்டாரங்களும் அதை ஊர்ஜிதம் செய்தன.

அதிபர் ஸியா உயிருடன் இருக்கும்போதே, அவரும் பெனாஸிரின் பிரசவம் நவம்பர் நடுப்பகுதி என்றே நம்பியிருந்தார்.

மே 29 இல் ஸியா, பிரதமர் பதவியில் இருந்து முகமட் கான் ஜுனஜோவை விலக்கினார். நாடாளுமன்றத்தையும் கலைத்த அதிபர் ஸியா, பொதுத்தேர்தலை 90 தினங்களுக்குள் வைப்பேன் என்றும் அறிவித்தார்.

பெனாஸிர்தான் பிரதான எதிர்க்கட்சியான மக்கள் கட்சியின் தலைவி.

ஆகவே பெனாஸிர் தேர்தலில் தீவிர பிரசாரம் செய்வதைத் தடுக்க அதிபர் ஸியா நினைத்தார். அதற்கிணங்க நவம்பர் 16 இல் பொதுத் தேர்தல் என்று அதிபர் ஸியா அறிவித்தார்.

ஆனால் சென்ற செப்டெம்பர் 21 இல் பெனாஸிருக்குக் குழந்தை பிறந்தது. குறைமாதப் பிரசவமோ என்று ஆராய்ந்தார்கள்.

முழு வளர்ச்சியடைந்த குழந்தையையே பெனாஸிர் பெற்றெடுத்தார் என்று தெரியவந்தது.

அப்படியானால்:—

பெனாஸிரிடம் அதிபர் ஸியா ஏமாந்து விட்டார் என்பது அனைவருக்கும் இப்போது புரிந்துவிட்டது. ★

## உலகின் பெரிய டெலிவிஷன்

உலகிலேயே பெரிய டெலிவிஷனை ஜப்பானில் சோனி நிறுவனம் தயாரித்து இருக்கிறது.

இந்தக் கலர் டெலிவிஷன் தரையில் குறுக்களவு ஒன்றரைமீற்றர்(ஏறத்தாழ ஐந்து அடி) இருக்கிறது.

சாதாரண டெலிவிஷன் திரையின் குறுக்களவு ஒன்றே முக்கால் அடிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ராட்சத டெலிவிஷன் [illegible] இது வருகிற [illegible] மாதம் விற்பனைக்கு வருகிறது. ★

## கடலில் வாழும் மீன்கள் பற்றி...

வீட்டில் பிரியமாக வளர்க்கும் மீன்கள் நீர்த்தொட்டியில் மேலும் கீழுமாக நீந்துகின்றன.

ஆனால் கடலில் வாழும் மீன்கள் எல்லாமே நீரின்மேல் மட்டத்தில் இருந்து அடிமட்டம் வரை மேலும் கீழுமாக நீந்திவருவதாக நினைத்தால் அது தவறு.

இருபது மாடிக் கட்டடத்தின் உச்சியில் இருப்பவர்கள் அங்கேயேதான் இருப்பார்கள் கீழிறங்கி வரமாட்டார்கள்!

2 ஆவது மாடியில் இருப்பவர்கள் உயரச் செல்லவே மாட்டார்கள் என்று இருந்தால் எப்படியிருக்கும்?

கடல்வாழ் உயிரினங்களின் நிலை அப்படித்தான் உள்ளது.

உதாரணமாகக் கடலில் சுமார் 8 ஆயிரம் மீற்றர் ஆழத்தில் வாழும் உயிரினங்கள் கிட்டத்தட்ட அந்த அளவு ஆழத்திலேயேதான் இருக்கும்.

கடலில் மிக ஆழத்தில் உள்ள மீனை நீங்கள் எப்படியோ பிடித்து மேலே கொண்டு வருவதாக வைத்துக்கொள்வோம்.

உடனே அது பலூன் வெடிப்பது போல வெடித்துவிடும.

கடலில் ஆழங்குறைந்த இடத்தில் வாழும் மீனை வலுக்கட்டாயமாக மிக ஆழத்துக்குக் கொண்டுபோவதாக வைத்துக்கொள்வோம். அது நசுங்கிச் செத்துவிடும். இதற்குக் காரணம் உள்ளது.

காற்றுக்கும் எடை உண்டு என்பதால் (கடல் மட்டத்தில்) நாம் ஒவ்வொருவரும் சதுர அங்குலத்துக்கு 14.7 இறாத்தல் வீதம் எடை சுமக்கிறோம்.

கடலில் 33 அடி ஆழத்துக்குச் சென்றால் இந்த அழுத்தம் (Pressure) இருமடங்காகிவிடுகிறது. 66 அடி ஆழத்தில் இது மூன்று மடங்காகிவிடும். 99 அடி ஆழத்தில் நான்கு மடங்காகிவிடும்.

கடலில் மிக ஆழத்தில் உள்ள அழுத்தம் சதுர அங்குலத்துக்கு தொன் கணக்கில் உள்ளது. எனவே கடலின் மேல் மட்டத்தில் உள்ள மீன்கள் ஆழ்கடல் பகுதிக்குச் சென்றால் நசுங்கிவிடும்.

கடல் அடியில் வாழும் மீன்கள் மிகுந்த அழுத்தத்துக்குப் பழக்கப்படுத்தப்பட்டவை.

அவற்றை மேலே கொண்டு வந்தால் திடீரென அழுத்தக் குறைவு ஏற்பட்டு அவை வெடித்துச் செத்துவிடும்.

எனவே கடலில் வெவ்வேறு ஆழத்தில் உள்ள மீன்கள் கிட்டத்தட்ட அதே ஆழத்தில் தான் இருந்து வரும். ★

## பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

### திமிங்கிலங்கள் படையெடுப்பு

திமிங்கிலங்கள் படையெடுத்த சம்பவம் ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றது.

மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள அகுஸ்தா நகரம். இங்குள்ள ஏரியில் திமிங்கிலங்கள் ஏராளம் உள்ளன.

அவை மனிதர்களைக் கொன்றுவிடும் ஆற்றல்கொண்டவை.

ஒவ்வொன்றும் சுமார் 20 அடி நீளம் கொண்டவை:

திடீரென்று 80 திமிங்கிலங்கள் கரையை நோக்கிப் படையெடுத்தன.

விலங்குகள் பராமரிப்புத் துறை அலுவலர்களும் அகுஸ்தா நகர மக்களும் சேர்ந்து அந்தத் திமிங்கிலங்கள் மீண்டும் ஏரிக்குள் விரட்டுவதற்குள் படாதபாடுபட்டு விட்டார்கள். ★

### தர்க்கத்தின் அடிப்படையில்

லொஜிக் பேராசிரியர் தன் வகுப்பில் லொஜிக்கின் அடிப்படை பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

(அவருக்கு அழகான ஒரு மகளும் உண்டு)

பேராசிரியர்: 'அதாவது லொஜிக்படி சேகர் கணேஷுக்குச் சொந்தம், கணேஷ் ரவிக்குச் சொந்தம் என்றால் சேகர் ரவிக்குச் சொந்தம் என்றாகிறது அல்லவா!'

உடனே ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து—

'உங்கள் மேல் எனக்கு அளவு கடந்த அன்பு. உங்களுக்கு உங்கள் அழகான மகள் மேல் அன்பு. அப்படியானால் உங்கள் மகளுக்கும் எனக்கும் அன்பு என்று கொள்ளலாம் இல்லையா சேர்'— என்றானே! ★

### கன்னி மேரி காட்சி தரும் அதிசயம்

சிரிய நாட்டைச் சேர்ந்தவர் பாசும் அசப். வயது 30. இவர் பாரிஸில் வசித்து வருகிறார்.

இவர் ஒரு கிறிஸ்தவ ஆலயத்தில் பிரார்த்தனை நடத்திக் கொண்டு இருந்தபோது கன்னிமேரி இவருக்குக் காட்சி தந்தாராம்.

அதைத் தொடர்ந்து ஒலிவ் எண்ணை மற்றும் வாசனைத் திரவியங்களின் மணம் கமழும் எண்ணை இவரது கைகளில் இருந்து வழிந்தோடத் தொடங்கியதாம்.

கன்னிமேரி இதுவரை 5 முறை அவருக்குக் காட்சி தந்து இருக்கிறாராம்.

மேரியை நினைத்துப் பிரார்த்திக்கும் போது எல்லாம் அவரது கைகளில் இருந்து எண்ணை கசிந்து ஓடுகிறதாம். இந்த அதிசயத்தை நூற்றுக்கணக்கான மக்கள் பார்த்துச் செல்கிறார்கள். ★

### ஆங்கிலம் பற்றி....

ஆங்கில மொழி பற்றி வியத்தகுவிவரங்கள் இதோ:-

★ உலகின் மூன்றில் இரண்டு பங்கினர் வாசிக்கின்றனர்.

★ உலகின் முக்கால் பங்கினர் அம்மொழியில் கடிதம் எழுதுகின்றனர்.

★ 120நாடுகளில் 15கோடி மக்கள் வானொலியில் ஆங்கில நிகழ்ச்சிகளைக் கேட்கிறார்கள்.

★ 5 கோடிக்கும் அதிகமான குழந்தைகள் ஆங்கிலத்தை மேலதிக மொழியாகக் கற்கிறார்கள்.

★ இடைநிலையில் 8 கோடி குழந்தைகள் ஆங்கிலக்கல்வி பெறுகின்றனர். (-ச)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



## தமிழ் இலக்கண வினாவிடை

(க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குரிய மாதிரி வினாக்கள்)

**கீழ்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

(1) பகுபதம் பகாப்பதம் என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக?
பகுதி, விகுதி, சாரியை, சந்தி, இடைநிலை ஆகிய பகுதிகளாக குறைந்தடு பகுதி, விகுதியாகவேனும் பிரிபடக் கூடிய பதங்கள் பகுபதங்கள் எனவும், பிரிபடாத பதங்கள் பகாப்பதம் எனவும் அழைக்கப்படும்.
பகுபதம்: உதாரணம்: 1. பொன்னன் — பொன் (பகுதி) + அன் (விகுதி)
2: வந்தனன் — வா (பகுதி) + த் (இடைநிலை) + த் (சந்தி) + அன் (சாரியை) + அன் (விகுதி)
பகாப்பதம்: உதாரணம்: கடல், மண்

(2) வியங்கோள் வினைமுற்றுவது யாது? விளக்குக.
க, இய, இயர், விகுதிகளைப் பெற்று வாழ்த்தல் வைதல், வேண்டல், விதித்தல் ஆகிய நால்வகைப் பொருளிலும் வரும் வினைமுற்று வியங்கோள் வினைமுற்றாகும்.
இது இருதிணை, ஐம்பால், மூவிடத்திற்கும் பொதுவாய் வரும்,
உதாரணம்: வாழ்க (க)
வாழிய (இய) — வாழ்த்தல்
வாழியர் (இயர்)
அழிக (க)
ஒழிக — வைதல்
தருக — வேண்டுதல்
செல்க — விதித்தல்
இருதிணை ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாய் வரல்.
உதாரணம்: உயர்திணை — நான் - வாழ்க
அஃறிணை — மயில் - வாழ்க
ஆண்பால் — கந்தன் - வாழ்க
பெண்பால் — அமலா - வாழ்க
பலர்பால் — அவர்கள் - வாழ்க
ஒன்றன்பால் — பசு - வாழ்க
பலவின்பால் — பசுக்கள் - வாழ்க
தன்மை — நாம் - வாழ்க
முன்னிலை — நீ - வாழ்க
படர்க்கை — அவர்கள் - வாழ்க

(3) ''ஓடுமின்'' இலக்கணம்
வினைத்தொகையாகும், சொற்கள் ஒன்றோடொன்று தொடரும்போது அவற்றில் காலம் காட்டும் உருபுகள் மறைந்து வருமாயின் அது வினைத்தொகை எனப்படும்.
காலம் காட்டும் இடைநிலை மறைவதால் இது முக்காலமும் உணர்த்தும்.
ஓடுமீன் — ஓடிய மீன் — இறந்தகாலம்.
ஓடுகின்ற மீன் — நிகழ்காலம்
ஓடும்மீன் — எதிர்காலம்.

(4) சினையாகு பெயருக்கும், காலவாகுபெயருக்கும் உதாரணம் தந்து விளக்குக?
சினையாகுபெயர்: ஒன்றின் சினைப்பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொன்றுக்கு ஆகி வருவது சினையாகுபெயரென அழைக்கப்படும்.
உதாரணம்: வெற்றிலை நட்டான். இங்கு இலை என்ற சினைப்பெயர் அதனுடைய கொடிக்காகி வந்துள்ளது.
காலவாகுபெயர்: ஒரு காலத்தின் பெயர் பிறிதொன்றிற்கு ஆகி வருவது,
உதாரணம்; கார்த்திகை பூத்தது. இங்கு மாதத்தின் பெயர் மலருக்கு ஆகி வந்துள்ளது

(5) ''மயில் வந்தார்'' இலக்கணம் தருக.
உவமையாகு பெயர் 'மயில்' பெண்ணுக்கு உவமையாகி வந்துள்ளது.

(6) மூன்றும் வேற்றுமைப் பொருள்கள் யாவை? விளக்குக?
உருபுகள், ஆல், ஆன், ஒடு, ஓடு
பொருள்: 1. கருவிப்பொருள் — உதாரணம். கத்தியால் வெட்டினான்.
2. கருத்தாப்பொருள் — ,, திருவள்ளுவரால் இயற்றப்பட்டது
3. உடன் நிகழ்ச்சி — ,, காற்றோடு மழை வந்தது.

(7) பால் பகா அஃறிணை என்றால் என்ன?
ஒன்றன்பால், பலவின் பால் எனப் பகுக்க முடியாத அஃறிணைப் பெயர்கள் பால்பகா அஃறிணை என அழைக்கப்படும்.
உதாரணம்: 'பறவை' பறவை பறந்தது (ஒருமை)
பறவை பறந்தன (பன்மை)

(8) தற்கிழமை, பிறிதின் கிழமை என்னும் பாகுபாட்டினைத் தெரிவு படுத்துக?
6 ஆம் வேற்றுமையின் உடமைப் பொருள் உடமை கிழமையெனவும் பெயர் பெறும்.
தற்கிழமை தன்னில் இருந்து வேறாக முடியாத உடமை.
உதாரணம்; எனது கால், எனது கண்.
பிறிதின்கிழமை: தன்னில் இருந்து வேறாகக்கூடிய உடமை.
உதாரணம்: எனது வீடு, எனது புத்தகம்

(9) வினை எச்சம் என்றால் என்ன?
வினையடியாகப் பிறந்து காலம் காட்டி பால் காட்டும் விகுதி பெற்று முற்றுப் பெறாத குறைவினைவடிவம் வினைச்சொல்லைக் கொண்டு முடிவடைந்தால் வினை எச்சம் ஆகும்.
உதாரணம்: வந்து பாடினான்.

(10) 'போனான்' இலக்கணம் தருக?
உயர்திணை, ஆண்பால், ஒருமை, தெரிநிலைவினைமுற்று.

தயாரிப்பு: தாஸ்

# உங்களுக்குத் தெரியுமா?

உணவு ஒட்சிசன், காபனீரொட்சைட்டு, கழிவுப் பொருள்கள் என்பன திரவ ஊடகமான குருதியின் மூலமே உடலினுள் கொண்டு செல்லப் படுகின்றன. குருதித் திரவ விழையம் எனும் பாயத்தினுலும், செங்குருதிச் சிறு துணிக்கைகள் வெண்குருதிச் சிறு துணிக்கைகள் ஆகிய கலங்களினுலும், குருதிச் சிறு தட்டுகள் எனும் உடல்களினுலுமே குருதி ஆக்கப்பட்டுள்ளது. பம்பி போன்று தொழிற்படும் இதயத்தினுலேயே உடல் முழுவதற்கும் குருதி செலுத்தப் படுகிறது. இதயமானது நான்கு அறைகளைக் கொண்டது. அவை இடதுசோணை அறை, வலதுசோணை அறை, இடது இதய அறை, வலது இதய அறை என்பனவாகும். சோணை அறைகளின் சுவரைவிட இதய அறைகளின் சுவர் தடிப்பானது வலது இதய அறையின் சுவரைவிட இடது இதய அறையின் சுவர் தடிப்பானதாகக் காணப்படும்.

இதய அறைகளும், சோணை அறைகளும் ஒன்றுவிட்ட ஒழுங்கில் சந்தத்திற்கு ஏற்ப சுருங்கிச் சுருங்கி விரிவதனுல் இதயம் தொழிற்படுன்றது. நாடிகள் இதயத்தில் இருந்து குருதியை அப்பாற் கொண்டு செல்கின்றன. நாளங்கள் இதயத்தை நோக்கிக் குருதியைக் கொண்டு செல்கின்றன.

இடது இதய அறையில் இருந்து ஆரம்பிக்கும் நாடித் தொகுதியானது பெருநாடியாகும். அதேபோல் வலது இதய அறையில் இருந்து வெளிக்கிடும் நாடி நுரையீரல் நாடியாகும். இதயத்தை விட்டு வந்த குருதி மீண்டும் இதயத்தினுள் பாய்வதைத் தவிர்ப்பதற்காகப் பிரதான நாளங்களின் ஆரம்பப்பகுதியில்அரைமதிவால்வுகள் அமைந்துள்ளது. நுரையீரல் நாடியைத் தவிர ஏனைய சகல நாடிகளிலும் ஒட்சிசனைக்கொண்ட குருதியே பாய்கின்றது. நுரையீரல் நாடியினுள் ஒட்சிசனைக் கொண்டிராத குருதியே பாய்கிறது. நாடி, நாளம் ஆகிய தொகுதிகள் மயிர்த்துளைக் குழாய் வலைகள் எனப்படும் பகுதிகள் மூலம் தொடர்புபட்டுள்ளது. வலது சோணை அறைக்குக் குருதியைக் கொண்டு வரும் தொழிற்பாட்டை மேற்பெருநாளமும், கீழ்ப் பெருநாளமும் செய்கின்றன. நுரையீரல் நாளமானது இடது சோணையறைக்குக் குருதியைக் கொண்டு வருகிறது.

இதயத்துடன் நேரடியாகத் தொடர்புடையது ஈரல் வாய் நாளம். குருதிச் சுற்றோட்டத்தில் இரு சுற்றோட்டம் இடம் பெறுகிறது. அவை நுரையீரல் குருதிச்சுற்றோட்டம், தொகுதிச் சுற்றோட்டம் ஆகியவை. இவை இரண்டும் மனிதரில் நடைபெறுவதால் இரட்டைச் சுற்றோட்டம் என அழைக்கிறோம். மயிலூட்டிகளில் மூடிய குருதிச்சுற்றோட்டம் நடைபெறுகின்றது. இழையபாயத்தின் முக்கிய தொழிற்பாடாக குருதிக்கும் கலங்களுக்கும் இடையே பதார்த்தப் பரிமாற்றம் செய்வதாகும். இழைப்பாயம் என்பது குருதிக்கலங்கள் திரவவிழைப் புரதங்கள் என்பவற்றைக் கொண்டிராத திரவவிழையமாகும். நிணநீர்த் தொகுதியில் ஒரே திசையிலே நிணநீர் பாய்ந்து செல்கிறது. நிணநீர்த்தொகுதியில் நிணநீர்ச் சிறு கணுக்கள் காணப்படுகின்றன. பிரதானமான நிணநீர்க் கலன்கள் இரண்டும் இடது, வலது தொகுதிக் காறை கீழ் நாளங்களுள் திறக்கின்றன.

குருதியில் A, B, AB, O என நான்கு பிரிவுகள் உண்டு. இவற்றில் A B குருதியைக் கொண்டவர்கள் சர்வவாங்கிகளாகவும் (எல்லாக் குருதியும் இவருடன் சேரும்). O இனக் குருதியைக் கொண்டவர்கள் சர்வவழங்கிகளாகவும் (எல்லா இனக் குருதிக்கும் இவர் கொடுக்கலாம்) ஏதேனும் ஒரு குருதி வாங்குபவருக்கு குருதி வழங்குபவரிடம் இருந்து குருதியைப் பெறமுடியாது. உடலுக்குச் செயற்கையாகக் குருதி வழங்குதலானது மாறாடு செலுத்தல் (பாய்ச்சுதல்) எனப்படும். ★

> 9, 10 ஆம் ஆண்டுகளில் படிக்கும் மாணவர்களுக்காக இது பிரசுரிக்கப்படுகிறது.
>
> தயாரிப்பு: ஜனரவி

# கோல்ட் ஸ்மித் வாழ்வில் ஒரு நாள்......

ஆலிவர் கோல்ட் ஸ்மித் என்பவர் கட்டுரைகள், கதைகள், நாடகங்கள் எழுதும் ஒரு ஆங்கிலேயர் ஆவர்.

இளகிய இதயம் படைத்த இவருக்கு குழந்தைகள் என்றால் மிகவும் பிடிக்கும்.
ஏழை எளியவர்களுக்கு தன்னால் முடிந்தளவு உதவிபுரிய அவர் தயங்குவதே இல்லை.

கோல்ட் ஸ்மிட் மருத்துவராக வரவிரும்பினார். வைத்தியத்துறைப் படிப்பையும் முடித்தார். ஆனால் வைத்தியத்துறையில் அவர்தொழில் புரியவில்லை. எழுத்துப்பணியையே விரும்பி ஏற்றார்.

ஒருநாள் ஏழைப் பெண் ஒருத்தி இவரின் அன்பு இதயத்தைக் கேள்விப்பட்டு அவரிடம் சென்றாள்.

'ஐயா என்கணவன் மிகவும் சுகயீனமுற்று இருக்கிறார். ஒரு வைத்தியரிடம் காட்டுவதற்கு என்னிடம் போதுமான பணம் இல்லை. தாங்கள் ஒருமுறை வந்து அவரைக் கவனிக்கிறீர்களா...?'

அந்த ஏழையின் வேண்டுகோளுக்கு இணங்கி கொஞ்சமும் தயங்காது கோல்ட் ஸ்மித் அவளது வீட்டுக்குச் சென்றார்.

சுற்றுமுற்றும் பார்த்தார். அடுப்பு எரிந்த சுவடே தெரியவில்லை.

நாட்கணக்கில் உணவு உட்கொண்ட அடையாளமே தெரியவில்லை.

வயோதிப நோயாளியைப் [illegible] அவர்களிடம் இல்லை.

கொஞ்சநேரம் விசாரித்துவிட்டு,

'அம்மா......! நோயாளிக்கு தருவதற்காக சில மாத்திரைகளை அனுப்புகிறேன்.'

என்று கூறிவிட்டுச் சென்றார். வீட்டுக்குச் சென்றவுடன், ஆங்கிலேயர்களின் தங்க நாணயங்களில் 10 கினி காசுகளை ஒரு சிறு பெட்டியில் போட்டு, அதன்மேல்,

'உண்பதற்கு ரொட்டியும், பாலும், குளிர் காய நிலக்கரியும் வாங்கப் பயன்படுத்தவும். பொறுமையாகவும் நம்பிக்கையுடனும் இருக்கவும்.'

என்று ஒரு தாளில் எழுதி ஒட்டினார்.

ஒரு பணியாள் அந்தப் பெட்டியைக் கொண்டுபோய் நோயாளியிடம் கொடுத்தார்.

ஒரு வைத்தியருடைய மருந்துகளைவிட மேலானதாக அப்பெட்டியில் இருந்தவற்றைக் கண்டதும் நோயாளியின் மனம் நெகிழ்ந்து மகிழ்ந்தது.

சில நாட்கள் சென்றதும் நோயாளி ஓரளவு நலமுற்று, காலத்திற்கேற்ற உதவிசெய்த கோல்ட் ஸ்மித்துக்கு நன்றி செலுத்தத்தானே அவரது வீட்டுக்குச் சென்றான். (சி)

## உலகின் துயரம் தீர்ப்பாயே!

கலைமகளே எங்கும் நிறைந்தவளே
கடல்போல் கல்வி தருபவளே
தலைமகளே தமிழ் முதல்மகளே
தாரணி போற்றும் இறைமகளே!

நாவலர் நெஞ்சில் அமர்ந்தவளே
நற்றமிழ் பாவில் உறைந்தவளே
தூவியே மலர்கொண் டுனைப்பாடித்
துதிப்பவர்க் கென்றும் அருள்பவளே!

வெள்ளைக் கமலத்து நாயகியே
வென்றிடும் தமிழின் மணிமுடியே
உள்ளம் மகிழும் உன் இசையால்
உலகின் துயரம் தீர்ப்பாயே!

– நெடுந்தீவு லக்ஸ்மன்

சிறுவர் சுடர்

## விசித்திரக் குள்ளர்கள்

கொங்கோ நதியின் கிழக்குப் பகுதியில் வாழும் இவர்கள் உயரத்தில் குட்டையானவர்கள். இவர்கள் 'பிக்மீஸ்' என அழைக்கப்படும் இனத்தவர். குள்ளர்களாக இருந்தாலும் இவர்கள் பயங்கரமானவர்கள்.

அடர்ந்த காடுகளுக்குள்ளே வாழும் இவர்கள் உணவாக மான், மரை போன்றவற்றை ஈட்டியால் எறிந்து கொன்று உண்கின்றனர். சில பழவகைகளையும் உணவாக உண்ணும் இவர்கள் தமது வசிப்பிடத்திற்குப் பிறரை நெருங்க விடுவதில்லையாம்.

யாராவது தவறி வந்துவிட்டாலும் மறைந்திருந்து கூரான ஆயுதங்களால் குத்திப் போட்டுவிட்டு ஓடிவிடுவார்களாம். யாராவது சந்திப்பதெனில் ஆயுதங்களை மரத்திலே தொங்கவிட்டு முழந்தாளிலே நின்றால்தான் வருவார்களாம் இவ்விசித்திர மனிதர்கள்.

தகவல்:
எஸ். சுரேஷ்

# முகாமைத்துவத் திறமை நிறைந்தது பெண்மை!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

முகாமைத்துவம் என்பது ஒரு குறிக்கப்பட்ட தொழிலில் உள்ள நெளிவு சுழிவுகளை அறிந்து, மனிதர்களையும் உபகரணங்களையும் பணத்தையும் பயன்படுத்தி எதிர்பார்த்த இலக்கை அடைவதேயாகும். இத்தகைய முகாமைத்துவத் திறமையை வியாபாரத்துறைக்கு மாத்திரமன்றி வீட்டு நிர்வாகத்திற்கும் திறம்படப் பிரயோகிக்க முடியும்.

வியாபாரத்துறையில் இந்த முகாமைத்துவம் பலவகைப்படும். உற்பத்தி முகாமையாளர், நிர்வாக முகாமையாளர், நிதிநிலை முகாமையாளர், தரம் பகுக்கும் முகாமையாளர், மேற்பார்வை முகாமையாளர், தொலைத்தொடர்பு முகாமையாளர் போன்றவையே அவைகளாகும்.

### நிதிநிலை முகாமையாளர்

வீட்டு நிர்வாகத்தில் இந்த முகாமைத்துவப் பதவியை வகிப்பவள் குடும்பத்தலைவியேயாகும். அவளும் ஒரு பெண்தான் என்பதை இங்கு ஞாபகப்படுத்துகின்றேன்.

ஒரு குடும்பத்தலைவி தன் கணவனின் வளத்திற்குத் தக்கதாக தன் செலவினங்களை மட்டுப்படுத்தித் தேவையறிந்து செலவு செய்கிறாள். உணவுத் தயாரிப்பு, வீட்டு வாடகை, பிள்ளைகளின் ரியூசன் பணம், பாடசாலை வசதிக் கட்டணம், கொப்பி பேனை போன்ற உபகரணங்களுக்கான செலவுகளை அவள் செய்யத் தயங்குவதில்லை. பிள்ளைகளின் திடீர் சுகயீனங்களுக்கும் அவள் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அத்துடன் கணவனின் வருவாய் சீராக இல்லாத பட்சத்தில் வருவாய்க்கு ஏற்றவாறு செலவுகளை மட்டுப்படுத்துகிறாள். இந்த வகையில் பார்க்கப் போனால் அவள் ஒரு நிதிநிலை முகாமையாளராக (Finance Manager) காட்சி தருகிறாள்.

### உற்பத்தி முகாமையாளர்

வீட்டில் உணவு விஷயத்தில் ஒரு சிக்கல். அவள் கணவருக்குப் பிடித்தமான உணவு வகைகள் மூத்த பிள்ளைக்குப் பிடிப்பதில்லை. பெண் குழந்தைக்குப் பிடிக்கும் உணவு வகைகள் வயதுவந்த பெற்றோருக்கும் மாமன் மாமியாருக்குப் பொருந்துவதில்லை. இந்த இக்கட்டான நிலையில் எல்லோரும் விரும்பத்தக்க வகையில் எப்படிச் சமைப்பது? ஆனால் எப்படியோ எல்லோரையும் திருப்திப்படுத்தும் வகையில் சமைத்து நாளாந்தம் கொடுக்கிறாள். இத்தனைக்கும் தங்கள் வருவாய்க்குத் தகுந்த காய்கறிகள், கடைச் சரக்குகளைக் கொண்டு அவள் சமைத்தாக வேண்டும். தன் திறமையால் அந்தக் கஷ்டமான பணியை அவள் அன்றாடம் நிறைவேற்றிக்கொண்டுதான் வருகிறாள். அத்துடன் வீட்டுக்குத் தேவையான பொருள்களை, அதன் அவசியம் கருதி, முன்கூட்டியே வாங்கி வைத்துக்கொள்கிறாள். இந்த வகையில் பார்க்கும்போது அவள் ஓர் உற்பத்தி முகாமையாளராகத் (Production Manager) தோற்றுகிறாள்.

### பகுத்தறியும் முகாமையாளர்

எந்த முகாமைத்துவத்திற்கும் நேரம் ஒரு பிரதானமான விஷயமாகும். இந்த வகையில் ஒரு குடும்பப்பெண் தன் கணவனின் வேலைநேரம், குழந்தைகளின் பாடசாலை நேரம், வீட்டில் உள்ள முதியோரின் பராமரிப்புக்கான நேரம் என்று பலதரப்பட்ட காலபேதங்களுக்கு ஏற்ப தன் கருமங்களை ஒழுங்குபடுத்திச் செயற்படுகிறாள். இதுவும் போற்றுதலுக்குரிய முகாமைத்துவம் தான்.

குடும்பத்தலைவி சந்தைக்குப் போகிறாள். அங்குள்ள பல வகையான காய்கறிகளைப் பார்க்கிறாள். அதில் தனக்குத் தேவையானவைகளை மட்டும் தரம்பார்த்து வாங்குகிறாள். பின் மளிகைக் கடைக்குச் செல்கிறாள். அங்கும் தங்கள் வருவாய்க்கு ஏற்றதாகவும் உள்ள தரமானதாகவும் தேவையான பொருள்களை வாங்குகிறாள். வீட்டிற்குவந்து தரமிக்க சுவையான சமையல் செய்கிறாள். வீட்டில் உள்ள அனைவரின் ரசனைக்கு ஏற்ற வகையில் அவள் சமையல் அமைகிறது. இங்கு அவள் ஒரு [illegible] (Quality Manager) முகாமையாளராகிறாள்.

- ச. ம. அச்சுதன் -

### மேற்பார்வை முகாமையாளர்

வீட்டில் பலதிறப்பட்ட வேலைகள் அவள் கவனிப்புக்காகக் காத்திருக்கின்றன. அவைகள் அத்தனையையும் அவளால்மாத்திரம் செய்து முடிக்க முடியாது. வீட்டில் உள்ள மற்றவர்களைக்கொண்டும் சிறுசிறு கருமங்களை அவள் செய்விக்கவேண்டும். பிள்ளைகளைத் தத்தமது கருமங்களைத் தன் உதவியின்றி செய்யுமாறு பணிக்கிறாள். வேலைக்காரர்களிடம் அவர்களுக்குரிய வேலைகளைச் செய்யுமாறு கட்டளை இடுகிறாள். தன் மாமியாரிடமும் சிறு உதவிகளைச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறாள். இது மிகவும் சங்கடமான ஒரு விஷயம் என்றாலும் தனது சாதுரியத்தாலும் பொறுமையாலும் மாமியாரையும் தன் வேண்டுகோளின்படி செயற்படவைக்கிறாள். இந்தவகையில அவள் ஒரு மேற்பார்வை முகாமையாளராக (Supervising Manager) தோற்றுகிறாள்.

### பொதுஜனத்தொடர்பு முகாமையாளர்

ஒரு திறமையான குடும்பத்தலைவி பொதுஜனத்தொடர்பு முகாமையாளராகவும் காணப்படுகிறாள். தன் குழந்தைகள், வேலைக்காரர்கள், அயலவர்கள், நண்பர்கள், வம்பளப்பவர்கள், வதந்தி பரப்புபவர்கள் —இப்படிப் பலதரப்பட்டவர்களுடன் அவள் நாளாந்தம் அளவளாவுகிறாள். அவர்களுள் யார் யாரை தூரத்தில் வைத்துக் கொள்ளவேண்டும், எவரெவரை அருகில் வைத்துக் கொள்ளவேண்டும்என்பதைத் தீர்மானித்துக்கொள்கிறாள், இங்கு அவள் ஒரு பொதுஜனத்தொடர்பு முகாமையாளர் (Public Relations Manager) என்ற வகையில் சேர்கிறாள்.

### தொலைத்தொடர்பு முகாமையாளர்

வெளியூர்களில் இருக்கும் உறவினர்களில் யார் யாரிடம் கடிதத்தொடர்பு வைக்க வேண்டும். எவருக்கு கடிதம் எழுதினால் எதிர்பார்க்கும் உதவி கிட்டும். ஒரு அவசர தேவைகளுக்கு எந்த உறவினருடன் அல்லது கணவரின் நண்பருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டால் பயனுண்டு போன்ற தொலைத்தொடர்பு விஷயங்களில் தனது கணவனுக்கு அறிவுறுத்தல் செய்யும் வெற்றியையும் இவள் பெற்றிருக்கிறாள். இந்தவகையில் இவள் ஒரு தொலைத்தொடர்பு (Communication Manager) முகாமையாளராகக் காட்சி தருகிறாள்.

இவை மாத்திரமல்ல இன்னும் எத்தனையோ முகாமைத்துவத் திறமைகள் கொண்டவள் பெண். என்பது நிருபணமான ஒரு விடயம். ஆகையால், நீங்கள் ஏற்றுக்கொண்டாலும்சரி, ஏற்றுக்கொள்ளாவிட்டாலும்சரி, முதன்மையும் முகாமைத்துவமும் நிறைந்தது பெண்மையே என்பது என்முடிவு.

(முற்றும்)

நங்கை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாடல்கள் சமுதாயத்துக்காக எழுதப்பட வேண்டும்

'சின்னப் பூவே மெல்லப் பேசு' படம் மூலம் பாடல்கள் எழுதியும் இசையமைத்தும் அறிமுகமாகி இருப்பவர் திரு. ஏ. ராஜ்குமார்.

பாடல்கள் எழுதுவது, இசை அமைப்புப் பற்றி அவர் கூறுவதாவது;

ஒரு பாடல் படத்திற்காக மட்டும் எழுதப்படாமல் சமுதாயத்தையும் கருத்தில் கொண்டு எழுதப்பட்டு 'மெலோடி' யாக அமைத்தால் அப்பாடல் என்றும் பசுமையாக நிலைத்து நிற்கும்.

இதற்கு உதாரணமாக கண்ணதாசன் அவர்களின் பாடலையும், விஸ்வநாதன் அவர்களின் இசையையும் கூறலாம்.

## சென்னையிலிருந்து தி. மேனகன்

நான் கதைக்கான கருவை மனதில் வாங்கிக்கொண்டு கவிதை எழுதுகிறேன். அதற்கேற்ப இசையை அமைக்கிறேன்.

நான் இசை அமைக்கும் படங்களில் நான்தான் பாடல்களை எழுதுவேன் என்று அடம் பிடிப்பது கிடையாது. அவர்களாக அனுமதித்தால் பாடல்களையும் எழுதுகிறேன். ஆனால் பெரும்பாலும் பாடல், இசை என்று வெவ்வேறு ஆட்களைப் பார்ப்பதைவிட ஒருவரிடம் விட்டுவிடுவதே நல்லது என்று கருதி என்னிடம் பொறுப்பை விட்டுவிடுகிறார்கள்.

இசையுலகம் பெரிய கடல். கரை காண முடியாதது. ★

## தமிழில் மூன்று படம் மட்டுமே!

தமிழ் நடிகை மாதவி இனி வருடத்துக்கு மூன்று தென் இந்தியப் படங்களில் நடிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்.

இந்திப் படவுலகில் அவர் பிஸியான நடிகையாகி விட்டதே காரணம்.



மாதவி

இதை மாதவியே பம்பாய் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கின்றார். ★

# நூற்றாண்டு விழா கண்ட ஹொலிவுட் சினிமா

## - ஒரு கண்ணோட்டம் -

இன்றைய திரைப்பட உலகத்திற்கு முன்னோடி என்று கருதப்படும் ஹாலிவுட் நகரம் துவங்கப்பட்டு நூறாண்டுகள் ஆகிவிட்டன.

மௌனப்படங்கள் வெளிவரத் துவங்கியபோது நடிகர் நடிகையருக்குக் கிடைத்த மதிப்பையும் ஆதரவையும் இன்று கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாது.

நாளடைவில் பேசும் படத்திற்குத் தனி-ராக்-பாப் மியூசிக்கிற்குத் தனி-டெலிவிஷனுக்குத் தனி என நடிக நடிகைளைத் தேர்ந்தெடுத்து ரசிக்கத் தொடங்கி விட்டனர் ரசிகர்கள்.

இன்று உலகம் முழுதுமே பத்திரிகைத்துறைக்கு அடுத்து மக்களிடையே வெகு சுலபமாகச் சென்றடையும் மீடியம் சினிமாதான்.

ஆரம்பக் காலங்களில் பிரான்சில் லூமியர் சகோதரர்களும், அமெரிக்காவில் எடிசனும் எடுத்த முதல் படங்கள் மிகவும் சாதாரணமானவை.

நடிகர் என்ற முறையில் முதன் முதலில் மக்களிடையே செல்வாக்குப் பெற்றவர்களே இர்வினும், ஜான். சி. ரைஸும் தான்.

1896 ஆம் ஆண்டில் இவர்கள் நடித்து வெளிவந்த 'தி கிஸ்' என்ற படம்தான் முதன் முதலில் சென்சார் போர்டைத் தோற்றுவிக்க வழிசெய்த படமாகும்.

அப்போதைய படங்களைக் குறிப்பிட்ட ஐந்தாறு சம்பெனிகள் தான் தயாரித்து வந்தன. நடிக - நடிகையர்களின் பெயர்களை டைட்டிலில் போட மாட்டார்கள். குறிப்பிட்ட கதாபாத்திரங்களின் பெயர்களையோ அல்லது இன்னார் படக் கம்பெனியின் கதாநாயகன்-கதாநாயகி என்று தான் பத்திரிகைகள் விமர்சனம் செய்யும். ரசிகர்களும் அப்படித்தான் பேசிக்கொள்வார்கள்.

1910 ஆண்டு Independent motion picture company தான் (பின்னர் யூனிவர்சல் பிக்சர்ஸ் ஆக உருவானது) முதன் முதலாகத் தன்னுடைய கதாநாயகனை 'ப்ளோரன்ஸ் லாரன்ஸ்' பெயரை டைட்டிலில் போட்டுக் காட்டியது. இதற்கு ரசிகர்களிடையே பெருத்த வரவேற்புக் கிடைத்தது.

### பொற்காலம்

இதன் வெற்றியைத் தொடர்ந்து பிற கம்பெனிகளும் நடிக - நடிகையரின் பெயரை டைட்டிலில் போட, நட்சத்திரங்களின் பெயரைப் பார்த்து விநியோகஸ்தர்கள் படம் வாங்கும் வழக்கம் பரவலாயிற்று.

மௌனப்பட நடிக-நடிகையருக்கு இருந்த மதிப்பு பேசும் படம் வந்தவுடன் குறைந்து போயிற்று. அதையும் மீறிச் சில நடிக-நடிகையர்கள் ரசிகர்கள் மத்தியில் செல்வாக்குடன் இருந்ததுமுண்டு. டெலிவிஷன் வரும்வரை சினிமா உலகம் பொற்காலமாக இருந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

டெலிவிஷன் திரையுலகைப் பயமுறுத்திய வேளையில் ரசிகர்களைக் கவர மேலும் பல புதிய யுக்திகளைக் கண்டுபிடிக்க வேண்டியதாயிற்று. சினிமாஸ்கோப், 70 எம். எம். போன்ற புதிய முறைகள் ரசிகர்களை மீண்டும் கவரத் துவங்கியது.

அந்தக்காலத்தில் ஒவ்வொரு கம்பெனியும் தங்களுக்கென்று நடிக நடிகைகளைப் போட்டி போட்டுக் கொண்டு உருவாக்கத் தொடங்கியது. எம். ஜி. எம். நிறுவனம் கிராட்டோ சார்போ: க்ளார்க் கேபிள், ஸ்பென்சர் டிரேசி, மிக்கிருனி போன்றவர்களையும், வார்னர் பிரதர்ஸ் பெட்டி டேவிஸ், எரால் ஃபிளின்; ஜான் கிராஃபோர்டு, பால்முனி, லாரன் பிகால், பார்பரா ஸ்டான்வைக் போன்றவர்களையும், பாரமவுண்ட் காரி கிராண்ட், கிர்க்டக்ளஸ், பர்ட் லங்காஸ்ட்டர், ஆலன் லாட் போன்றவர்களையும் உருவாக்கின. கொலம்பியாவிலிருந்து பல நடிக - நடிகையர்கள் உருவானாலும் குறிப்பிடத்தக்கவர் ரீடாஹெவர்த் ஒருவர் தான்.

டுவென்டியத் செஞ்சுரி ஃபாக்ஸ் பல்வேறு துறைகளிலும் பல நடிக- நடிகையரை உருவாக்கியது. அதேபோல் ஆர். கே. ஓ. நிறுவனம் உருவாக்கியர்களின் பட்டியல் மிக நீளமாகும்.

உலகம் முழுவதும் பிரபலமானவர்களாக ரசிகர்களின் பேராதரவுடன் இவர்கள் விளங்கி வந்த நேரத்தில்தான் அமெரிக்க அரசாங்கம் சினிமாத்துறையை சம்யூனிச வளர்ச்சிக்கு எதிராகத் திசை திருப்பத் தொடங்கிற்று.

இதன் விளைவாக உலக மார்க்கெட்டில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனிப்படங்கள் முன்னேறத் தொடங்கின.

நாற்பதுகளில் ஆண்டொன்றிற்கு சுமார் ஐந்நூறு படங்களைத் தயாரித்துவந்தஹொலிவுட் 1946ஆம் ஆண்டில் மட்டும் 1,962 மில்லியன் டாலர்களை இலாபமாக அடைந்த ஹொலிவுட் டெலிவிஷன் வருகையால் பெரும் பாதிப்பிற்குள்ளாகத்தொடங்கியது. 1946 ஆம் ஆண்டில் டெலிவிஷன் அறிமுகமான முதல் வருடத்தில் மட்டும் 11,000 செட்டுகள் விற்பனையாயின.

1952 ஆம் ஆண்டில் இந்த விற்பனை 14 மில்லியன்களாகியது அதேபோல் ஹொலிவுட் நடிகர்களுக்கென்றிருந்த செல்வாக்கும் குறையத்தொடங்கியது.

பிரிஜட் பார்டொட், கிளின்ட் ஈஸ்ட்வுட், ஜான்வைன், எலிசபெத் டெய்லர் என பிரான்ஸ், பிரிட்டன் நடிக நடிகையருக்கு மதிப்பு ஏறத்தொடங்கியது.

அவர்களுக்கென்று ரசிகர்கள் மத்தியில் ஒரு இமேஜ் உருவாகத்தொடங்கியது.

தங்களுடைய நடிப்பில் வித்தியாசங்களைக் காட்டத் தொடங்கினார்கள். இது மர்லின் மன்றோ ஸ்டைல், கரோல் பார்க்கர் ஸ்டைல், மார்லன் பிராண்டே பாணி, மாண்ட்கோமரி கிளிஃப்ட் பாணி என ரசிக்கத்தொடங்கினார்கள்.

இந்த ரசிப்பு இன்று பால் நியூமன், டஸ்டின் ஹாஃப்மென் வரைதொடர்ந்துகொண்டிருக்கிறது.

—'The World's Great Movie Stars and their Films' என்ற புத்தகத்திலிருந்து சில பகுதிகள். ★

# 'தரவிருத்தி'யை நோக்கி கல்விச் சீரமைப்பு

இலங்கையின் கல்விமுறை தொகைவிருத்தி (Quantity Development) நடவடிக்கையைவிட தரவிருத்தி (Quality Development) நடவடிக்கைக்கே முக்கியத்துவம் அளிக்கவேண்டுமென்ற கருத்து அண்மைக் காலத்திலிருந்து-சமகாலத்திலும் மிகமுக்கியமாக வற்புறுத்தப்பட்டுவருகின்றது.

### காரணிகள்

1981 ஆம் ஆண்டு கல்வி, உயர்கல்வி அமைச்சுக்களினால் தயாரித்து வெளியிடப்பட்ட கல்வி வெள்ளை அறிக்கைக்கு முன்னோடியாக அமைந்த 'பகுதிஆய்வு' (Section Paper) களில் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது. இதனைத்தொடர்ந்து கல்வி வெள்ளையறிக்கையிலும் அதனையடுத்து ஆரியவன்ச-குலசேன அறிக்கையிலும், குலசேன - ஜயசிங்காவின் சேவை அறிக்கையிலும் இது வலியுறுத்தப்பட்டது. அத்துடன் அண்மைக் காலத்து கல்வி முகாமைத்துவக் கருத்துக்களில் முக்கியத்துவம்பெற்ற திரு. நீல் பெர்னண்டோ அவர்களின் முகாமைத்துவ விருத்தி தொடர்பான ஆய்வுகளில் இக்கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. அண்மையில் திரு. வணசிங்கா தலைமையில் நியமிக்கப்பட நிருவாக சீர்திருத்தக் குழுவின் அறிக்கைப்படியும் தரவிருத்தி பற்றிய கருத்துக் கூறப்பட்டது.

1987 ஆகஸ்டில் நிதியமைச்சரின் வரவு செலவுத் திட்ட அறிக்கையிலும் தரவிருத்தி பற்றிய கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

1980 ஆம் ஆண்டில் இலங்கையில் நடைபெற்ற பொது நலவாய நாடுகளுக்கிடையிலான கல்வி மகாநாட்டில் 'இலங்கையின் கல்வியில் தரவிருத்தி சம்பந்தமான எவ்வித ஏற்பாடுகளும் இருக்கவில்லை' எனத் தெரிவிக்கப்பட்ட கருத்தே இலங்கையில் மேலே கூறியவாறான சிந்தனைக்கு உடனடி உந்து சக்தியாக அமைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் நடுக்கூற்றில் பிரித்தானியாவின் 44 ஆம் இலக்கச் சட்டத்தில் கல்வி, சமுதாயத்தின் ஆன்மீக, உடல், உள, ஒழுக்க விருத்திக்கு வித்திடல் வேண்டுமென்று கூறப்பட்டது. 1976 ஆம் ஆண்டளவில் மேல்கூறியவற்றுடன் பொருளாதார விருத்திக்கும் — முக்கியத்துவம் பெற்றுவரும் தொழில் நுட்ப — தொழில் நுணுக்க விருத்திக்கும் ஏற்றதாகவும் கல்விமுறையில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்து (Concept) ஏற்கப்பட்டது.

இச்சிந்தனை மாற்றம் இலங்கையிலும் கல்வித்துறையூடாகச் நோக்கப்பட்டது.

இதுவரை காலமும் கல்வியின் நியமங்கள் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தவில்லை. இலங்கையின் மொத்தத் தேசிய வருமானத்தில் 3 வீதமும், அரச மொத்தச் செலவினத்தின் 8.5 வீதமுமாக கல்விச் செலவீடுகள் அமைந்திருக்க வேலைவாய்ப்பின்மை அதிகரித்துச் சென்று கொண்டிருந்தது.

ஒருபுறம் ஆட்களுக்கான வேலையில்லாத நிலை அதிகரித்துச் செல்லும் அதே நேரத்தில் மறுபுறத்தில் குறிப்பிட்ட வேலைவாய்ப்புகளிலிருந்தும் அவ்வேலையினைப்புரியும் ஆட்களற்ற முரண்பட்ட நிலையினை எமது கல்வியின் விளைவு ஏற்படுத்திற்று. நடைமுறையில் இருந்த கலைத்திட்டம் சமூகத்தின் தேவைகளை ஒட்டியதாக இருக்கவில்லை. சமுதாயத்தை மையமாகக்கொண்டு அதனை ஒட்டியதான கல்விமுறை அமையவேண்டிய தேவை இங்கு ஏற்பட்டது.

திட்டமிடப்படாத நிலையில் ஏனைய அபிவிருத்தி முயற்சிகளுக்காகக் கல்வியின் செலவினத்தைக் குறைப்பதும், 'கல்வி விரயம்' அதிக அளவினதாக ஏற்படுவதும் கல்வியின் தரவிருத்திக்கு முற்றிலும் மாறுபாடான அம்சங்களாக அமைந்துவிட்டன.

### விரயங்கள்

'கற்பித்தல் — கற்றல்' நடவடிக்கைகளை விருத்தியாக்குதல் கல்வி நடவடிக்கைகளில் இடம்பெறவில்லை. மாணவர்கள் கற்றல் நடவடிக்கைகளினதும் 'இடைவிலகல்', திரும்பவும் 'ஒரே வகுப்பில் மீண்டும் கற்றல்' என்பன கல்வி விரயங்களின் சிறந்த உதாரணங்களாகும். 1984 ஆம் ஆண்டின் 'யுனஸ்கோ'வின் அறிக்கையில் இலங்கையில் பாடசாலை செல்லாதோர் 18 வீதமாகவும் ஆரம்ப வகுப்புடன் நின்று விடுவோர்தொகை 50வீதமாகவும் இடைநிலைக் கல்வியுடன் பாடசாலையை விட்டு விலகுவோர் 28 வீதமாகவும், உயர் நிலை—இடைநிலைக்கல்வியில் நிலைத்து நிற்போர் 04 வீதமாகவும் எஞ்சுகின்றனர். இங்கு கல்விச் செலவீடுகளின் பயன்பாட்டை 32வீதத்தினர் மட்டுமே அனுபவிக்க ஏனைய 68 வீதத்தினர் கல்வியில் இடைவிலகுவது கல்விச்சாதனங்களில் உத்தம நிலைப்பயன்பாடுகள் இருக்காமையையே காட்டுகின்றன. அரச மொத்தச் செலவீட்டில் 8.5 வீதத்தினைக் கல்விக்காக அரசு செலவு செய்தும், படிப்பறிவு வீதம் 87.3 வீதமாக (எழுத-வாசிக்கத் தெரிந்தோர்) உயர் நிலையைக் காட்டி நிற்பினும் படிப்பறிவு வீதத்தில் 43.5 வீதமாகவுள்ள இந்தியாவுடன் ஒப்பிடும்போது கல்வியின் தரவிருத்தி மிகவும் குறைந்துள்ளமையினைக்காண முடிகின்றது.

### சமூக நியமங்கள்

ஆசிரியர்களது தரமும், கல்வி நிருவாகிகளது தரமும் சமூக நியமங்களை' ஒட்டிய, தாக அமையவேண்டும். ஆசிரியர்களது மனப்பாங்கு, கற்பித்தல் முறை என்பனவும் சமூக நியமங்களோடு இயைபுள்ளதாக அவர்களுக்கான பயிற்சிமூலம் ஏற்படுத்தப்பட வேண்டும். இவ்வாறான நோக்கமோ, திட்டமோ எமது நாட்டு ஆசிரிய கல்விமுறையில் அண்மைக்காலம்வரை இருக்காமையை பல ஆய்வுகள் நிரூபிக்கின்றன.

> எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள பாடசாலை அதிபர்கள் சேவை தரம் I, II, III— தெரிவுப் போட்டிப் பரீட்சையின் தேவை கருதி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

நிருவாக வினைத்திறன் இன்றுவரை குறைந்து கொண்டு சென்றமைக்குச் சம்பள அமைப்பும், சம்பளத் திட்டமும் காரணமாகுமென திரு. வணசிங்காவின் அறிக்கை தெளிவுபடுத்துகின்றது. அண்மையில் ஏற்படுத்தப்பட்ட சம்பள முரண்பாடு நீக்கல் நடவடிக்கைக்கு முன்பு ஏனைய வளர்முக நாடுகளுடன் ஒப்பிடும்போது கூடிய-குறைந்த சம்பள விகிதம் இலங்கையில் 7.5க்கு 1 ஆக இருந்தது. இந்தியாவில் இது 12க்கு 1 ஆகவும், பாகிஸ்தானில் 17க்கு 1 ஆகவும், மலேசியாவில் 25க்கு 1 ஆகவும் சிங்கப்பூரில் 62க்கு 1 ஆகவும் இருக்கின்றது. இதன் மூலம் சம்பள ஏற்றத்தாழ்வு குறைந்திருந்தாலும் ஊதியத்தினை ஏனைய நாடுகள் இலங்கையை விட அதிகரித்த நிலையில் வழங்குவது மூளைசாலிகளை வெளியேற்றிக் கல்வியில் தரவிருத்தியைத் தடுக்கின்றது என்பது புலப்படுத்தப்படுகின்றது.

### வேலைவழங்கும் 'அமுதசுரபி'

கட்சி அரசியலில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களும், அதிகரித்த தலையீடுகளும் அரசதிணைக்களங்களையும் கூட்டுத்தாபனங்களையும் வேலை வழங்கும் 'அமுதசுரபி' யாக்கி விட்டதென வணசிங்கா அறிக்கை தெரிவிக்கின்றது.

பொருத்தமான கலைத்திட்டமும், அதன் அபிவிருத்தியும் -சரியான அமுலாக்கமும், மாணவ ஆலோசனை வழிகாட்டலும், போதனை முறை, செய்முறைகளில் புதுமை காணும் அணுகுமுறைகளும், ஆளணி விருத்தி, ஏற்றமுகாமைத்துவம், பொருத்தமான வளப்பகுப்பாய்வும் - உத்தம பயன்பாடும் கற்றல் - கற்பித்தலுக்கான பொருத்தமான துணைச்சேவைகளும், அவற்றுக்கான சரியான மதிப்பீடு போன்றனவும் பாடசாலை — சமுதாயத்தொடர்பும் தரவிருத்தியின் பின் ஊடகங்களாக அதனை வேண்டி நிற்கின்றன.

### தரவிருத்திக்கான எத்தனங்கள்

கலைத்திட்டங்களை உருவாக்கவும், ஆய்வுகளை மேற்கொண்டு புதுமைகாணும் உத்திகளைக் கண்டறியவும் 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டப்படி தேசிய கல்வி நிறுவனம் [NIE National Institute of Education] உருவாக்கப்பட்டது.

கலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்த சேவைக்காலப் பயிற்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டு சேவைக்கால ஆலோசகர் 'நிரந்தரப் பதவி அணிக்குள்' நியமிக்கப்பட்டனர்.

தரமான ஆசிரிய அணி ஒன்றினை உருவாக்க 1986 ஆம் ஆண்டின் 30 இலக்கச் சட்டப்படி கல்விக் கல்லூரிகள் College of Education) நிறுவப்பட்டு வருகின்றன.

கல்வி நிருவாகிகளை உருவாக்க தேசிய கல்வி நிறுவனத்தின் கீழ் இலங்கைக் [illegible] கல்லூரி (Sri Lanka Staff College for Educational Administration) முறை உருவாக்கப்பட்டுள்ளது:

திரு. வணசிங்காவின் தலைமையிலான நிருவாக சேவைக் குழுவின் சிபார்சுகளுக்கிணங்க சல்விச் சேவையில் இடம்பெறும் நிருவாகிகள், ஆசிரியர் பதவி அணியினரது சம்பள உயர்வுடன் தரஉயர்வும் மாற்றப்பட்டது. இலங்கைக் கல்விச் சேவையினை இலங்கை நிர்வாக சேவையுடன் சமப்படுத்தப்பட்டமை இதற்கான முக்கிய உதாரணயாகும்.

கொத்தணி முறையில் வளங்களின் உத்தம பயன்பாட்டு முறைகள் அனுமதிக்கப்பட்டதுடன் கிராமப்புறக் கல்வியின் தரவிருத்திக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கல்வி நிருவாகப் பன்முகப்படுத்தல் முக்கிய அம்சமாகும். ஏனெனில் நிருவாகம் சமூகத்துடன் தொடர்புள்ளதாக இருக்கவேண்டும். கல்வி தொடர்பான கொள்கையாக்கல் நடைமுறை கீழ்மட்டத்தில் இருந்தே வரவேண்டும். அப்போது தான் தரவிருத்தி கூடும். இவ் அடிப்படையில் அண்மைக்கால நடவடிக்கைகள் ஊக்கமளிக்கின்றன.

பதின்மூன்றாவது அரசமைப் புத்திருத்தத்தின்படியான மாகாணசபைகளிற்கு கலைத்திட்டத்தினை மாற்றுதல், பரீட்சை நடத்துதல் போன்ற அதிகாரத்தினை அளிப்பதும்-பிரதேச சபைகளுக்கும் இவ் ஆலோசனை அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதும் சமுதாய மையக் கல்விமுறை ஏற்பட வழிவகுக்கின்றது.

- க. இராசதுரை -
(B. Ed., B A (Pol Science)

ஆசிரியர்களது தரம் ஆகக் குறைந்தது பட்டயம், பட்டதாரிகளது தரத்துக்கொத்ததாக கல்விக் கல்லூரிகள் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டு சேவைக்குமுன்பே பயிற்றப்பட்டதாக சேவைக்குள் கொண்டுவரப்படுவது தொழில்சார் தரவிருத்திக்கான ஏற்பாடாகும்.

### நடைமுறைப்படுத்துவதில் பல தடைகள்

நடைமுறையிலுள்ள கல்வி அமைப்புமுறை மிகவும் இறுக்கமானதாகவுள்ளது. இதனை அறிவு, திறன், மனப்பாங்கினைப் பொறுத்ததாக மாற்றுவது மிகுந்த கடினமாகவுள்ளது. 1971 ஆம் ஆண்டின் கல்வித்திட்டம் தோற்றமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

கல்வி மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உடனடிப்பயிற்சி வழங்க முடியாமலிருப்பதும், அவ்வாறு பயிற்சி வழங்குவதற்கென அதிக அளவில் செலவு செய்தல் மேலும் தொகை விருத்திக்கு மட்டுமே வழி கோலுவதாகவும் அமையலாம்.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு தரவிருத்திக்கு, தொகை விருத்தியும் ஓரளவு தேவை. இதற்கு தற்போதைய கல்விச் செலவினமாகிய 8.3 வீதத்திற்கு அப்பால் மேலும் தேவைப்படுகின்றது. வேறு அபிவிருத்தித்திட்டங்களுக்காக கடன்படும்போது தரவிருத்திக்கான முயற்சிகளுக்குத் தடை ஏற்படுகின்றது.

ஆசிரியர்களின் வாழ்க்கை வளத்திற்கான போதுமான சம்பள உயர்வு இன்மையும் தரவிருத்திக்குத் தடையாகவுள்ளது.

இன்று ஆசிரிய சேவையில் தொழில் சார்ந்த தகைமை உள்ளவர்கள் மூன்றில் ஒரு பங்கிற்கு மேலாக இல்லை. பெரும்பாலான ஆசிரியர்களுக்கு அரைகுறைத் தகைமையிருப்பதும் தரவிருத்திக்குத் தடையாகவுள்ளது.

கல்வி நிருவாகிகளுக்கான பயிற்சி அளிப்பவர்களின் மனப்பான்மைகூட விஞ்ஞான ரீதியான கண்ணோட்டமுள்ளதாகவும், புதுமைகாணும் காலத் தேவையினை ஜீரணிக்கும் மனோநிலையுடையவர்களாகவும் இல்லாமை தரவிருத்திக்குத் தடையாக இருப்பதை திரு. நீல் பெர்னண்டோ கோடிட்டுக் காட்டியுள்ளார்.


தரவிருத்தியானது கல்வியில் ஏற்பட கல்வி வளம் சரியாகப் பயன்படுத்தப்படுவதும், கல்வித்தரம் திட்டமிட்டு அதிகரிக்கவேண்டியதும், சமூக நோக்கில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படலும், திறமையும், தகுதியுமானவர்களைத் தெரிந்தெடுக்கும் பரீட்சை முறையில் பதவி உயர்வுகள் அளிக்கப்படுவதும். ஆசிரியர்சேவையினை தரமுள்ளதாக்குவதும் (Professional Type) கட்டாயமானதும் அத்தியாவசியமானதுமாகும். ★

# ரஜனி நடித்த ஆங்கிலப் படம்

ரஜினிகாந்த் நடித்தபடம் என்றால் சண்டைக்காட்சிகள் நிறைந்திருக்கும் என்று அவர் ரசிகர்கள் எதிர்பார்ப்பார் ஆனால் அவர் நடித்திருக்கும் ''பிளட் ஸ்டோன்'' ஆங்கிலப் படத்தில் அவர் நடித்த சண்டைக் காட்சி 120 அடியே இடம் பெற்றுள்ளது.

இதில் ரஜினிகாந்த் டாக்சி டிரைவராக நடிக்கிறார்.

இந்திய இளவரசி ஒருத்தியிடம் விலை உயர்ந்த வைர மோதிரம் இருக்கிறது. அந்த இளவரசி காட்டுக்குப் போனபோது புலி அடித்துக்கொன்று



ரஜனி

விடுகிறது. அந்த வைரத்தில் ரத்தம் உறைந்து அந்தக் கல்லுக்கு ஒரு அபூர்வ சக்தி வந்துவிடுகிறது.

இந்த வைரக்கல்லை வைத்திருப்பவர் நல்லது நினைத்தால் நல்லது நடக்கும்; கெட்டது நினைத்தால் தீமைகள் விளையும்.

இந்த வைரக்கல் வெளிநாட்டுக்குக் கடத்தப்பட்டு, மீண்டும் இந்தியாவுக்கே வருகிறது. சென்னை வந்த வெளிநாட்டுத் தம்பதிகளின் பெட்டியில் அது சிக்குகிறது. அதை அவர்கள் ரஜினிகாந்தின் டாக்சியில் தவறவிட்டு விடுகிறார்கள்.

ரஜினிகாந்த் அந்தத் தம்பதிகளுக்கு உதவுவதுதான் கதை.

இதில் ரஜினிகாந்துக்கு ஜோடி கிடையாது. ★

வெள்ளித்திரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை!

சாதனம் ஒன்றுமின்றிச் சாதிப்பார் உலகில் இல்லை. ஆதலின், யாதேனும் ஒன்றைப் பெறவோ, துய்க்கவோ வேண்டுமாயின் அவற்றிற்குரிய சாதனங்களாலேயே கைகூடக் காண்கின்றோம்.

அதுபோலவே உயிர்கள் தம்மைப் பற்றியுள்ள மலத்தினை நீங்கிப் பிறவித் தொடர்பு அறுத்தற்கும் வீடுபேறு எய்தற்கும் ஏற்ற சாதனங் கொண்டாலன்றி அவை கைகூடா.

மனிதப் பிறவியின் நோக்கம் மாதேவனை மனத்தால் நினைப்பதற்கும் வாக்கால் வாழ்த்துவதற்கும் காயத்தால் வணங்குவதற்குமாகும்.

'மானிடப் பிறவி தானும்
வகுத்தது மனம்வாக்காயம்
ஆனிடத் தைந்துமாடி
அரன் பணிக்காக வன்றோ'

என்ற ஸ்ரீ அருணந்திசிவாச்சாரியாரின் அருள்வாக்கிற்கமைய அகப்புற வழிபாடும், தவம் முதலிய பிறவும் அச்சாதனங்களாகும்.

### அருட்பேறு

ஆண்டவன் அருட்பேறு குறித்து உயிர்கள் மேற்கொள்ளும் தவங்கள் சிந்தை முதலிய கருவிகளால் நிகழ்வனவாகும்.

சிந்தையால் சிவன் திருவுருவை நினைத்தல், உடற் செய்கைகளாற் தொழுதல், இறைவன் புகழ்மொழிகளைப் பிறர் கூறக் கேட்டல், தான் கூறல் இவற்றை,

'சிந்தை செய்கை கேள்வி
வாக்குச்சீரில் ஐம்புலங்களான
முந்தையான காலம் நின்னை
எய்திடாத மூர்க்கனேன்'

என்ற மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்தின் மூலம் கூறுமாற்றல் அறியலாம். இங்ஙனம் நினைத்தலும், தொழுதலும், கேட்டலும், கூறலுமாகிய இவை சிந்தை-செய்கை - கேள்வி - வாக்குகளால் நிகழும் தவச்செய்கைகளாகும்.

### சிவமயம்

இத்தவச்செய்கைகளை உடையவர்க்கு மெய், வாய், கண், மூக்கு, செவிகள் வாயிலாக நுகரப்படும் புலன்கள் எல்லாம் சிவமயமாகவே நிகழும். இங்ஙனம் சிவமயமாக நிகழும் நிலை சித்தம் சிவமாகப் பெற்றவர்க்கே இயல்வதாகும்.

சித்தம், மெய், வாய் முதலிய பொறிகள் வாயிலாக உலகியற் புலன்களை விரும்பும். அதனை அறிவினால் தடைப்படுத்த வேண்டும்.

அங்ஙனம் தடைப்படுத்தியவர்களே சிவஞானிகள் மெய்யடியார்கள். உலகியற் பொருள்களைப்பற்றி கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து உற்றறியுமது ஐம்புலன்களின் இயல்பு. இங்ஙனம் உலகியற் பொருளைப் பற்றுமல் ஐம்புலன்களையும் சிவமயமாகவே கண்ட சிவஞானிகள் பலராவார்.

அவர்களுள் ஒருவர் அன்டின் வரகுணதேவர் சிறந்த சிவபக்தர். பார்த்த இடமெல்லாம் பரமனைக் காணும் உணர்வுடையவர் அவ்வன்பர். உதிர்ந்து கிடந்த வேப்பங் கனியை ஆண்டவன் அருள் குறியென்று கண்டார்.

இதுபோல் குளத்திலுள்ள தவளை கத்துவதை இறைவன் திருப்பெயரை இயம்பினதாகக் கேட்டதுமாகியவை சிவமயமான புலன் நுகர்ச்சிகளாகும். இதனை,

காம்ப வி(ழ்)ந்துதிர்ந்த
கனியுருகக் கண்டு
வேம்புகட்கெல்லாம்
விதானம் அமைத்தும்
குவளைப் புனலிற்
றவளை அரற்ற
ஈசன் தன்னை ஏந்தின என்று
காசும் பொன்னும்
கலந்து(தூ) வியும்.

என்று பட்டினத்தடிகள் கூறியதன் மூலம் அறியலாம். ஒரு சிவஞானி உலகியலில் நுகரப்படும் ஐப்புல இன்பங்களைச் தாம் நுகரும் ஐம்புல இன்பங்களை சிவ அர்ப்பணம் செய்ய வேண்டுமென்பதையும் முன்னமே அறியாத — அடையாத 'மூர்க்கனேன்' என்று மாணிக்கவாசகப் பெருந்தகை கூறிக் கொள்வதை நம் போலியரைக் குறித்தே யாகும்.

பண்டைப் பிறவிகளில் சிந்தை முதலிய கருவிகளாலும் மெய் முதலியவற்றாலும் சிவனைப்பற்றி இருந்தால் இப்பிறவியில் திருவடி இன்பம் எளிதில் பெற்றிருக்கலாம்.

பண்டைய பிறப்புக்களில் உண்மைப்பொருளை உணர்ந்து சாதனங்களை மேற்கொள்வதற்குரிய அறிவு கைவரப் பெறவில்லை- ஆதலின் தம்மை மூர்க்கனேன் என்கிறார்.

அம்மட்டோ முத்தி நெறியறியாதவன் மூர்க்கவன் - அவனோடு தலைப்பெய்த தன்னையும்' மூர்க்கன்' என்கிறார் அடிகளார்.

அன்றியும் உயிர்களால் என்றும் நினைத்தற்குரியவன் நிமலன், அவனை நினையாதவன் நீசன் - மூர்க்கன் — ஆதலின் 'முன்னுக நினையாத மூர்க்கனேன்' என்றும் திருவொற்றி யூரில் சங்கிலியாரை மணந்திருந்தபோது திருவாரூர் நினைவுவர ஆரூர்ப் பெருமானை எண்ணி,

'முத்தினைமா மணிதன்னை
வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாள் பிரிந்திருக்கேன்
என்னாரூர் இறைவனையே'

என்று சுந்தரர் கூறினர். இருவரும் தம்மை 'மூர்க்கன்' என்பதற்குக் காணும் காரணங்கள் ஒத்துள்ளன. சமய குரவர்களாகிய ஆளுடைய அடிகளும் ஆளுடைய நம்பியும் தமது தவற்றினை யுணர்ந்து நீக்கிப் போற்ற முற்படுவதை நம்மில் பலர் அறிந்து தவற்றினை ஒதி இத்தலைவனைப் போற்றியுய்வோமாக அவர்கள் மேற்கொண்டு! ஒழுகிய அகப்புற வழிபாடும் பிறவும் அதற்குச் சாதனங்கள் என அறிவோமாக!

'நீ நாளும் நினை கண்டாய்
நல் நெஞ்சே
நல்நெஞ்சே உனையிரந்தேன்
நம்பெருமான்
திருவடியே
உன்னஞ் செய்திரு'

என்று ஞானசம்பந்த வாக்குகளும்,

'வாமனை நினைந்த நெஞ்சம்
வாழ்வுற நினைந்த வாறே'
'இராமேச்சரத்தை நாடி
வாழ் நெஞ்சமே நீ'

என்ற திருநாவுக்கரசர் வாக்குகளும் இதனை வலியுறுத்தும். ✱

- வே. ச. சுப்பையா -

சிவன் அர்ப்பணம் செய்ய வேண்டுமென்பது திருவைந்தெழுத்தின் பொருள். அதாவது,

நுகல் பொருள் எல்லாம் சிவனுக்கே சீவனுக்கில்லை இன்னும்:-

'சிவோ தாதா
சிவோ போக்தா
சிவோசர்வமிதம் ஜகத்
சிவோ யஜதி சர்வத்ர யஸ்
சிவோகம் ஏவது'

என்ற அப்பைய தீக்கிதர் சிவார்ச்சனசந்திரிகை என்ற நூலில் விளக்கியுள்ளார். இதற்கும் ஒரு எடுத்துக் காட்டாக விளங்கியவர் வரகுண தேவர். அவர் உலகியல் மூலமாக நுகரப்படும் ஐம்புலன்களைத் தமக்கெனக் கொள்ளாமல் சிவ அர்ப்பணம் செய்தார். இதனை,

'விரும்பின கொடுக்கை
பரம்பரற் கென்று
புரிகுழல் தேவியைப்
பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின்
வரகுண தேவர்'

என்ற பட்டினத்தடிகள் பாடற் பகுதியால் அறியலாம். உலகியல் பற்றிய ஐம்புலன்களை சிவனுக்கு சமர்ப்பணம் செய்து சிவமயமாகப் புலன்களை மாற்றிக் கொள்ளுதலே ஐம்புலன்களால் இறைவனை அடைதற்குரிய வழியாகும்.

### தவச்செல்வம்

சிந்தை, செய்கை, கேள்வி வாக்குகளால் நிகழ்த்த வேண்டிய தவச் செய்கைகளையும், அத்தவச் செய்கையுடையார்

# சைவப் பண்பாடு பேணும்

# இராமநாதன் கல்லூரி

75 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து இம்மாதம் 21—22ஆம் திகதிகளில் பவள விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுகிறது இராமநாதன் கல்லூரி. அதனை ஒட்டி இச்சிறப்புக் கட்டுரை வெளியிடப்படுகின்றது.

அந்நிய மோகத்தால் சுயமான கொள்கை, கோட்பாடுகளைக் கைவிட்டு பாரம்பரிய தர்ம சாஸ்திரங்களையும், தலைமுறை தலைமுறையாகப் பேணப்பட்டு வந்த வாழ்க்கை நெறிகளையும் கைவிட்டும் தமிழினம் தடுமாறிய சமயம், தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் சில தவப்புதல்வர்கள் தோன்றி சமுதாயம் திசை திரும்புவதைத் தடுத்து நிறுத்தப் பாடுபட்டனர். அந்த வரிசையில் சேர். பொன். இராமநாதனுக்கு ஈழத்தில் தனியிடமுண்டு:

1931 இல் நிறுவிய உடுவில் இராமநாதன் கல்லூரி இவ்வாண்டு 75 ஆண்டுகளை நிறைவுசெய்து பவளவிழாக் கொண்டாடுகின்றது.

1913 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி 101 மாணவிகளுடனும் 12 ஆசிரியைகளுடனும் ஆரம்பிக்கப்பட்டது இக்கல்லூரி.

நிறுவுனரின் நோக்கிற் சற்றும் பிறழாது அவரால் கையளிக்கப்பட்ட மரபையும் பண்பையும் கோட்பாடுகளையும் கடைப்பிடித்து 75 ஆண்டுகளாக ஓங்கி நிற்கின்றது என்றால் அதனைப் பேணிவளர்த்து வரும் அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆகியோரின் பெருமுயற்சியும் ஒத்துழைப்புமே அதற்குக் காரணம் எனலாம்.

சேர். பொன்: இராமநாதன் இக்கல்லூரியை நிறுவிய காலத்தில் ஈழத்தில் கல்வி மிகவும் பின் தங்கி இருந்தது. 1911 ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி வடமாநிலத்தில் கல்வி அறிவுள்ள பெண்கள் 12 . 2 வீதமே இருந்தனர்.

அன்று ஆங்கிலக் கல்வியைப் பெற விரும்பிய சைவமகளிர் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் கல்லூரிகளை நாடவேண்டி இருந்தது.

ஆங்கில மோக மீட்புக்கும், இந்துப்பெண்கள் தமிழ், இலக்கியம், கவின்கலை, கலை, கலாசாரம் பண்பாடு ஆகியவற்றைப்போதிக்கவும் ஒரு தனி ஸ்தாபனம் வேண்டும் என உணர்ந்த திரு. இராமநாதன் இக்கல்லூரியை நிறுவினார்.

1913 ம் ஆண்டு ஈழத்தில் பெண்களுக்கென நிறுவப்பட்ட இந்துமகளிர் கல்லூரி இதுவாகும்.

1948ல் இக்கல்லூரி முதலாம் தரக் கல்லூரியாக உயர்த்தப்பட்டு யாழ்ப்பாணத்திலுள்ள

- வி. பி. சர்மா -

பெண்கள் பாடசாலைகளுள் தனித்துவமும் சிறப்பும் கொண்டதாக இன்றுவரை விளங்கி வருகின்றது.

கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள ஆலயத்தில் தினமும் மாணவிகள் காலை மாலை ஒன்று கூடி திரு. இராமநாதனால் தெரிவு செய்து கொடுக்கப்பட்ட திருமுறைகளை ஓதும் வழக்கம் இன்றும் நடைபெற்று வருகின்றது.

சைவப் பண்பாடோடு கூடிய வாழ்க்கை முறையை பின்பற்றவே இங்கு மாணவியர் பயிற்றப்படுகின்றனர்.

சைவத்தமிழ் மரபுக்கேற்ற உடை அணிந்து நிறுவுனரின் நோக்கத்தையும் தமிழ் இனத்தின் நாகரீகத்தையும் இக்கல்லூரி மாணவிகள் உலகிற்கு பறை சாற்றி வருகின்றனர்.

நிறுவுனரின் மறைவுக்குப் பின் டாக்டர் லேடி இராமநாதனும் பின் அவர்களின் மகள் - மருமகனான திரு- திருமதி - நடேசபிள்ளையாலும் பேணப்பட்டது. 1963 ல் அரசாங்கம் இக்கல்லூரியைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

1913 முதல்1937வரை நமது பெண்களுள் திறமையும், கல்வி அறிவும் இல்லாத் தன்மையால் ஆங்கிலப் பெண்மணிகளே அதிபர்களாக அமர்த்தப்பட்டனர். 1938 இல் திருமதி ஆர். ஆர். நவரத்தினம் இக்கல்லூரியின் முதல் தமிழ் பெண் அதிபராக பதவியேற்றார். அதன்பின் திருமதி. சி. பி. பிள்ளை திருமதி ரி. முத்துக்குமாரு, செல்வி. யோ. கனகசபை திருமதி. இ. அருணாசலம் போன்ற அதிபர்கள் இப்பாடசாலையில் சிறப்புவாய்ந்த அதிபர்களாக கணிக்கப்பட்டனர்.

1988 முதல் திருமதி. எஸ். எஸ். குமாரசாமிக் கல்லூரி அதிபராக பதவி பெற்றுள்ளார்.

1963இல் அரசாங்கம் இக்கல்லூரியைக் கையேற்றபோது திரு. இராமநாதனின் நோக்கங்கள் சிதைவுற்றுப் போகுமோ என சிறு அச்சம் நிலவியது. ஆனால் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆர்வமும் திறமையும் உடையவர்களாக இருப்பின் பாரம்பரியம், பழக்கவழக்கம், கட்டுப்பாடு ஆகியனவற்றை காப்பாற்ற - பாதுகாக்கமுடியும் என்பதற்கு இராமநாதன் கல்லூரி ஓர் எடுத்துக்காட்டு

101 மாணவிகளுடனும் 12 ஆசிரியர்களுடனும் ஆரம்பித்த இக்கல்லூரி இன்று 1500க்கு மேற்பட்ட மாணவிகளையும் 50க்கு அதிகமான ஆசிரியர்களையும் கொண்டு வளர்ச்சியுற்றுக் காணப்படுகிறது.

இன்று பவள விழாக்காணும் இக்கல்லூரி பல்லாண்டு பல்லாண்டு நீடித்து நிலைத்து தமிழ்இனத்தின் கலை, கலாசார, பண்பாட்டின் உறைவிடமாக மிளிர வேண்டும் என வாழ்த்துவோம். ★

# அவள் வித்தியாசமானவள்

மூத்தவள் சொன்னதைக் கேட்டதும் ஆத்திரமும் அதிர்ச்சியும் அடைந்தார் ஆறுமுகத்தார்!

அந்த மாப்பிள்ளைப் பொடியனிடம் அப்படி என்ன குறையைக் கண்டு வேண்டாமென்கிறாள்!

''ஒரு குடி வெறி உண்டா? பீடி சிகரெட் உண்டா? சோலி சுறட்டு உண்டா? தான் உண்டு தன் வேலை உண்டு என நடமாடுபவன். ஊரிலேயே பரம சாது எனப்பெயர் வாங்கியவன். கேவலம் தனக்கொரு நண்பனைக் கூடத் தேடிக்கொள்ளாமல் கவிழ்ந்த தலையும் பதுமை நடையுமாக உலாவுபவன். இந்த மாப்பிள்ளையையும் இவள் வேண்டாமென்றால்... இனி நான் எந்தக்கோபுரத்திலை ஏறிஇறங்குவது;''

## கடுகுக்கதை

ஆத்திரமும் சலிப்பும் ஏற்பட ஆறுமுகத்தார் பொருமித் தள்ளினர்.

மகள் அறைக்குள் அடக்கமாகவே இருந்தபடி கூறிக் கொண்டாள்.

''அப்பா...! அந்த மாப்பிள்ளையில் ஒரு விதமான குறையும் இல்லைத்தான். அவரில் குறை இல்லாமல் இருப்பதுதான் எனக்குக் குறையாக இருக்கிறது. அப்படிப்பட்ட சாதுவான உலகம் தெரியாதவருக்கு வாழ்க்கைப்பட்டு நான் என்ன சுகத்தைக் காணப்போகின்றேன்?

அப்பா...! சிலையில் சிலை செய்யமுடியாது. கரடு முரடான கருங்கல்லில்தான் சிலை செய்ய முடியும்...'' மகள் மௌனமானாள்.

''பகல் இரவாய் வீட்டுக்கை இருந்து கதைப் புத்தகம் படிப்பதும் எழுதுவதும் இந்த வசனம் பேசத்தானா?'' என மீண்டும் ஆத்திரத்துடன் கத்தினர் ஆறுமுகத்தார். ✱

- குமார் தனபால் -




## அன்பு பொழியும் கர்த்தாவே!

கர்த்தாவேநான் சொல்பவற்றை நன்றுகேட்டுப்
பதிலெனக்குத் - தந்திடுவாய்
நானோ ஏழை வறுமையாலே வாடும் எந்தன்
தேவை ஈந்து – நின்றிடுவாய்
உந்தனில் நான் பக்திகொண்டேன் ஆகவே என்
ஆத்துமாவைக் – காத்திடுவாய்
என் இறைவன் நீதான் உன்னை நம்பும் உந்தன்
அடியன் என்னை – மீட்டிடுவாய்
இரங்கு என்னில் ஆண்டவா நான் ஒவ்வோர் நாளும்
உனை அழைத்து - புலம்பினேனே
உன் அடியான் எனைமகிழ் உன்னிடம் என்
ஆத்துமாவை – உயர்த்தினேனே
ஆண்டவாநீ மன்னிக்கின்ற இயல்பும் உள்ளாய்
நன்மை செய்யும்- பண்புமுள்ளாய்
உன்னை வேண்டி அழைப்பவர்க்கு அன்பின்கிருபை
தனைப்பொழியும்- மாண்புமுள்ளாய்
எந்தன்ஜெப வேண்டுதலாம் மன்றாட்டத்தை
கர்த்தாவே நீ – கேட்டிடுவாய்
என்னுடைய விண்ணப்பத்தின் ஓசையையும்
கேட்டு உந்தன் - செவிமடுப்பாய்
துயரந்தொல்லை என்னைவாட்டும் நாளில் உன்னை
நிச்சயம் நான் – கூப்பிடுவேன்
அவ்விதம் நான் கூப்பிடும் அந் நாளில் வந்து
எனக்கு விடை - செப்பிடுவாய்
இறைவர்களுள் உனக்குநிகர் உனக்கு ஒப்பு
ஆண்டவனே - எவருமில்லை
உன்னுடைய கிரியைகளாம் செயல்களுக்கு
எச்செயலும் - ஒப்பு இல்லை
உன்னால் உரு வான எல்லா நாடும் உந்தன்
முன்னால் வீழ்ந்து- ஓ...கர்த்தாவே
வணங்கல் உண்மை உன்பெயரை அவை மகிமைப்
படுத்தல் உண்மை - ஆம் கர்த்தாவே
ஏனோ என்றால் மா திறமை உள்ளாய் அதி
சயங்களையும் - செய்வாய் திண்மை
இவ்விதம் நீ உள்ளதாலே நீ மட்டுந்தான்
இறைவன் இங்கே – என்பதுண்மை

வேதாகம சங்கீதம் – 86
தமிழ் வடிவம்: நவாலியூர் சி.என். செல்லத்துரை

# பொது அறிவுப்போட்டி இல. 15

| | | |
|---|---|---|
| 1: | எது உயரத்தைக் குறிக்கும்? | கோபுரம் / குன்று |
| 2. | யாருக்குச் சலுகை உண்டு? | பிள்ளைகள் / பெண்கள் |
| 3. | உதைக்கக் கூடியது எது? | விலைவாசி / கழுதை |
| 4. | இரத்தம் குடிப்பது எது? | மூட்டைப்பூச்சி / நுளம்பு |
| 5. | படைகளில் ஒன்று? | யானை / சேனை |
| 6. | குழந்தை விரும்புவது எது? | பொம்மை / மிட்டாய் |
| 7. | புழுக்கமான நேரத்தில் எதை எதிர்பார்ப்பார்கள்? | காற்று / தென்றல் |
| 8. | தொழில் தொடங்க எது தேவை? | மூளை / மூலதனம் |
| 9. | எப்படி இருக்க விரும்புகிறீர்கள்? | மெலிவாக / வலிவாக |
| 10. | அரிசியில் கிடப்பது எது? | நெல் / கல் |
| 11. | நோயாளிகளுக்கு எது தேவை? | மருந்து / ஓய்வு |
| 12. | கொம்பு உள்ளது எது? | ஆடு / மாடு |

பெயர்:- ..................
விலாசம்:- ........................
................

பொது அறிவுப்போட்டி இல: 15
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்:

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.


ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ளமுடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 26. 10. 88 புதன்கிழமைக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்-பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும்
சக்தியை மீட்டுத் தருகிறது

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிரும்
Pfizer
® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி, பிணி, பகை இல்லாத நாடு எது?
# பாண்டியனுக்கு வள்ளுவர் அளித்த விளக்கம்



ம. பொ. சி.

திருக்குறள் வி. முனுசாமியின் பவளவிழா அண்மையில் சென்னை ராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது.

அவ்விழாவில் திருமுருக கிருபானந்தவாரியார், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதன், சிலம்புச்செல்வர் ம. பொ. சி. திருக்குறள் முனுசாமி ஆகியோர் நிகழ்த்திய உரைகள் இங்கு தரப்படுகிறது.

### வாரியார்

நான் பாரிஸ் சென்றிருந்த போது அங்குள்ள வாசகசாலை ஒன்றை எனக்குக் காட்டினார்கள்.

அங்குள்ள புத்தகங்கள் அடங்கிய பீரோக்களை ஒன்றின் பின் ஒன்றாக நேராக அடுக்கி வைத்தால் எத்தனையோ மைல் நீளத்திற்கு அவைகள் இருக்கும்.

அவ்வளவு பிரமாண்டமான வாசகசாலை அது.

அங்கே முதல் புத்தகமாக வைத்திருப்பது பைபிளை.

இதில் விந்தை ஒன்றுமில்லை. அவர்கள் சார்ந்த மதத்தின் வேதநூல் அது. அதனால் அதை முதலில் வைத்திருக்கிறார்கள்.

அங்கே இரண்டாவது எந்த நூலை வைத்துப் போற்றுகிறார்கள் தெரியுமா? திருக்குறளை.

திருக்குறளுக்கு நிகரான வாழ்க்கை நெறி நூல் வேறில்லை என்பதை அங்கே உள்ளவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

ஆனால் நாம் உணர்ந்திருக்கிறோமா என்றால் இல்லை.

### கி. ஆ. பெ. விசுவநாதம்

வள்ளுவர் சொல்லாத வாழ்க்கை நெறியே இல்லை.

ஒரு சமயம் வள்ளுவர் பாண்டிய மன்னனைச் சந்தித்தார்.

பசி, பிணி, பகை இல்லாத நாடு எங்கே இருக்கிறது என்று உலகத்தைச் சுற்றிவந்து தேடப் போகிறேன் என்றார் வள்ளுவர்.

உடனே பாண்டிய மன்னன், ''தாங்கள் அதற்காக உலகத்தை ஏன் சுற்றிவர வேண்டும். எங்கள் பாண்டி நாட்டைச் சுற்றிப் பார்த்தாலே போதுமே...பசி, பிணி, பகை இல்லாத நாடு பாண்டிய மண்டலம் என்று புரியுமே' எனக்கூறி வள்ளுவருக்கு தனது நாட்டைச் சுற்றிக் காட்டும்படி அமைச்சரைப் பணித்தான் பாண்டியன்.

வள்ளுவரும் அமைச்சரைப் பின்தொடர்ந்தார். பாண்டிய நாட்டுத் தலைநகரின் ஒரு நகரின் ஒரு வீதிக்கு வள்ளுவரை அந்த அமைச்சர் அழைத்து வந்தார்.

அந்த வீதியின் இரு புறங்களிலும் அன்ன சத்திரங்கள் காணப்பட்டன. பசி என்று வருவோருக்கு அங்கு வயிறார உணவு படைத்தார்கள்.

பார்த்தீர்களா! வள்ளுவர் பெருமானே பாண்டிய நாட்டில் அன்னசத்திரம் நிறுவி அனைவருக்கும் உணவு வழங்குகிறோம் என்று அமைச்சர் பெருதமிதமாய்ச் சொன்னார்.

அடுத்து அவர் வள்ளுவரை இன்னொரு வீதிக்கு அழைத்துச் சென்றார்.

அந்த வீதியின் இரு மருங்கிலும் மருத்துவமனைகள் நிறைந்து விளங்கின. பிணி என்று வருவோருக்கு அங்கு மருத்துவப்பணி செய்தார்கள்...

'வள்ளுவப்பெருந்தகையே! நோயென்று வருவார்க்கெல்லாம் எப்படி வைத்தியம் செய்கிறோம்... கண்டீர்களா? என்றார் புன்சிரிப்புடன் அமைச்சர்.

மூன்றாவதாக வள்ளுவரை ஆயுதசாலைக்கு அழைத்துச் சென்றார் அமைச்சர்.

'எத்தனை படைக்கலன்கள் இங்கே பாருங்கள். எந்தப் பகைவனாவது இந்த நாட்டுக்குத் துணிந்து வருவானா சொல்லுங்கள்'—என்று சொல்லி வெற்றிப்புன்னகை பூத்தார் அமைச்சர்.

பின் இருவரும் மன்னனிடம் சென்றார்கள். வள்ளுவருக்குக் காட்டிய இடங்கள் பற்றி அமைச்சர் சொன்னார். வள்ளுவர் பெருமானே தாங்கள் தேடிய பசி, பிணி, பகை இல்லாத நன்னாடு இதுதான் என்பதை அறிந்தீர்களா? என்று அரசன் வினதொடுத்தான்.

வள்ளுவர் நகைத்தார். 'பாண்டிய வேந்தே. நான் பார்க்க விரும்பிய நாடு இது



கிருபானந்தவாரியார்

அல்ல; பசி இல்லாத நாடு என்பது உழைத்து மக்கள் வயிறார உண்ண வழிகாட்டும் நாடு...

'ஆனால் இங்கே சும்மா உட்கார வைத்து சோறு போட்டு சோம்பேறி ஆக்கும் வேலையை அல்லவா உன் அரசு செய்து வருகிறது.

'பிணி இல்லா நாடு என்றேனே, அதற்குப்பொருள் மக்கள் தங்கள் மன ஒழுக்கத்தாலும் தங்கள் ஆரோக்கியத்தைப் பேணி வாழ்வதாகும்.

ஆனால் உன் நாட்டில் இத்தனை மருத்துவமனைகளை நிறுவி வைத்தியம் பார்க்கும் அளவு உன் மக்கள் அத்தனை பேரும் நோயாளிகளாய் அன்றோ வாழ்கின்றார்கள்.

'பகை இல்லாத நாடு என்றேனே ... அது அன்பாலும் பண்பாலும் அனைவரிடத்திலும் நட்புணர்வை வளர்ப்பதாகும். ஆனால் நீ குவித்திருக்கும் படைக்கலன்களைப் பார்க்கும்போது உனக்குப் பார் முழுதும் பகைவர் இருப்பார்கள் என்றல்லவோ தெரிகிறது...

— என்று வள்ளுவர் விளக்கியதும்தான் வள்ளுவர் காட்டும் உயர்ந்த வாழ்க்கை நெறி மன்னனுக்குப் புரிந்தது.

### சிலம்புச்செல்வர் ம. பொ. சி.

திருக்குறளை நம் முன்னோர் தேசியத்தோடு இணைத்து வளர்த்திருக்கிறார்கள்.

சுதந்திரம் கேட்டதற்காக இந்தியாவிலேயே முதன்முதலாக இரட்டை ஆயுள் தண்டனையை ஏற்றவர்கள் வ. உ. சிதம்பரனாரும் சுப்பிரமணிய சிவாவும்.

அந்த வழக்கின்போது சுப்பிரமணியசிவா தனது வாக்குமூலத்தை கைப்படவே எழுத்து மூலமாகத் தந்தார். அதில் இரு திருக்குறளை இடம் பார்த்து அவர் சேர்த்து இருந்தார்.



கி. ஆ. பெ. விஸ்வநாதம்


மன்னனே கையிலே ஆயுதம் தாங்கி மக்களிடம் வழிப்பறிக்காரனைப்போல் பொருள் கவர்ந்தால் நாடு என்ன ஆகும் என்ற பொருள்பட உள்ள குறளை அந்த ஆங்கில அராஜகத்தைச் சுட்டிக் காட்ட அந்த வாக்குமூலத்திலே சிவா சேர்த்து இருந்தார். அதுவே ஆங்கில அரசுக்குப் பெரிய ஆத்திரத்தை ஊட்டியது.

அந்தக் காலத்தில் அலஹாபாத்தில் இந்திய எழுந்தாளர்கள் மாநாடு ஒன்று நடந்தது. அதில் கலந்துகொண்ட காந்திஜி, இந்திய மொழி ஒன்றிலே திருக்குறள் என்னொரு சிறந்த நெறி நூல் ஒன்று இருக்கிறது. அதை நீங்கள் படித்திருக்கிறீர்களா?'— என்று அவையினரைப்பார்த்துக் கேட்டார்;

யாரும் அதைப் படித்ததாக முன் வந்து சொல்லவில்லை.

உடனே காந்திஜி கூறினார் 'திருக்குறளை அறியாதவர்கள் இந்திய இலக்கிய வாதிகள் என்று சொல்லவே அருகதை இல்லாதவர்கள் என்று! ★

## சொற்சிலம்பம்



போட்டி இல. 90

சொற்சிலம்பம் இல: 90
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

——— இங்கே வெட்டுக ———

**முடிவு திகதி: 02 – 11 – 1988**

**இடமிருந்து வலம்:**

1. சக்திவழிபாட்டுக்குரியது 5. குறைவு. ஓரெழுத்துக் குறைந்து நிற்கிறது. 6. முக்தி அல்லது இறைவனடி 9. வேகம் 10. குளிர்ச்சி 11. கூடுதல் 13. திடீர்த் தாக்கு 14. ஓர் இராசி 15. இதற்குத்தானே போட்டி! 17. அழகு 18. ஊர்வன இனத்தைச் சேர்ந்தது.

**மேலிருந்து கீழ்:**

1. மதியம் 2. தசரதன் மகன் குழம்பி விட்டான் 3. அவசரச் செய்தி தலைகீழாகிவிட்டது 4. சிறந்த குணம் 7. மன்மதன் காதலி 8. கவனம் 10. குற்றம் 11. தலைவன் 12. வாய்க்கு உரியது 13. காடு 14. புகழுக்கு எதிரானது. இறுதி இழந்தது 15. தூங்கு 16. பூமி தலைகீழாகி விட்டதே!

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| **முதலாம் பரிசு:** | 100 ரூபா |
| **இரண்டாம் பரிசு:** | 50 ரூபா |
| **மூன்றாம் பரிசு:** | 25 ரூபா |

# விமோசனம் அடைவதற்கு நாவை அடக்கி
# குற்றங்களை நினைத்து அழுங்கள்!

முகம்மது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பிறந்த தினம் இம் மாதம் 24 ஆம் திகதி வருகிறது. அதை முன்னிட்டு நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள் மொழிகள் இங்கு பிரசுரமாகிறது.
தொகுப்பு:
வவுனியா
எஸ். அப்துல் சமட்.

★ நிச்சயமாக நான் பாவங்களை மன்னித்து விடுவதில் சக்தியுள்ளவன் என்று என்னுடைய எந்த ஒரு அடியான் அறிந்தும் தெரிந்தும் கொள்கின்றானோ அவனுக்கு நான் பாவங்களை மன்னித்து விடுவேன்.

★ நோய் அணுகுவதற்கு முன் தர்மம் செய்வதில் விரைந்து கொள்ளுங்கள். ஏனெனில் நோயானது தர்மத்தை நிச்சயம் கடக்கமாட்டாது.

★ திருக்குர்ஆனைத் தங்களுடைய இதயங்களில் சுமந்து அதனை ஓதி அதன்படி செயற்படுகின்றவர்களும், இரவு வணக்கத்தை உடையோரும் என்னுடைய அடியார்களில் மிகச் சிறப்புடையோர் ஆவர்.

★ வழியில் விழுந்துவிட்ட ஏதாவது ஒன்றைக் கண்டெடுத்தால் அதனை ஜனங்களுக்கு அறியத்தரவேண்டும். அப்படிச் செய்யாமல் தமக்குரியது ஆக்கிக்கொண்டால் அவர் உண்மையை விட்டு வழிதவறியவராவர்.

★ உணவுப் பொருள்களைப் பதுக்கி வைத்து விலையேற்றி விற்போரை அல்லா கடுங் கஷ்டம், வறுமை கொண்டு சோதிப்பான்

★ உணவுப் பொருள்களை 40 நாட்களுக்கு மேல் பதுக்கி வைப்போர் அல்லாவை விட்டு நீங்கியவராவர். அல்லாவும் அவரை விட்டு நீங்கி விடுகின்றார்.

★ கடன், மோசடி, கர்வம் ஆகிய இம் மூன்றையும் விட்டு நீங்கியவராக எவர் இறக்கிறாரோ அவர் சொர்க்கம் புகுவார்.

★ தீயநண்பனைவிட தனித்திருப்பது நன்று. தனித்திருப்பதைவிட நல்ல நண்பன் நன்று.

★ மறுமையில் ஒரு மனிதனுடைய தராசில் வைக்கப்படும் கிரியைகளில் மிகப்பளுவானது அவனது நற்குணமாகும்.

★ தர்மவான் அல்லாவிற்கு நெருங்கியவன், மனிதர்களுக்கும் நெருங்கியவன், நரகத்திற்குத் தூரமானவன்.

★ தன் அயலார் பசித்திருக்க தன் வயிற்றை நிரப்புவோர் உண்மை விசுவாசியல்லர்.

★ தனது கரத்தால் உழைத்துண்ணும் உணவானது அவரைச் சுவர்க்கம் புக வைக்கும்.

★ ஒருவர் ஒரு பொருளை மனமிசைந்து உமக்குக் கொடுக்காதவரை அதை நீர் பெறுதல் கூடாது.

★ தர்மத்தினால் பொருள் குறைந்து விடாது. மன்னிப்பதினால் சிறப்புக் குறைந்து விடாது. தாழ்மையினால் உயர்வு குறைந்து விடாது.

★ லஞ்சம் வாங்குகின்றவர்களும், கொடுக்கின்றவர்களும் அல்லாவின் சாபத்திற்கு இலக்காகின்றனர்.

★ ஒருவருக்கு பெண் பிள்ளை பிறந்தால் அதனை இழிவாகக் கருதவேண்டாம். பெண் பிள்ளைக்காகப் பொருள் தேடுபவரை அல்லா சொர்க்கம் புகச் செய்கிறான்.

★ மனைவி மக்கள் அனைவரையும் விட்டுவிட உத்தரவிட்டாலும் பொருளனைத்தையும் துறந்துவிட ஆணையிட்டாலும் பெற்ற தாய் தந்தையருக்கு மாறு செய்யாதீர்கள்.



★ அல்லாவிற்காகஅழுதகண், அல்லாவின் பாதையில் விழித்திருந்து காவல்காத்தகண் இரண்டு கண்களைகளையும் நரக நெருப்புத் தீண்டாது.

★ நாவை அடக்கி குற்றங்களை நினைத்து அழுவானானால் ஒருவனுக்கு விமோசனம் கிடைக்கும்.

★ நம்மில் பெரியவர்களுக்கு மரியாதை புரியாதவனும், சிறியவர்பால் இரக்கங்காட்டாதவனும் நமது உலமாக்களை மதிக்காதவனும் எனது அடியார்களில் சேர்ந்தவன் இல்லை. ★

# நம்பிக்கை அடிப்படையில் வாழ்க்கை

நமது வாழ்க்கை முழுவதுமே ஒரு நம்பிக்கையில் தான் ஓடிக் கொண்டு இருக்கிறது. குழந்தையிடம் தாய், ''அவர்தான் உன் அப்பா'' என்று அடையாளம் காட்டுகிறாள். குழந்தை அதை நம்புகிறது. ஏன்......? இல்லாவிட்டால் அதற்கு தன்னுடைய தந்தை யார் என்று தெரிந்து கொள்ள வாய்ப்பே இல்லாமல் போய் விடும்.

இதே போல இயற்கை தன்னுள் எத்தனையோ இரகசியங்களை அடக்கி வைத்துக்கொண்டிருக்கிறது.

ஆனால் மனிதன் அவற்றை நம்பமறுக்கிறான். ஏனென்றால், அதன் அரிய சக்தியில் அவனுக்கு நம்பிக்கை இல்லை.

புண்ணிய நதிகளில் நீராடுவதோ, புண்ணியத்தலங்களுக்குச் செல்லுவதோ, இப்படி இயற்கை அருளும் வரப்பிரசாதங்களை ஏற்பதற்குத் தான்.

இயற்கையின் சக்தியில் நம்பிக்கை வைத்தால் நிச்சயமாகக் குணமடையலாம்.

கையில் கத்தி வைத்துள்ள நாவிதனை நம்பி அவனிடம் தலையைக் கொடுக்கிறோம்.

விலை உயர்ந்த துணிகளைச் சலவை செய்யும் சலவைத் தொழிலாளியிடம் நம்பிக்கை வைத்துத்தான் துணிகளைக் கொடுக்கிறோம். நம்பிக்கை இல்லாவிட்டால வாழ்வு இல்லை.

சாதாரண வாழ்க்கை முறையிலேயே இப்படி நம்பிக்கை [illegible] இறைவனிடம் பக்தி செலுத்தும் முக்கிய [illegible] காரியத்துக்கு நம்பிக்கை மிகவும் அவசியம் அல்லவா...?

அப்படி ஒரு முழு நம்பிக்கையுடன் ஆலயத்துக்குப் போய், இறைவனை அணுகி, நமது நோயோ கஷ்டங்களோ தீரவேண்டும் என்று கேட்டுக் கொண்டால் நிச்சயமாக அதற்கு நல்ல பலன் கிடைக்கும். அப்படி நம்பாவிட்டால் பலன் கிடைக்காது.



ஸ்ரீ சத்திய சாயிபாபா

நமது முன்னோர்கள் இப்படிப்பட்ட உறுதிவாய்ந்த நம்பிக்கையைத் துணையாகக் கொண்டு மனிதன் சாதிக்க முடியாத பலவற்றையும் சாதித்திருக்கிறார்கள்.

பெரிய மருத்துவ நிபுணர்களும், நோயின் சிக்கல் தங்களுடைய திறமையின் எல்லையைத் தாண்டி விடும் போது, கடவுளிடம் நம்பிக்கை வைக்கும்படிதான் யோசனை சொல்லுகிறார்கள்.

இது எல்லா மருத்துவ மனோதத்துவ நிபுணர்களாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. எல்லா மதத்தினராலும் பின்பற்றப்படுகிறது. ★

**- ஸ்ரீ சத்யசாயிபாபா -**

## தலைக்கனம்

ஏதிரும் புதிருமாய் இரண்டு மாமரங்கள் முதலாவது மரம் செழித்துகிளைவிட்டு மதாளித்து வளர்ந்துநின்றது. இரண்டாவது, அவ்வளவு மதாளித்து வளராவிட்டாலும் நிறையப் பூவும் பிஞ்சுமாகக் காட்சியளித்தது!

இரண்டாவது மரம் முதல் மரத்தைப் பார்த்து, ச்சீ மரமான மரமே, யாரை மயக்க இப்படி வளவளப்பாய் நிற்கிறாய்? உன்னால் என்ன பயன் மற்றவர்களுக்கு? என்னைப் பார்; பூத்துக்குலுங்கும் என் அழகைப் பார்; குலை குலையாகத் தொங்கும் பிஞ்சுகளைப் பார்; இன்னும் சில மாதங்களில் இவை அனைத்தும் இனிய கனிகள்! பூவாமல் காயாமல் மூளியாக என்முன்னாலே நிற்காதே; முளிவிளத்துக்கே கூடாத நீ அப்பால் போய்விடு!'—என்றுபொரிந்து தள்ளியது.

'இறைவனின் படைப்பின் இரகசியத்தை அறியாமல் பேசாதே. பிறப்பெடுத்த ஒவ்வொரு ஜீவராசியும் ஏதோவொருவகையில் பயன் உள்ளதாகவே இருக்கும். நீ மதாளித்து வளராதிருந்து காய் கனிகளைக் கொடுக்கிறாய். நான் காய்கனிகளைக் கொடுக்காவிட்டாலும் அதிக இலை குழைகளையும் பருத்த மரத்தையும் பயனாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். நீ மட்டும்தான் பயனுள்ளவள் என்று இறுமாப்புக் கொள்ளாதே' —என்றது முதலாவது மரம்.

'என்ன அர்த்தமில்லாமல் பிதற்றுகிறாய்? நீ மட்டுமா இலை குழை மரம் ஆகியவைகளைக் கொடுக்கிறாய்? நானுந்தான் அவைகளைக் கொடுக்கிறேன். அவைகளுக்குமேலாக, மக்கள் விரும்பி உண்ணும் இனியகனிகளையுமல்லவா நான் கொடுக்கிறேன். அதனால் என் வர்க்கத்தையும் வளர்த்துக் கொள்கிறேன் என்ற உண்மையை நீ அறியவில்லையா? சில வருடங்களில் நீ கொழுத்து

**- ப. தெய்வேந்திரன் -**

வளர்த்த உடலை மனிதர் வெட்டிச் சாய்த்துத் தங்கள் தேவைக்குப் பயன்படுத்தி விட்டால் அதோடு உன் வம்சமே அழிந்துவிடுமே! என்னைப் பொறுத்தவரையில் நான் இறந்தாலும் நான் பெற்றுவிட்ட பல நூறு கனிகளின் விதைகளிலிருந்து அத்தனை கன்றுகள் உருவாகுமல்லவா?' என்றது இரண்டாவது மரம்.

'பார்த்தியா, பார்த்தியா, உன்னை அறியாமலே என்னை மனிதர் பயன் படுத்திவிட்டால் என்று கூறிவிட்டாயே. நானும் ஏதோ ஒருவகையில் பயன்படுகிறேன்தானே' —என்றது முதல்மரம்.

'எப்படியிருந்தாலும் பயன் வழங்குவதில் எனக்குக் கிட்டவும் நீ நிற்கமுடியாது' என்றது இரண்டாவது மரம்.

நாட்கள் கழிந்தன. இரண்டாவது மரத்தில் காணப்பட்ட பூக்கள் பிஞ்சுகளாகவும் பிஞ்சுகள் முற்றிய காய்களாகவும் கண்ணைக் கவர்ந்தன!

ஒருநாள் மாலை நேரம் பல மாணவர்கள் அவ் வழியால் வந்தனர். குலைகுலையாகக் காய்த்துத் தொங்கும் மாங்காய்களைக் கண்ணுற்ற ஒரு மாணவன்,

'அடே அங்கே பாருங்கடா நிறைய மாங்காயிருக்கு, இது பச்சை தின்னி மாவடா' என்றான்.

மற்ற மாணவர்களும் 'ஓமடா அசல் பச்சை தின்னியடா; வாருங்கோ எறிந்து விழுத்துவோம்'

என்று கூறிக் கொண்டே கற்களை எடுத்து அத்தனை பிஞ்சுகளும் காய்களும் நிலத்தில் விழும்வரைக்கும் காய்த்த மரத்தை நோக்கி எறிந்து கொண்டேயிருந்தனர்.

வீசப்பட்ட கற்கள் அத்தனை பிஞ்சுகளையும், காய்களையும் நிலத்தில் வீழ்த்தியதுமல்லாமல் மரத்தையே பல இடங்களில் காயப்படுத்தி அக்காயங்களிலிருந்து பால் வடிந்து கொண்டிருந்தது!

'ஏன் சகோதரி அழுகிறாய்? இப்பொழுது உன்னுடைய தலைக்கனம் குறைந்துவிட்டதல்லவா?' —என்று கூறிச் சிரித்தது முதலாவது மாமரம் ★

உருவகக் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீமாட்டி Seemati
Specialist in Wedding Sarees
Jaffna

சஞ்சீவி சஞ்சிகை
22-10-1988 சனிக்கிழமை

நாளுக்கோர் புதுமை,
நாடுவது உண்மை
இவற்றை அளிப்பதுதான்
சீமாட்டி
யாழ்ப்பாணம்

# பெஞஸீரின் மக்கள் கட்சியும் ஜூனேஜோவின் முஸ்லிம் லீக்கும்

## மோதும் பாக்: தேர்தல் களம்

### 12 வருட காலத்துக்குப் பின்னர் ஜனநாயகத்துக்கான பாதை திறக்கிறது

கடந்த பதினெரு வருட காலத்தின் பின்பு பாகிஸ்தான் தற்போது மீண்டும் ஜனநாயகத்தை நோக்கி மெதுவாக நகர்ந்துகொண்டிருக்கிறது.

ஆகஸ்ட் 17 விமான விபத்தில் கொல்லப்பட்ட அதிபர் ஸியா-உல்-ஹக்கின் கொள்கைகள் காரணமாக பாகிஸ்தான் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எதிர்நோக்கிய பிரச்சினைகள் தளரும் அறிகுறிகள் தென்படுகின்றன.

உள் நாட்டில் - நீதியான - நியாயமான தேர்தல்களை நடத்த ஸியாபின்னடித்ததால் கடந்தகாலங்களில் பெரும் அரசியல் எதிர்ப்புகளை எதிர்நோக்கவேண்டியிருந்தது.

வெளிநாட்டில் - அமெரிக்காவின் கைப்பாவையாக பாகிஸ்தானை மாற்றிக்கொண்டது மூலம் வல்லரசுகளின் ஆதிக்கப்போட்டிக்குள் பாகிஸ்தானை சிக்கவைத்திருந்தார்.

அமெரிக்க ஆதரவு ஷாவின் ஆட்சியைக் கவிழ்த்த ஈரானிய புரட்சி, 1979 ஆப்கன் மீதான சோவியத் படையெடுப்பு ஆகியவை பாகிஸ்தானை அமெரிக்க செல்வாக்குக்குள் தள்ளியிருந்தன.

அதிபர் ஸியாவின் மரணத்தை அடுத்து பாக் அரசியல் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் - நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவை பாகிஸ்தானில் கட்சி ரீதியான ஒரு சுதந்திரமான தேர்தலுக்கு தற்போது வழிவகுத்துள்ளன.

அதிபர் ஸியா மரணமாவதற்கு முன்னரே நவம்பர் 16 - நவம்பர் 19 ஆம் திகதிகளை தேர்தலுக்காக திகதி குறிப்பிட்டிருந்தார்.

ஆனல் கட்சி ரீதியில் வேட்பாளர்கள்போட்டியிடுவதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

ஸியாவின் மறைவுக்குப் பின் லாகூர் மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஒன்றை அரசும் ஏற்றுக்கொண்டதை அடுத்து கட்சி ரீதியிலான தேர்தலுக்கு தற்போது வழி பிறந்திருக்கிறது

#### 1880 பேர் போட்டி

பாகிஸ்தான் நாடாளுமன்றமான தேசியசபைக்கான தேர்தல் நவம்பர் 16 ஆம் திகதி நடைபெறுகிறது. மாகாண



பெஞஸீர்

சபைகளுக்கான தேர்தல் நவம்பர் 19 ஆம் திகதி நடைபெறுகிறது.

இவற்றுக்கான நியமனப் பத்திரங்கள் கடந்த வாரம் தாக்கல்செய்யப்பட்டன.

தேசிய சபையின் 237 ஆசனங்களுக்கும் மற்றும் நான்கு மாகாணசபைகளுக்கும் 1880 பேர்வரை வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த 12 வருட காலத்தில் கட்சி அடிப்படையில் பாகிஸ்தானில் நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவாகும்,

பாகிஸ்தானில் நீதிச்சுதந்திரம் சமீபகாலமாக நிலைநாட்டப் பட்டுவருவதால் எதிர்வரும் தேர்தல்கள் நீதியாகவும் நியாயமாகவும் நடைபெறும் என்பதில் அரசியல் அவதானிகள் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர்.

#### பெஞஸீர் பூட்டோவின் பாக் மக்கள் கட்சி

பாகிஸ்தான் தேர்தலில் மூன்று முக்கிய அணிகள் போட்டியிடுகின்றன. ஒன்று பாகிஸ்தான் மக்கள் கட்சி (PPP) இதன் தலைவர் பெஞஸீர் பூட்டோ. Benazir Bhutto)

இவர் 1979 ஆம் ஆண்டு தூக்கிலிடப்பட்ட முன்னுள் பிரதமர் சுல்பிஹார் அலி பூட்டோவின் மகள்.

ஆட்சியாளர்களுக்கு எதிரான 8 சிறிய கட்சிகளைச் சேர்த்துக்கொண்டு ஜனநாயக மீட்பு இயக்கம் என்ற பெயரில் (Opposition Movement for the Restoration of Democrcy) இவர் கடந்த 11 வருட காலமாக ஸியாவுக்கு எதிராகப் போராடி வந்தார்.

தற்போது மக்கள் கட்சி தேர்தலில் தனித்தே போட்டியிடுகிறது தனது கூட்டணியில் உள்ள உதிரிக் கட்சிகளுக்கு தொகுதிகளைப் பகிர்வது எதிர்த்தரப்புக்கு வாய்ப்பை அதிகரிக்கச் செய்யலாம் என்று பெஞஸீர் பூட்டோ கருதுகிருர்.

மக்கள் கட்சி தனித்துப் போட்டியிட்டாலும் தமது ஆதரவுக் கட்சிகளையும் சேர்த்துக் கூட்டரசு அமைக்கும் என்று பெஞஸீர் பூட்டோ அறிவித்துள்ளார்.

#### முஸ்லிம் லீக்

தேர்தலில் போட்டியிடும் மற்றைய கட்சி பாகிஸ்தான் முஸ்லிம் லீக் ஆகும். இதன் தலைவர் பாகிஸ்தானின் முன்னுள் பிரதமர் மொஹமட்கான் ஜூனேஜோ (Mohammadkhan Junejo).

கடந்த மே மாதம் 29 ஆம் திகதி ஜூனேஜோவையும் அவரது அமைச்சர்களையும் ஸியா-உல்-ஹக் திடீரென்று பதவி நீக்கம் செய்திருந்தார். அத்துடன் தேசிய சபையையும், நான்கு மாகாணசபைகளையும் கலைத்தார்.

இந்த நடவடிக்கை காரணமாக ஆளும் முஸ்லிம் லீக் இரண்டாகப் பிளந்தது.ஒன்று ஜூனேஜோ தலைமையிலானது மற்றது பிடா மொஹம்மட்கான் (Fida Mohammadkhan) என்பவரைத் தலைவராகக் கொண்டது. ஜூனேஜோ பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்பு பிடா மொஹமட்கான் தலைமையிலான முஸ்லிம் லீக்கே ஆளும்கட்சியாக இருந்து வருகிறது.

பிடா மொஹம்மட் கான் பாகிஸ்தானின் நான்கு மாகாணங்களில் ஒன்ருன வட மேற்கு எல்லை மாகாணத்தின் (North-West Frontier) முன்னுள் ஆளுநர் ஆவார்.

பாகிஸ்தானின் ஏனைய மூன்று மாகாணங்களும் சிந்து, பஞ்சாப், பலுசிஸ்தான் ஆகும். பெஞஸீர் பூட்டோவின் சொந்த மாகாணமான சிந்து பாக் அரசியல் கிளர்ச்சிகளின் கேந்திரநிலையமாக விளங்கி வருகிறது.

பாகிஸ்தானின் நான்கு மாகாணங்களினதும் தேசிய சபையினதும் இடைக்கால நிர்வாகம் தற்போது பிடா மொஹம்மட் கான் தலைமையிலான முஸ்லிம் லீக்கின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. தேர்தல் சுதந்திரமாக நடைபெறவேண்டுமானல் இந்த இடைக்கால நிர்வாகங்களும் கலைக்கப்படவேண்டும் என்பதே பெஞஸீர் பூட்டோவின் கோரிக்கை.

பெஞஸீர் பூட்டோவுக்கு எதிரான வாக்குகள் சிதறிப்போவதைத் தவிர்க்கும் நோக்கத்துடன் ஸியா — உல் ஹக் ஆதரவாளர்களைக் கொண்ட பிடா மொஹமட்கான் தலைமையிலான முஸ்லிம் லீக்கும் முன்னுள் பிரதமர் ஜூனேஜோ தலைமையிலான முஸ்லிம் லீக்கும் கடந்த வெள்ளிக்கிழமை மீண்டும் இணைந்து கொண்டன.

மற்றும் பாகிஸ்தானின் முன்னுள் விமானப்படைத்தளபதி அஸ்கார்கானின்(Asgharkhan) ரெஹ்றிக் ஐ இஸ்திக்லால் கட்சியும் மத சார்புக் கட்சியான ஜாமியட் உலேமா கட்சியும் முஸ்லிம் லீக்குடன் இணைந்து தேர்தலில் கூட்டணி அமைத்துள்ளன.

முன்னுள் பிரதமர் ஜூனேஜோ தலைமையில் "பாகிஸ்தான் மக்கள் கூட்டணி" என்ற பெயருடன் இயங்கும் இந்த மூன்று கட்சிகள் கூட்டணிக்கும் பெஞஸீர் பூட்டோ தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சிக்கும் இடையிலேயே தேர்தலில் முக்கிய போட்டி இருந்து வருகிறது.

#### மத சார்புக் கட்சிகள்

மற்றும் ஸியா — உல் - ஹக் ஆதரவு சிறிய மத சார்புக் கட்சிகள் கூட்டணி அமைத்துள்ள போதிலும் பெஞஸீர் பூட்டோவின் மக்கள் கட்சிக்கோ அல்லது முஸ்லிம் லீக்குக்கோ ஈடுகொடுக்கும் நிலையில் அவை இல்லை. ஜூனேஜோ தலைமையிலான ஒன்றுபட்ட முஸ்லிம் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் மீண்டும் ஸியாவின் கொள்கைகளே பெரும் அளவில் அமுலாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

#### 4 சம்பவங்கள்

கடந்த இரண்டு மாத காலத்தில் நான்கு சம்பவங்கள் பெஞஸீர் பூட்டோவுக்குச் சாதகமாக அமைந்திருந்தன.

★ முதலாவது ஸியா — உல் — ஹக் விமானவிபத்து ஒன்றில் கொல்லப்பட்ட சம்பவம். கடந்த 11 வருட காலமாக பெஞஸீர் பூட்டோவின் எதிர்ப்புகளை முறியடிப்பதில் ஸியா — உல் — ஹக் ஓரளவு வெற்றி பெற்று வந்தார். 1977 இல் சுல்பிஹார் அலி பூட்டோ பதவி கவிழ்க்கப்பட்ட நாளில் இருந்து பூட்டோ குடும்பத்தின் பரம வைரியாக ஸியா கருதப்பட்டு வந்தார். பெஞஸிர் பூட்டோ ஆட்சிக்கு வந்தால் தாம் பழி வாங்கப்படலாம் என்று கருதியதாலேயே பாகிஸ்தானில் சுதந்திரமான தேர்தலை நடத்த ஸியா தயங்கி வந்தார்.



ஜூனேஜோ

★ இரண்டாவது பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு ஆகும்: தேர்தல் அரசியல் கட்சி ரீதியில் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக சமீபத்தில் உயர் நிதிமன்றம் தீர்ப்பு வழங்கி இருந்தது. இந்தத் தீர்ப்பை அரசாங்கமும் ஏற்றுக்கொண்டதை அடுத்தே கடந்த வாரம் வேட்பு மனுக்கள் கட்சி ரீதியில் தாக்கல் செய்யப்பட்டன.

பாகிஸ்தானின் 10கோடியே 40 லட்சம் சனத் தொகையில் நான்கில் மூன்று பங்கினர் படிப்பறிவு அற்றவர்கள். கட்சி ரீதியில் சின்னம் ஒன்றின் கீழ் போட்டியிடுவது வாக்காளர்களை குழப்பத்தில் ஆழ்த்தமாட்டாது என்று பெஞஸீர் பூட்டோ கருதுகிருர். தேர்தலில் மக்கள் கட்சிக்கு அம்பு சின்னம் ஒதுக்கப்பட்டுள்ளது.

★ மூன்ருவது சம்பவம் பெஞஸீர் உதவியாளர்களின் யுக்தி ஒன்று வெற்றிபெற்றதே. நவம்பர் நடுப்பகுதியிலேயே பெஞஸீர் பூட்டோவுக்கு மகப்பேறு தினம் என்று அவரின் உதவியாளர்கள் கதையைப் பரப்பி அதில் வெற்றியும் கண்டிருந்தனர் என்று கூறப்படுகிறது.

இதனை நம்பியே ஸியா-உல்-ஹக் நவம்பர் 16 ஆம் திகதியை தேர்தல் தினமாகக் குறித்திருந்தார். ஆனல் செப்டம்பர் 21 ஆம் திகதி பெஞஸீர் பூட்டோவுக்குக் குழந்தை பிறந்துவிட்டது. இந்தக் குழந்தை குறைமாதக் குழந்தை அல்லாதபடியால் தேர்தல் திகதி குறிப்பதில் ஸியா ஏமாற்றப்பட்டார் என்றே கூறப்படுகிறது.

★ நான்காவது பாகிஸ்தானின் நான்கு மாகாணங்களில் ஒன்ருன சிந்து மாகாணத்தில் ஏற்பட்ட இனக் குழப்பங்கள். உருதுமொழி பேசும் மஹாஜிர் இனத்தவர்களுக்கும் பூர்வீக சிந்து இனத்தவர்களுக்கும் இடையிலான மோதல்களில் 300க்கும் அதிகமானேர் சமீபத்தில் கொல்லப்பட்டிருந்தனர். மஹாஜிர் இனத்தவர்கள் 1947 பாகிஸ்தான் பிரிவினையின்போது இந்தியாவில் இருந்து வந்து குடியேறியவர்கள்:

பதில் ஜனதிபதி குலாம் இஷாக்கான் (Ghulam Ishaq khan) தலைமையிலான தற்போதைய இடைக்கால அரசு சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டத் தவறிவிட்டதாக பெஞஸீர் பூட்டோ குற்றஞ்சாட்டி உள்ளார்.

முஸ்லிம் லீக் ஒன்றுபட்டுவிட்டபோதிலும் பாக் அரசியல் அதிகாரத்தை எட்டிப்பிடிக்கும் போட்டியில் பலபடிகளைத் தாண்ட இச்சம்பவங்கள் பெஞஸீர் பூட்டோவுக்கு சாதகமாக அமைந்துவிட்டன: ★

உலக உலா

# ஓட்டங்களை குவித்த வீரர்கள் வரிசையில் மியன்டாட்!

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஓட்டங்களைக் குவித்தோர் பட்டியலில் பதினேராவது இடத்தைப் பெற்றிருக்கிருர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணி கப்டன் ஜாவிட் மியன்டாட்.

10-10-1988 இல் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின்போது இச் சாதனையை ஏற்படுத்திஞர் மியன்டாட்.

இச் சாதனை நிகழ்த்திய பதினெரு பேரின் பட்டியலில் முதலிடத்தைப் பெறுகிருர் இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவஸ்கர்.

பாகிஸ்தான் டெஸ்ட் அணிக்குக் கப்டனுக இருந்தவர்களில் வயதில் குறைந்தவராக விளங்குபவர் மியன்டாட்.

இவர் தனது 19 வயது 141 ஆவது நாளில் டெஸ்ட் போட்டியில் இரட்டை சதத்தைப் பெற்றதன் மூலம் இரட்டைச் சதம் பெற்ற வயது குறைந்த வீரர் என்ற பெருமையைப் பெற்ருர்.

நியூஸிலாந்து - பாகிஸ்தான் டெஸ்ட் 1976 இல் இடம் பெற்றது. 9-10-1976 இல் லாஹூரில் நடந்த டெஸ்டில் மியன்டாட் பாகிஸ்தான் சார்பில் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

அறிமுகமான டெஸ்டிலேயே சதம் பெற்று அறிமுகத்திலேயே சதம் பெற்ரேர் பட்டியலிலும் மியன்டாட் சேர்ந்துகொண்டார்.

95 டெஸ்ட் போட்டிகளில் 145 இன்னிங்ஸ்களில் துடுப்பெடுத்து விளையாடி 7 ஆயிரம் ஒட்டங்களைக் குவித்தார் மியன்டாட்.



மியாண்டாட்

7 ஆயிரம் ஓட்டங்களைப் பெற்ற முதல் பாகிஸ்தான் வீரரும் இவரே.

இவரின் கடைசி ஆயிரம் ஓட்டங்கள் ஆகப் பன்னிரண்டுஇன்னிங்ஸ்களில் பெறப்பட்டது மற்ருெரு சிறப்பாகும். இதில் மூன்று சதங்களும் அடங்கும்.

டெஸ்ட் போட்டிகளில் இதுவரை ஐந்து தடவை இரட்டைச் சதங்களைப் பெற்ற மியன்டாட் 1982-83 இல் இந்திய அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆகக் கூடுதலான 280 ஓட்டங்களைப் பெற்ருர்.

3 ஆவது விக்கெட்டுக்காக மியன்டாட்; முடாஸர் நாசர் சோடி சேர்ந்து ஆடிப்பெற்ற 451 ஓட்டங்களினுல் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற ஜோடி என்ற பெருமையை ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த சேர் டொன் பிராட்மன், பொன்ஸ்வேட் ஜோடியுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

விளையாடும்போது உணர்ச்சிவசப்படுபவர் மியன்டாட்.

1981 இல் பேர்த்தில் நடந்த டெஸ்ட் போட்டியின்போது ஆஸ்திரேலியாவின் வேகப் பந்து வீச்சாளர் டெனிஸ் லில்லியுடன் கைகலப்பில் ஈடுபட்டவர்.

சக வீரர்களுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக தமது அணித்தலைவர் பதவியையும் ஒரு தடவை பறிகொடுத்தவர்.

பின்னர் இம்ரான்கான் கப்டன் பதவியை ஏற்றுக்கொண்டார். இம்ரான்கான் டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதற்காக அறிவித்ததைத் தொடர்ந்து கப்டன் பதவி மியன்டாட்டைத் தேடி மீண்டும் வந்தது.

1986 இல் நடந்த சார்ஜா கிண்ணப் போட்டியில் பாகிஸ்தானுக்கு வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொடுத்த பெருமை மியன்டாட்டுக்கே உரியது.

இந்திய அணிக்கு எதிரான அப்போட்டியில் கடைசிப் பந்தில் 4 ஓட்டங்களைப் பெற்ருல்தான் பாகிஸ்தானுக்கு வெற்றி என்ற நிலை எழுந்தது. அப்போது சேட்டன் சர்மா வீசிய கடைசிப் பந்தை எல்லைக் கோட்டின் மேலாக சிக்ஸராக அடித்து சரித்திரப் புகழ்வாய்ந்த வெற்றியை பாகிஸ்தானுக்கு பெற்றுக்கொடுத்தவர் இந்த மியன்டாட்.

இவர் 1975 இல் யாழ்ப்பாணத்துக்கும் வந்து கிரிக்கெட் விளையாடியிருக்கிருர்.

அந்த ஆண்டில் பாகிஸ்தான் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டி ஒன்று யாழ்ப்பாணம் வந்து யாழ் மாவட்டப் பாடசாலைகள் தெரிவுக் கோஷ்டியுடன் மோதியது.

அந்தப் பாகிஸ்தான் பாடசாலைக் கோஷ்டியின் கப்டனுக வந்தவர் மியன்டாட்.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடந்த அந்தப் போட்டியில் சிறப்பாக விளையாடி சதம் எடுத்து யாழ் ரசிகர்களின் பாராட்டுக்களைப் பெற்ற மியன்டாட்டை யாழ் கிரிக்கெட் ரசிகர்கள் மறந்து இருக்கமாட்டார்கள்.

டெஸ்ட் போட்டிகளில் உலகில் 7 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் அள்ளிக் குவித்த வீரர்கள் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

| துடுப்பாட்ட வீரர் | நாடு | ஓட்டங்கள் | டெஸ்ட் | சராசரி | சதம் |
|---|---|---|---|---|---|
| 1. சுனில் கவஸ்கர் — | இந்தியா | 10,122 | 125 | 51.12 | 34 |
| 2. ஜியோவ் போய்க்கொட் — | இங்கிலாந்து | 8,114 | 108 | 47.72 | 22 |
| 3. ஹரி சோபஸ் — | மேற்கு இந்தியா | 8,032 | 93 | 57.78 | 26 |
| 4. கொலின் கௌட்ரி — | இங்கிலாந்து | 7,624 | 114 | 44.06 | 22 |
| 5. அலன் போடர் — | ஆஸ்திரேலியா | 7,578 | 97 | 53.74 | 23 |
| 6. கிளைவ் லொயிட் — | மேற்கு இந்தியா | 7,515 | 110 | 46.67 | 19 |
| 7. விவியன் ரிச்சர்ட்ஸ் — | மேற்கு இந்தியா | 7,268 | 99 | 52.66 | 22 |
| 8. வால்டர் ஹமன்ட் — | இங்கிலாந்து | 7,249 | 85 | 58.45 | 22 |
| 9. கிரெக் சப்பல் — | ஆஸ்திரேலியா | 7,110 | 87 | 53.86 | 24 |
| 10. ஜாவிட் மியன்டாட் — | பாகிஸ்தான் | 7,009 | 95 | 55.19 | 19 |
| 11. டேவிட் [illegible] | இங்கிலாந்து | 7,000 | 100 | 44.03 | 14 |

# டாக்கா செல்லும் இலங்கை அணி!

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் மாத இறுதியில் ஆசிய கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

இதற்கான இலங்கை அணிக்கு ரஞ்சன் மடுகல்ல கப்டனுக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

உபகப்டன்: அர்ஜுன ரணதுங்க.

ஏனைய வீரர்கள் துலிப் மெண்டிஸ், ரோஷன் மகாநம, பிரென்டன் குருப்பு, அதுல சமரசேகரா, ஹசன் திலகரத்ன, ரவி ரத்னயக, கிரஹாம் லப்ரோய், ரஞ்சித் மதுருசிங்க, அரவிந்த டீ சில்வா, சி, ரமனுயக. கபிலா விஜயகுணவர்த்தன, டொன் அனுரகிரி

இங்கிலாந்து சென்ற இலங்கை அணியில் இருந்து 13 பேர் டாக்கா செல்கின்றனர்

கடந்த ஆண்டு ஆண்டு ஆசியக்கிண்ணப் போட்டிச் சாம்பியனுக இலங்கை வெற்றியீட்டியது.

உலக விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org